www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதிய பூமி
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
PUTHIYA POOMI

சுற்று 10 | ஜூன் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 58

# புலிகளின் நிலைப்பாடு

## நியாயமானதா?



புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்த விடுதலைப் புலிகள் இயக்கம் தற்காலிகமாக அதிலிருந்து விலகி இருப்பதாகத் தெரிவித்துக் கொண்டது. அத்துடன் அரசாங்கம் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்து வந்த யப்பானியத் தலைநகர் டோக்கியோவில் யூன் 9ம் 10ம் திகதிகளில் இடம்பெற உள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் புலிகள்



கலந்து கொள்வதில்லை என்றும் அறிவித்துக் கொண்டனர்.

மேற்படி முடிவினை எடுத்தமைக்கான காரணங்களைப் புலிகள் இயக்கம் விரிவான விளக்கங்களுடன் பிரதமருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளதுடன் ஊடகங்களுக்கும் தெளிவுபடுத்தினர். அதேவேளை வடக்கு கிழக்கின் புனர்வாழ்வு. புனரமைப்பு. மறுசீரமைப் பிற்கும் இயல்பு வாழ்வை ஏற்படுத்தவும் அர்த்தமுள்ளதும் அதிகாரம் கொண்டதுமான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்துள்ளனர். இதற்கு சாதக மான தும் நடைமுறைச் சாத்திய மானதுமான பதிலும் செயலும் கிடைக்கும் பட்சத்திலேயே டோக்கியோ மாநாட்டிலும் தொடரும் பேச்சு வார்த்தையிலும் கலந்து கொள்ள முடியும் எனப் புலிகள் தெரிவித்துக் கொண்டனர்.

புலிகள் இயக்கம் எடுத்துள்ள மேற்படி நிலைப்பாடு நியாயமானதா? என்னும் அரசியல் சர்ச்சை பல மட்டங்களிலும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. புலிகள் இயக்கத்தை எதிர்த்து வருபவர்கள்

### அரசாங்கத்தின் முடிவும் நகர்வும் சாதகமானதாக அமைய வேண்டும்

இந்நிலைப்பாடு பேச்சுவார்த்தையைக் குழப்பிக் கொள்வதற்கான புலிகளின் வழமையான வழிமுறைதான் என விமர்சனம் செய்கின்றனர். இத்தகையோரில் பல தரப்பினர் இருப்பினும் புலிகள் எதைச் செய்தாலும் எதிர்ப்பது இத்தகையோரின் நிலைப்பாடாகும்.

அதேவேளை புலிகள் ஆதரவு சக்திகள் தற்போது எடுத்துள்ள நிலைப்பாட்டை ஆதரித்து நிற்பவர்கள் வரலாற்று வழமை போன்று ஏமாந்து செல்ல முடியாது என நியாயங்கள் முன்வைக்கின்றனர்.

இவ்வேளை தேசிய இனப்பிரச்சினையின் சாராம்சத்தையும் அதன் காரணமான ஒடுக்குமுறையையும் கவனத்தில் வைத்து தமிழ். முஸ்லிம் மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் வரக்கூடிய சாதக பாதக அம்சங்களைக் கொண்டே மேற்படி நிலைப்பாடு பற்றிய சரியான முடிவுக்கு வரமுடியும்.

இன்றைய ஐ.தே.கட்சி தலைமையிலான அரசாங்கம் கடந்த பத்தொன்பது வருடகால பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தை நடாத்தி வந்ததில் அதிக பங்கு வகித்த அரசாங்கம் என்பதை எளிதில் மறந்து விட முடியாது. அது தவிர்க்க முடியாத நிர்ப்பந்த சூழலில் புரிந்துணர்வு யுத்த நிறுத்தத்திற்கு வந்ததே தவிர தனது பேரினவாத ஒடுக்குமுறை நிலைப்பாட்டைக் கைவிட்டு விடவில்லை என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும்.

அதேவேளை புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலித்து

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# வெள்ளம் மண்சரிவால் மக்கள் உயிர் உடமைகள் இழப்பு

## அரசியல் ஆதாயம் பெற தலைமைகள் முயற்சி

வெள்ளத்தினாலும் மண் சரிவினாலும் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். 300 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளன ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என்றே அஞ்சப்படுகிறது.

வெள்ளம். மண் சரிவு அனர்த்தங்களால் அகதிகளாக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள போதும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும். மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்ற பொறிமுறை இலங்கை அரசாங்கத்திடம் இல்லை என்பது துரதிஷ்டமானதே. சுதேசிகள் ஆட்சி பொறுப்பேற்று கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இனத்தின் பெயராலும். வர்க்கத்தின் பெயராலும் அரசியலின் பெயராலும் பாகுபாடு காட்டுவதற்கும். அழிவுகளை ஏற்படுத்தவும். கொலைகளைச் செய்யவும் நியாயங்களைக் கூறும் அரசுயந்திரமும். நிர்வாகப் பொறி முறையுமே எமது நாட்டில் கட்டி வளர்க்கப்பட்டுள்ளது. இயற்கை அனர்த்தங்களின் பாதிப்பைக் குறைக்கவும். பாதிப்பிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் எதுவித திட்டங்களுமில்லாமல் ஆட்சிகள் நடைபெற்று வந்துள்ளன.

அதனால் அண்மையில் ஏற்பட்ட வெள்ள. மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பொதுமக்களிடமிருந்தும். வெளி நாடுகளிடமிருந்தும் உதவிகளை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. உள்நாட்டில் பொதுமக்களிடமிருந்து நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட அரசியல் தலைவர்கள் அவர்களது சொந்தப் பொருட்களை விநியோகிப்பதாக விளம்பரங்களைச் செய்துள்ளனர். சில அமைச்சர்கள் நிவாரணப் பொருட்களடங்கிய பொதிகளில் அவர்களின் பெயர்களைப் பொறித்து விநியோகம் செய்துள்ளனர். அரசாங்கத்தின் பொருட்களையும் கூடத் தமது சொந்தப் பொருட்களெனக் கூறி விநியோகம் செய்துள்ளனர்.

அத்துடன் நிவாரணப் பொருட்களை வழங்குவதையும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதையும் பெரிதும் பிரசாரப்படுத்தி அரசியல் தலைவர்கள் அரசியல் ரீதியாக ஆதாயமடைய முற்பட்டுள்ளனர். நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதிலும் அரசியல் கட்சி ரீதியாக பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்று புகார்கள் செய்யப்பட்டுள்ளன. அரசியல் கட்சி ரீதியாக இயற்கை அனர்த்தங்கள் ஏற்படவில்லை. ஆனால் கட்சி அரசியலில் நாட்டைச் சீரழித்துள்ள தலைவர்கள் நிவாரணங்கள் வழங்குவதில் கட்சி ரீதியாக நடந்து கொண்டுள்ளனர். பிரதேச ரீதியாகவும் இன ரீதியாகவும் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.

இரட்னபுரி. காலி. மாத்தறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்பதால் அவர்கள் முற்றாகவே கைவிடப்பட்டுள்ளனர். மலையக அரசியல் தலைவர்களும் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பற்றி கவனஞ் செலுத்தவில்லை. அவர்களும் விளம்பரம் தேடிக்கொள்வதிலேயே அக்கறை காட்டினர். வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் அரசியல் பாகுபாடு வேண்டாம் என்று அமைச்சர்களை பிரதமர் எச்சரிக்கும் அளவிற்கு பாகுபாடு இடம் பெற்றுள்ளது.

தொடர்ச்சி 12ம் பக்கம்..

**அண்மையில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்களால் உயிர் உடமைகள் வீடுகள் என்பனவற்றை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் அனைத்து மக்களினதும் துயரில் புதிய பூமி பங்கொள்வதுடன் ஆழ்ந்த அனுபதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.**

**~ ஆசிரியர் குழு ~**

# மலையக மக்களை ஏமாற்றும்

## விளம்பர அரசியல் விளையாட்டு

அமைச்சர் சந்திரசேகரன் வன்னி செல்கிறார். புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். புலிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறார். அரசாங்கத்திற்கு புலிகளின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கவுள்ளார். திருகோண மலையில். மட்டக்களப்பில் புலிகளின் பிராந்தியத் தலைவர்களை மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்தித்து உரையாடினார். மேற்குறித்த தலைப்புகளில் தமிழ் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் அடிக்கடி செய்திகள் படங்களுடன் வந்த வண்ணம் இருக்கின்றன.

இந்தச் செய்திகளின் பின்னால் என்ன இருக்கிறது என்று பார்த்தால் நிச்சயம் பாராளுமன்ற அரசியல் பம்மாத்தும் ஏமாற்றுமே உள்ளது புலனாகும். பொய்யும் புளுகும் புனைவும் பாராளுமன்ற அரசியல் விளம்பரத்தின் உயிர் நாடிகளாகும். அதற்குப் பணம் செலவாகுவதைப் பற்றி அத்தகையவர்கள் அக்கறைப்படுவதில்லை. அமைச்சர் பதவியும் அதனையொட்டிய வாய்ப்பு. வசதிகளும் . அவர்களுக்கு வாய்ப்பானதாகும்.

புலிகள் இயக்கத்துடன் இணைத்துப் பிரசாரம் மேற்கொள்வதில் முன்பும் சரி இப்போதும் சரி படுலாபம் அடைந்தவர் சந்திரசேகரன் என்பது கடந்த காலத்தை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். புலிகள் இயகத்தின் கடந்த பத்தொன்பது வருடகாலப் போராட்டம் பற்றி மலையக மக்கள் மத்தியில் ஆதரவும் உற்சாகமும் இருப்பது இயல்பானது. காரணம் அவர்களும் பேரினவாத ஒடுக்குமுறைக் கரங்களால் ஒடுக்கப்பட்டு வருவதேயாகும். இதனை நன்கு அறிந்த சந்திரசேகரன் தான் புலிகள் இயக்கத்துடன் நெருக்கமானவர் என்றும் நம்பிக்கைக் குரியவர் என்றும் காட்டிக் கொள்வது அவரது வாக்கு வங்கிக்கு அவசியமானதாகும்.

ஆனால் மலையக மக்களின் விடிவுக்கு. விடுதலைக்கு இந்த பம்மாத்துக்காரரின் பாராளுமன்ற அரசியல் நடைமுறை எவ்வகையிலும் உதவப் போவதில்லை. ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்துடன் தன்னை நெருக்கமானவர் எனக் காட்டிக் கொள்ளும் அதேவேளை பேரினவாத ஒடுக்குமுறையை நடைமுறைப்படுத்தும் பேரினவாத பெரு முதலாளித்துவ ஆட்சியில் அமைச்சர் பதவி வகித்து சொத்து. சுகம் அனுபவித்து மலையக மக்களுக்கு "மகத்தான் சேவை புரிந்து வருகிறார். கொழும்புக்கு ஒரு முகம் வன்னிக்கு அடுத்த முகம் மலையக மக்களுக்கு மற்றொரு முகம் காட்டி நிற்கும் மும் முகச் சந்திரசேகரனும் அவரது அரசியல் பம்மாத்தும் உடனடியாக மக்கள் மத்தியில் கலைந்து விடாது என்பது இன்றைய யதார்த்தம்தான். ஏனெனில் மலையக மக்கள் மத்தியில் சமூக அரசியல் விழிப்புணர்வு ஏற்படக் கூடிய சூழ்நிலை இல்லை. காரணம்

தொடர்ச்சி 12ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# ஜனாதிபதியும் லொத்தர் சபை விவகாரமும்

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொடவின் கட்டுப்பாட்டிலிருந்து அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவரின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வருவதாகப் பிரகடப்படுத்தினார். பல படிச்சவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 44 (3)இன்படி ஜனாதிபதி எந்தவொரு அமைச்சரவை அமைச்சரிடமிருந்தும் எந்தவொரு விடயத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே ஜனாதிபதி சந்திரிகா அபிவிருத்தி லொத்தர் சபையை அவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது சட்டப்படி சரியானதா என்பது தேவையற்ற விவாதமாகும்.

ஆனால் அதனைப் பொறுப்பேற்பதற்காக சந்திரிகா கூறும் காரணங்கள் எந்தளவுக்கு உண்மையானவை என்பதும் வெளியே தெரிவிக்கப்படாத உண்மையான காரணங்கள் எவை என்பதுமே அறிந்து கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபையை அமைச்சர் மிலிந்த மொரகொட நோர்வே கம்பனியொன்றுக்கு விற்பதற்கு எடுத்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்காகவே அச்சபையைத் தான் பொறுப்பேற்றுக் கொண்டதாக சந்திரிகா கூறினார். அமைச்சர் மிலிந்த மொரகொட தனியார் மயத்திற்குப் பொறுப்பான அமைச்சராவார். அவர் காப்புறுதிக் கூட்டுத்தாபனம். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றைத் தனியாருக்கு விற்பனை செய்ததன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை கமிஷனாகப் பெற்றுக் கொண்டதாகக் குற்றஞ் சாட்டப் படுகிறார். அதைப் பற்றிச் சந்திரிகா அலட்டிக் கொண்டதாக இல்லை. லாபத்தில் இயங்கிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப் பட்டதை அவர் எதிர்க்கவில்லை. வங்கிகள் தனியார் மயமாக்கப்பட விருப்பதை எதிர்க்கவில்லை.

ஆகவே தனியார் மயமாக்கப் படுவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்றதாகச் சந்திரிகா கூறுவதில் உண்மை ஏதும் இருக்க முடியாது.

ஜனாதிபதியின் நிதியத்திற்கு அதன் வருமானங்கள். வங்கியில் வைப்பிலிடப் பட்டுள்ள பணத்திற்காகக் கிடைக்கும் வட்டி. அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து ஒதுக்கப்படும் பணம் என்பவற்றினூடாக நிதி கிடைக்கிறது. ஜனாதிபதியின் நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதை அரசாங்க கணக்காய்வாளரின் சரியான மேற்பார்வைக்கு உட்படுத்தப் படுவதில்லை. ஜனாதிபதியின் நிதியத்திற்கென தனிப்பட்ட கணக்காய்வாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் காட்டும் கணக்குகள் ஏற்கப்பட வேண்டிய நிலையே காணப்படுகிறது.

ஜனாதிபதி நிதியம் பாராளுமன்ற கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப் படவில்லை. அத்துடன் செலவிடப்படும் முறைகள் பற்றியும் ஜனாதிபதியைக் கேள்விக்குட்படுத்த முடியாது. அவருக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களின் காரணமாக அந்நிதி பிழையாகச் செலவிடப்பட்டிருந்தாலும் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் வருமானத்திலிருந்து வருடாந்தம் குறிப்பிட்ட தொகைப்பணம் ஜனாதிபதியின் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து ஒழுங்காக ஜனாதிபதி நிதியத்திற்குப் பணம் கிடைக்கவில்லை என்றும் அச்சபையில் நிதி மோசடி இடம் பெற்றுள்ளதாகவும் சந்திரிகா கூறுவதுடன் அச்சபை தனியார் மயமாக்கப்பட்டால் ஜனாதிபதி நிதியத்திற்கு வருமானம் கிடைக்காது போய்விடும் என்றும் கூறுகிறார். மேலும் சத்திரசிகிச்சை போன்றவற்றிற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து தற்போது இனாமாக பொது மக்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் நிதியுதவியைத் தொடர்ந்து கொடுக்க முடியாத நிலை ஏற்படுமென்றும் கூறுகிறார்.

எனவே ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்து அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுமன்றி ஜனாதிபதி என்ற நிறுவனத்தின் நிதியையும் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே சந்திரிகா செயற்பட்டுள்ளார் என்பதே உண்மை.

பொதுஜன ஐக்கிய முன்னணியோ. ஜனாதிபதி சந்திரிகாவோ தனியார் மயத்துக்கு எதிரல்ல: எனவே அபிவிருத்தி லொத்தர் சபையைத் தனியார் மயப்படுத்துவதை தடுப்பதற்காகவே சந்திரிகா அவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாகக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது. அச்சபையின் நிதியை கேள்விக்குட்படுத்த முடியாத ஜனாதிபதி நிதியத்திற்குள் கொண்டு வருவதே நோக்கமாகும். ஐ.தே.மு.யின் பாராளுமன்ற அரசாங்கம். ஐ.தே.மு. அமைச்சரவை என்பவற்றுக்கு அடங்கிப் போகாமல் ஜனாதிபதியின் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு நடத்துவதற்கான அதிகாரப் போட்டியின் இன்னொரு வெளிப்பாடே இதுவாகும்.

# தனியார் மயத்தால் கப்பல் தொழிற்த்துறை பாரிய நெருக்கடி

கொழும்புத் துறைமுகத்திற்கு வருடந்தோறும் 3.800 கப்பல்கள் வருகின்றன. முன்பு கப்பல்களுக்கு எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உப கம்பனியான லங்கா மறைன் சேர்விசஸ் வழங்கி வந்தது.

இப்போது லங்கா மறைன் சேர்விசஸ் தனியார் மயப்படுத்தப்பட்டு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டிடம் கையளிக்கப்பட்ட பின் குதப்படுத்தப் பட்ட எண்ணெயின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது.

தொன் ஒன்று சிங்கப்பூரில் 180 அமெரிக்க டொலராகவும். புஜயிராவில் 166-192 அமெரிக்க டொலராகவும் அதேவேளை கொழும்பில் 240 அமெரிக்க டொலராகவும் உள்ளது. இதனால் கப்பற் தொழிற்துறையினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இது தொடர்பாக பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

தனியார் மயப்படுத்தலின் குதப்படுத்தப் பட்ட எண்ணெயின் கொழும்பு விலை தொன் ஒன்றிற் க்கு 200 அமெரிக்க டொலராகவிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்பு காஸ் கொம்பனியை ஷெல் கம்பனிக்கும் லங்கா லுப்றிக்கன்ஸ் லிமிட்டட்டிற்கும் கையளித்த பின் எரிவாயுவின் விலைகள் பல மடங்கு அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

உலக வங்கியின் கட்டளைப்படி இலாபத்தில் இயங்கும் ஸ்தாபனங்களையும் தனியார் மயப்படுத்தி இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மிக்க வளங்கள் யாவும் படிப்படி யாக அன்னிய சக்திகளின் கைகளிற்குச் செல்கின்றன.

இவ்வாறு யாவும் தனியார் மயமாகும் போது நமது நாட்டில் எஞ்சி இருக்கப் போவது என்ன. பாராளுமன்றக் கட்டிடமும். அலரி மாளிகையும். ஜனாதிபதி மாளிகையும் மட்டும் தானா? அல்லது அவையும் தனியாரின் கைகளில் ஒப்படைக்கப்படுமா?

# யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க காணி பறி போகுமா?

யா.ஐ.வி.சங்கத்தின் தற்போதைய இயக்குநர்கள் கம்பனியின் பொதுக் கூட்டமொன்றை இந்தச் சமாதான சூழலிற் கூட கூட்டாமல் இருப்பதையிட்டு பண வைப்பாளர்கள். பங்காளர்கள். ஏனைய நலன் விரும்பிகள் தமது அதிருப்தியை தெரிவித்து வருகின்றனர். கம்பனியின் கூட்டத்தைக் கூட்டாமலே கம்பனியின் ஆஸ்பத்திரிச் சந்தியில் அமைந்துள்ள கோடி ரூபாய் பெறுமதி வாய்ந்த காணி. கட்டிடத்தை ஏதோ ஒரு வழியில் அபகரிக்க முயற்சி நடைபெறுவதற்காகத் தெரிய வருகிறது. அப்படியான சந்தர்ப்பத்தில் இலட்சக் கணக்கில் பணம் வைப்புச் செய்தவர்களும். பங்காளர்களும். நட்டஈட்டைப் பெறாத முன்னைய ஊழியரும் ஒரு சதமும் பெற முடியாது போய்விடும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு கம்பனிகள் சட்டத்தின் 131(1) விதிக்கமைய கூட்டத்தைக் கூட்ட நீதிமன்றத்தை நாட சில பண வைப்பாளர்களும் பங்காளரும் முயற்சிப்பதாக ஒரு பெயர் குறிப்பிட விரும்பாத நபர் எமக்குத் தெரிவித்துள்ளார்.

கம்பனிகள் சட்டத்தின் 128(1) விதிக்கமைய ஒரு அதிவிசேட பொதுக் கூட்டத்தைக் கூட்ட முடியுமென எமது நிருபர் சம்பந்தப்பட்ட நபரிடம் வினவியபோது ஒரு சிலர் அந்த முயற்சியிலும் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யா.ஐ.வி.சங்கத்தின் பொதுக் கூட்டத்தைக் கூட்டவிடாமல் சில பெரு முதலாளிகள் அழுத்தங் கொடுப்பதாகவே எமக்குத் தகவல்கள் வந்துள்ளன. எதுவித சிரமமுமின்றி "செல்வாக்கைப்" பிரயோகித்து பெறுமதி மிக்க நிலத்தை அபகரித்து தமது கொழுத்த வியாபார நடவடிக்கையை மேற்கொள்ள அவர்கள் முயன்று வருகின்றனர் என்றும் அந்தரங்கமாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. வடபுலம் இப்போது உள்நாட்டு வெளிநாட்டு பெரும் வர்த்தகர்களது கொள்ளை லாபப் பூமியாக மாற்றப்பட்டு வரும் சூழலில் மேற்குறிப்பிட்ட ஆஸ்பத்திரி வீதிச் சந்தியின் ஐக்கிய வியாபாரக் கூட்டுறவுச் சங்கக் காணியில் அதே கழுகுகள் கண் வைத்திருப்பதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

# நாலும் நடக்கும் நற்குணம் உலகிலே

## இந்துச் சுருட்டல்கள்

இரண்டாவது உலக இந்து மகாநாட்டையொட்டி சனாதன தர்ம சிந்தனைக்கான வாலிபர் சங்கம் வெளியிட்டுள்ள சிறப்பு மலரில் பேர் "இந்துச் சுடர்கள்" இதிலே 'இந்து' பிரமுகர்களது படங்களும் உள்ளன. முக்கியமான பல படங்கள் விடுபட்டது போகப் பல பேர்களும் படங்களும் பொருத்தாமலுள்ளன. அதுபோக. 'இந்து' மதத்தை நிராகரித்தும் பௌத்தத்தை தழுவிய அம்பேக்கார் உள்ளடக்கப்பட்டுள்ளார். சீக்கிய மதத்தைச் சேர்ந்த குரு கோவிந்த் சிங் கம்யூனிஸ்ட் பகத்சிங் கூட இருக்கிறார். நல்ல வேளை பெரியார் ஈ.வெ.ராமசாமியாரை விட்டு வைத்தார்கள். இந்து தர்மத்துக்கு இணங்க வணக்கத்துக்குரிய பெண்கள் சிலரது பேர் நூலின் கடைசியில் உள்ளது. அது போகக். கொழும்பு கறுவாக்காட்டுச் சீமாட்டிகள் சில போரது படங்கள் கடைசிப் பக்கத்தில் ஒரு விளக்கமும் இல்லாமல் வந்துள்ளன். இது ஏன். இந்து மாநாட்டில் ஆன்மீகம் ஓங்குகிறதோ இல்லையோ சிலபேரால் நாலு காசு சம்பாதிக்க முடிகிறது. போதாதா?

## அடிப்பியோ? எங்கப்பா மவனே, சிங்கம்டா சிங்கம்!

இது ஒரு பழைய திரைப்பட வசனம். ஒரு காலத்தில் மிகப் பிரபலமானது. ஒருவர் இன்னொருவரிடம் அடி வாங்கியபடி முதலில் வீரமாகவும் படிப்படியாக ஒடுங்கிப் போய் அழுதபடியும் சொல்கிற இந்த வசனம் வாய் வீரர்களைக் கேலி செய்வதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது பொதுசன முன்னணியில் இருக்கிற இடதுசாரிகள் பொதுசன முன்னணி ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைப்பது பற்றித் தெரிவித்து வந்த எதிர்ப்பின் தொடக்க கால வீறாப்புப் போய் இப்போது முனகலும் இல்லாமல் அடங்கிவிட்டதை நோக்கும் போது இந்த வசனம் மனதிற்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. எப்போது தேர்தல் கூட்டணி என்று ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் சேர்ந்து போனார்களோ. அப்போதே கெட்டது குடி. அதன் பின் தலைக்கு மேல் வெள்ளம் சாண் போனாலென்ன. முழம் போனாலென்ன என்ற கதைதான்.

## சுடலை ஞானியார்

டி.பி.சிவராம். தராகி என்ற பேர்களில் விடுதலைப் போர் தொடர்பாகவும் சர்வதேச நிலவரங்களுக்கும் விடுதலைப் போருக்குமுள்ள உறவு தொடர்பாகவும் நீண்டகாலமாக எழுதி வருகிறவர். அண்மைக்காலமாக. இந்தியாவை நம்பியதன் அனர்த்தம் பற்றியும் இந்திய நோக்கங்களை அப்போதே விளங்கிக் கொள்ளாததன் மூடத்தனம் பற்றியும் பல இடங்களில் எழுதி வருகிறார். இலங்கையில் அமெரிக்க நோக்கங்கள் பற்றியும் அவர் ஆதாரங்களுடன் எச்சரிக்கிறார். நோர்வேயை அமெரிக்கா பயன்படுத்துவதாகவும் அவர் சுட்டிக் காட்டுகிறார். என்றாலும் ஒரு காலத்தில் இந்த எழுத்தாளர் சம்பந்தப்பட்ட இயக்கம் உட்பட இயக்கங்கள் யாவும் இந்தியாவை நம்பிப் போன வேளையில் யார் அந்த அபாயம் பற்றி எச்சரித்தார்கள் என்பது பற்றி இவருக்கு என்றுமே குறிப்பிடத் தோன்றாது. இவருக்கு நோர்வேயை அமெரிக்கா பயன்படுத்தலாம் என்ற எண்ணம் தோன்று முன்னமே இந்தியா பற்றி எச்சரித்தவர்கள். அமெரிக்கா பற்றி எச்சரித்திருந்ததையும் அவர் என்றும் குறிப்பிடமாட்டார். ஏனெனில் அவர்கள் மாக்சிச-லெனினிச வாதிகளாக இருப்பதுதான். தமிழ் மக்கள் அமெரிக்கக் காய் நகர்த்தலுக்குப் பலியாகக் கூடாது என்று எச்சரிக்கிற சிவராம். அப்படிப் பலியாகாமல் இருப்பதற்குத் தமிழ் மக்கள் எந்த அரசியல் பாதையில் போக வேண்டும் என்று சொல்வாரா? நிச்சயம் சொல்லமாட்டார். ஏனென்றால் அது அவரது பிழைப்புக்குக் கேடல்லவா!

## வரி விலக்கு : கள்வர் எல்லார்க்கும் பெய்யும் மழை

1996-97ம் வரி ஆண்டுக்கு முற்பட்ட வரி அனைத்துக்கும் விலக்களிக்கவும் வரி நிலுவைகள் தொடர்பான வழக்குகளை மீளப் பெறவும் எடுக்கப்பட்ட அரசாங்கத்தின் முடிவால் அரசாங்கம் 5.600 கோடி ரூபா நட்டமடைகிறது. சென்ற ஆண்டு வரை வரி செலுத்தாமல் ஏமாற்றியவர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நியாயம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இடத்தில் ஒரு அதிகார சபையை நிறுவுவது என்றால் அது நம்ப ஏற்ற நியாயமல்ல. எப்போதுமே வரி விலக்குகள் பணக்காரர்களுக்கும் சுரண்டும் ஏமாற்றுக்காரர்கட்கும் வசதியாகவே வழங்கப்படுகின்றன. இந்த யோசனைக்குப் பின்னாலிருந்த மூளை முன்னர் யூஎன்.பி. ஆட்சியின் போது சனாதிபதி பிரேமதாசாவின் அடியாளாகச் செயற்பட்டு அவரது கொலையின் பின் தப்பி ஓடி இப்போது திரும்பி வந்துள்ள ஒருவர் எனப்படுகிறது. எம் முன்னுள்ள கேள்வி ஏதெனில். எந்த ஏமாற்றுக்காரர்கட்காக இந்த மன்னிப்புகளும் விலக்குகளும் வழங்கப்படுகின்றன என்பதுதான். எவருக்காகச் செய்யப்பட்டாலும். வேறு ஏமாற்றுக்காரர்களும் அதன் மூலம் நன்மை பெறுகிறார்கள் என்பதே உண்மை.

## தொலி ஜன்மமுல செய துடுகு (முற்பிறவிப் பாவம்!)

பேராசிரியர் சிவத்தம்பியின் நேர்காணல் ஒன்று ஒரு உள்ளூர்ச் சஞ்சிகையில் வெளிவந்திருந்தது. அதில் அவரை நேர்கண்டவர் அவரை மார்க்சிசவாதி என்றே அழைக்கவில்லை. ஒருவேளை இதுவும் அந்தச் சஞ்சிகைக்குப் பழக்கப்பட்டுப் போன மார்க்சிச விரோதமோ என்று யோசித்தேன். தொடர்ந்து வாசித்த போது. "எனது பெற்றார் செய்த புண்ணியம். எனது ஆசிரியர்களின் ஆசீர்வாதம் காரணமாக எனக்கு அந்தப் பெருமை கிடைத்தது" என்று புண்ணியவான் சொல்லியிருக்கிறார். இவரை மார்க்சிசவாதி என்று அறிமுகப்படுத்தாதற்கு நியாயம் இருக்கிறது என்று ஏற்கத்தான் வேண்டும்.

அதே நேர்காணலில் தனது 'சாதனைகள்' எல்லாம் பட்டியல் போடும் பேராசிரியருக்கும் கைலாசபதிக்கும் இருந்த வேறுபாடுகளில் கைலாசபதிக்கு என்றுமே தனது சாதனைகளைப் பற்றித் தானே பிறரிடம் சொல்ல வேண்டிய பரிதாப நிலை ஏற்படவில்லை என்பது உள்ளடங்கும்.

அதோடு 60கள் 70களை ஒட்டித் தான் நவீனத்துவம் பின் நவீனத்துவம் பற்றிப் பேச முற்பட்டதாகவும் சொல்கிறார். அவர் முதல் முதலாகப் பின் நவீனத்துவம் பற்றிக் கேள்விப்பட்டது எப்போது என்று உண்மையாகவே சொல்வாரா?

படிப்பகம்

www.padippakam.com



# புலிகள் இயக்கமும் நிவாரண நேசக் கரமும்

அண்மையில் தென்னிலங்கையின் ஆறு மாவட்டங்களில் பலத்த மழை காரணமாக வெள்ளம். மண் சரிவு அனர்த்தங்கள் இடம்பெற்று மக்கள் உயிர். உடமைகள் இழந்து நிர்க்கதிக்கு உள்ளாகினர். அம் மக்களுக்கான உதவிகள் பல பிரதேசங்களில் இருந்தும் உலக நாடுகளில் இருந்தும் வழங்கப்பட்டன. வடக்கிலிருந்து மக்கள் வழங்கிய உதவிப் பொருட்களையும் புலிகள் இயக்கம் பொறுப்பேற்று நேரடியாகக் கொண்டு சென்று பாதிக்கப்பட்ட சிங்கள. தமிழ் மக்களுக்கு வழங்கினர். இச் செயலானது தெற்கின் பேரின வாதிகளை வாயடைக்கச் செய்திருக்கிறது. உரிய நேரத்தில் புலிகள் உரியவாறு முடிவு செய்து தென்னிலங்கை மக்கள் மத்தியில் நேசக் கரத்தை நீட்டியிருக்கிறார்கள். இந் நடைமுறையானது தமிழ்ப் பாராளு மன்றத் தலைமைகள் பின்பற்றி வந்த சிங்கள மக்கள் விரோத நிலைப் பாட்டிற்கு மாறான தொன்றாகும். சிங்களப் பேரினவாத ஆளும வர்க்கத்திற்கும் சாதாரண சிங்கள மக்களுக்குமிடையிலான வேறு பாட்டை அடையாளம் காண்பது பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் மிக அவசியமான தாகும். அந்த வகையில் புலிகள் சிங்கள மக்கள் மத்தியில் நிவாரணப் பொருட்களுடன் நேரடியாகச் சென்றமை வரவேற்க வேண்டிதாகும். இதனை ஒரு தற்காலிக தந்திரோபாய மாகக் கொள்ளாது தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் நிரந்தர நேச சக்தியாக உழைக்கும் சிங்கள மக்களை அரவணைத்துச் செல்லும் மூலோபாயமாப் பின்பற்ற வேண்டிய தொன்றாகும். அதுவே பேரினவாதத் தையும் அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளையும் எதிர்த்து நிற்பதற்கான அடிப்படைப் பலமுமாகும்.

# பெயர் பறிப்பும் பெயர் பொறிப்பும்

சில மாதங்களுக்கு முன்பு யாழ் பொது நூலகத் திறப்பு விழா விடயத்தில் சர்ச்சை ஏற்பட்டு இறுதியில் அது நிறுத்தப்பட்டது. அதில் ஒரு முக்கிய உள்ளடக்கம் திறப்பு விழா நினைவுக் கல்லில் பெயர் பொறிக்கப்படுவதிலிருந்து செல்லன் கந்தையன் ஆனந்தசங்கரி ஆகியோரின் பெயர்கள் இருக்கக் கூடாது என்பதாகும். அரசியலும் சாதியும் அங்கே தமது விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டன. ஆனால் குடாநாட்டில் பல இடங்களில் மின்சார ரான்ஸ்போமர்களின் கீழே சிங்களம். தமிழில் அமைச்சர் கருஜயசூரியா. அமைச்சர் மகேஸ்வரன் போன்றோரது பெயர்கள் பொறிக்கப்பட்ட திறப்பு விழா நினைவு கற்கள் துலக்கமாக இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. அவை நமக்கு எதைக் காட்டுகின்றன. ஆதிக்க அரசியலின் நடைமுறையைத் தான். வாழ்க தமிழர் ஆதிக்க அரசியல்.

# இந்து மாநாடும் அரசியல் வியாபாரமும்

அண்மையில் கொழும்பில் இரண்டாவது உலக இந்து மாநாடு என்ற பெயரில் கொழும்பு வாழ் மேட்டுக் குடியினர் கலந்து கொண்ட இரண்டு நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக நடாத்தப்பட்டது. இந்து. சைவம் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு அம் மாநாட்டில் பேசிய பல பெரு மனிதருக்குப் புரிந்திருக்க வில்லை. இந்த இந்து மாநாட்டின் சராம்சமே ஆளும் வர்க்க அரசியலும் அதன் பின்னால் உள்ள பலவகை வியாபாரங்களும் தான். முன்பு ஜே.ஆர். காலத்தில் தமிழர் கூட்டணியில் இருந்து யூஎன்.பிக்குத் தாவிக் கொண்ட செ.இராசதுரை இந்து அமைச்சராகி முதலாவது மாநாட்டை இதே கொழும்பில் நடாத்தி தன்னைப் பாதுகாத்துக் கொண்டார். இப்போது ஜே.ஆரின் வாரிசான ரணில் அரசாங்கத்தில் இந்து அமைச்சராகியுள்ள மகேஸ்வரன் இரண்டாவது மாநாட்டை நடாத்தி இந்து மதத்தை இலங்கையில் பாதுகாக்கும் அவதார புருஷராகி தனக்குத் தானே பச்சை முடி தரித்து சாத்துப்படி சாத்தி காலி முகத்திடலிலே காட்சி கொடுத்திருக்கிறார். அண்மையில் தனக்கும் பிரதமர் ரணிலுக்கும் ஏதோ கருத்து முரண்பாடு எனத் தமிழ் மக்களுக்குக் காட்டி சலசலப்புச் செய்த மகேஸ்வரன் ரணிலைப் பிரதம விருந்தினராக அழைத்து விபூதி. சந்தனம் இட்டு பொன்னாடைகள் போர்த்தி மனம் குளிர வைத்திருக்கிறார். எந்தத் திசையில் எந்தக் காற்றுக்குப் பட்டத்தைப் பறக்க விட்டால் மேலே மேலே ஏற முடியும் என்பதை அமைச்சர் மகேஸ்வரன் நன்கு அறிந்தவர். பிழைக்கத் தெரிந்த இவர்தான் முன்பு டக்ளசைத் துரோகி எனக் கூறிப் பின் அவரது கதிரையைப் பிடித்துக் கொண்ட புண்ணியவான் என்பதை இந்து மக்கள் மட்டுமன்றி சகல தமிழ் மக்களும் நன்கு அறிவார்கள்.

# பேரினவாத ஒடுக்குமுறையை மட்டுமன்றி ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

நாட்டின் அரசியல் நெருக்கடிகள் புதிய கட்டத்தை அடைந்துள்ள அதேவேளை பொருளாதாரத் திட்ட நடைமுறை களின் எதிர் விளைவுகள் உழைக்கும் மக்களை அமுக்கத் தொடங்கியுள்ள ஒரு தருணத்திலேயே இவ்வாண்டு மே தினத்தை நினைவு கூர்கின்றோம். பேரினவாத ஒடுக்குமுறையின் அடிப் படைகள் இன்னும் வலிமையுடைன வாகவே இருந்து வருகின்றன. அது இன்றும் பிரதான நிலையிலேயே காணப்படுகின்றன. புலிகள் இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதனால் பேரினவாதத்தின் மமதையும் ஒடுக்குமுறையும் அற்றுப் போய்விடவில்லை. பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் பல்வேறு வித நிர்ப்பந்த சூழலிலேயே முன் வந்தது. ஆறு தடவைகள் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற போதிலும் உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை. அதன் காரணமாகப் புலிகள் இயக்கம் அதிருப்தியடைந்து 'தற்காலிகமாக பேச்சுவார்த்தையி லிருந்து விலகி நிற்கும் முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டது. அவர்களது பக்கத்தில் இருக்கும் காரணங்கள் நியாயமான வைகளாகும். இத்தகைய நிலையைக் கடந்து பேச்சுவார்த்தை தொடரப்படுவதற்கு அரசாங்கம் ஆக்க பூர்வமான நடைமுறைகளை முன்னெ டுக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேச வேண்டும். தீர்வு ஒன்றைச் சாத்தியமாக்குவதற்கு முன் வரல் வேண்டும். அதனைத் தொடாது வெறுமனே பேச்சு வார்த்தையை நாட்டுக்கு நாடு எடுத்துச் சென்று பேசுகின்றோம் என்று கூறிக் காலத்தைக் கடத்துவதால் பேச்சு வார்த்தையைக் குழப்பும் உள்நாட்டு-வெளிநாட்டு சக்திகளுக்கு வாய்ப்பு அளிப்பதாகவே அமைந்துவிடும். ஆதலால் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு காணப்படுவதற்கு கடுமையான முன் முயற்சிகள் இப் பேச்சுவார்த்தையூடாக முன்னெடுக்கப் படுவதை அனைத்து மக்களும் வற்புறுத்தி வெகுஜன இயக்கமாக முன்னெடுக்க வேண்டும்.

## யாழ்-மே தினக் கூட்டத்தில் தோழர் செந்தில்

இவ்வாறு யாழ்ப்பாண நகரில் நடைபெற்ற புதிய-ஜனநாயகக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல் கூறினார். தோழர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தோழர் செந்தில் தொடர்ந்தும் உரையாற்றுகையில். இன்று அரசியல் பற்றிப் பேசுவதற்கும் அதன் சரி-பிழை பற்றிப் விவாதிப்பதற்கும் மக்கள் அஞ்சி ஒதுங்கி விடும் நிலையே காணப்படுகிறது. இதற்குக் காரணம் கடந்த 19 வருடகால கொடிய யுத்த சூழலும் அதன் பாரிய விளைவுகளாகும். அத்துடன் இன்று வேகமாகி வரும் உலகமயமாதலின் தீய நடைமுறைகளும் ஒரு காரணமாகும். இன்று அரசியலைப் பற்றிப் பேசுவதாயின் புலிகள் இயக்க ஆதரவு அல்லது புலிகள் இயக்க எதிர்ப்பு என்ற நிலை நின்று பேசுவதையே நடைமுறையாக்கிக் கொள்ளப்படுகிறது. எம்மைப் பொறுத்த வரை புலி ஆதரவோ அன்றி எதிர்ப்போ என்பதல்ல பிரச்சினை. இந்நாட்டின் உழைக்கும் மக்களின். ஒடுக்கப்படும் மக்களின். உரிமைகள் மறுக்கப்படும் மக்களின் பக்கம் நின்று அவர்களது விடுதலைக்கும் விமோசனத்திற்குமான அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதே எமது நிலைப்பாடாகும். அதுவே இன. மத. மொழி. பிரதேச வேறுபாடற்ற மாக்சிச-லெனினிச

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# நல்ல தலைவர்கள்... போங்கள்.

## எம். எஸ். செல்லச்சாமி

*'மலையக மக்களின் சரியான தலைமை இ.தொ.கா. ஆகும். மலையக மக்களுடைய பிரச்சினைகள் பற்றி வெளிநாடுகளில் நடைபெறும் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில் பேச வேண்டியதில்லை. வடக்கு-கிழக்கு மக்களுக்கான போராட்டத்தின் அறுவடையில் நாம் பங்கு கேட்கக் கூடாது. மலையக மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேறு அணுகுமுறைகள் அவசியம்'.*

இ.தொ.கா.விற்கு எதிராக பல வழக்குகளைத் தொடுத்து கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வாதாடி வந்ததையும். இ.தொ.கா.விற்கு எதிராக வெளிப்படையாக அரசியல் செய்ததையும் சாமி மறந்துவிட்டாரா அல்லது எல்லோரையும் மறக்கும்படி கேட்கிறாரா? மலையக மக்களுடைய பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு முடியாமல் தொடை நடுங்கினால் விலகி நிற்பது நல்லது. அதற்காக 'வேதாந்தமெல்லாம்' பேசத் தேவை இல்லை. மலையக மக்களின் உரிமைக்காகப் போராட்டங்களே நடைபெறவில்லை என்று கூறுகிறாரா? அவரைப் போன்ற தலைவர்கள் பேரினவாதிகளிடம் கூடிக் குலாவ முடியும். சாதாரண் மலையக மக்களுக்கு பேரினவாதிகளிடமிருந்து விடுதலை தேவை. அவர்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வகையிலே அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும்.

## டி. அய்யாத்துரை

*'சிவனு லெட்சுமணனின் தியாகம் மிகவும் உயர்வானது. அத் தியாகம் மதிக்கப்பட வேண்டும். அவனைப் போன்று பல தியாகிகள் உருவாக வேண்டும்'.*

சிவனு லெட்சுமணனின் தியாகத்தில் 7 ஆயிரம் ஏக்கர் தேயிலைக் காணி பாதுகாக்கப்பட்டது. மேல்கொத்மலைத் திட்டத்திற்கு ம.ம.மு. தலைமை பச்சைக் கொடி காட்டி அரசுக்குத் துணை போகிறது. அதனால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் நீரில் மூழ்கடிக்கப்படவுள்ளது.

அத்தகைய பாதிப்புக்குத் துணை போகும் ம.ம.மு. தலைமையை ஏற்றுக் கொண்டு அதில் இணைந்துள்ள டி. அய்யாத்துரையால் சிவனு லெட்சுமணன் போன்று பல தியாகிகள் உருவாக வேண்டும் என எப்படிக் கூற முடிகிறது?

## எஸ். சதாசிவம்

*'மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் யாவும் கிடைக்கும் வரை நாம் மே தினத்தைக் கொண்டாடப் போவதில்லை'.*

இம்முறை மே தினத்தை நுவரெலியா மாநகரசபை மண்டபத்தில் நடாத்த இ.ஐ.தொழிலாளர் முன்னணி தீர்மானித்திருந்தது. அங்கு நடத்த அனுமதி கிடைக்கவில்லை. இராகலை நகரில் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுவும் சரி வரவில்லை. மே தினக் கூட்டத்திற்கான ஆட்களை அணி திரட்டுவதும் சிரமமாகவிருந்தது. இந்த நிலைமையில்தான் இ.ஐ.தொ.மு. மே தினக் கொண்டாட்டம் கைவிடப்பட்டதாக அறிகிறோம். ஆனால் சதாசிவத்தின் கூற்றோ... மிகவும் தீவிரமானதாக இருக்கிறது. முன்பு யூஎன்.பி. பா.உ இப்போது பீ.ஏயில் எம்.பி. இப்படித்தான் பேச வேண்டும்.

## மு. சிவலிங்கம்

*'தொழிற்சங்கத் தலைவர்கள் அரசியல்வாதிகளாக மாறியதால் தொழிலாளர் உரிமைகளை விட்டுக் கொடுத்து விட்டனர். மலையக அமைப்புகள் இரண்டு பெரிய தேசிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாலும் உரிமைகளைப் பெற முடியாது போய்விட்டது. மலையக அமைப்புகள் தேசிய கட்சிகளுடன் கூட்டுச் சேராமல் தனித்துவமாகச் செயற்பட வேண்டும்'.*

இதனை யாருக்காக கூறியுள்ளார்? இந்தச் செயலாளர் நாயகம். அண்ணாந்து நின்று துப்பினால் அது துப்பியவரின் முகத்திற்கே வந்து விழும் என்பதை இவர் அறிவாரா?

- மலை அன்பன் -



யாழ் நகரில் புதிய-ஜனநாயக கட்சி நடாத்திய புரட்சிகர மேதினக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர் சோ.தேவராஜா. இளைஞர் இயக்க முன்னனிப் பிரதிநிதி பொ.முருகேசு ஆகியோர் உறையாற்றுவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

www.padippakam.com



# மறக்கப்பட முடியாத மலையகத்தின் தியாகி

# சிவனு லெட்சுமணன்

90களின் நடுப்பகுதி வரைஅதிகமாக பேசப்பட்ட சிவனு லெட்சுமணனின் தியாகம் பற்றி மீண்டும் பேசப்படுகிறது. தோட்டக் காணியில் திட்டமிட்ட பேரினவாத குடியேற்றங்களை நடத்துவதற்குய எதிராக 1977ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற போராட்டம் பற்றியும் சிவனு லெட்சுமணனின் தியாகம் பற்றியும் அறிவதிலும் நினைவு கூர்வதிலும் மலையக இளைஞர்கள் அதிகம் அக்கறை காட்டி வருகின்றனர்.

பெருந் தோட்டப் பொருளாதாரம் இன்று பல்வேறு வழிகளில் சீரழிக்கப் பட்டு வருகிறது. தனியார் கம்பெனிகளின் நிர்வாகத்தின் கீழ் தொழிலாளர்கள் பலவிதமான உரிமை களையும் இழந்து வருகின்றனர். அக் கம்பெனிகள் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படுவ தாலும் தொழிலாளர்கள் பலவிதமான நெருக்குதல்களுக்கு ஆளாவதுடன். பெருந் தோட்டப் பொருளாதாரமும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. பெருந் தோட்டங்களில் புதியவர்களை தொழி லாளர்களாகச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் இல்லாம லாக்கப்பட்டுள்ளது. வேறு விதமான தொழில் வாய்ப்பு களும் மறுக்கப்பட்டுள்ளன.

பெருந் தோட்டத் தொழிலாளர்கள் மீது மலையகத் தமிழ் மக்கள் மீது இருக்கும் இன ஒடுக்கல்களினால் மிகவும் நேரடியாக பாதிக்கப்படுபவர் கள் இளைய சமூகத்தின ரேயாவர்.

இவ்வாறான சூழ்நிலையில் மலைய கத்தின் இளைய சமூகத்தினர் அமை தியிழந்திருக்கின்றனர். அவசரமான முடிவுகளையும். தீர்வு களையும் எதிர்பார்த்த நிலையில் இளைஞர்கள் மலையகத்தின் தலைமைகளை நம்பி ஏமாந்திருக் கின்றனர்.

எனவே மலையகத்தில் நடைபெற்ற போராட்டங்களையும். போராட்டங் களில் உயிர் நீத்த தியாகிகளையும் நினைவு கூர்ந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதில் இளைய சமூகத்தினர் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.

சிவனு லெட்சுமணனின் தியாகத்தை மறந்து போன "மலையகத் தலைவர் கள்" மீது கேள்விகளைத் தொடுத்து வருகின்றனர். இதனால் தவிர்க்க முடியாத நிலையில் 'மலையகத் தலைவர்கள்' சிவனு லெட்சுமணன் பற்றி தத்துவங்களைப் பேசுகின்றனர். புதிய-ஜனநாயகக் கட்சியும். அதன் நேச அணிகளும் சிவனு லெட்சு மணனின் தியாகம் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதில் முக்கிய பங்காற்றி வருகின்றனர். நினைவஞ்சலிக் கூட்டங்களையும். கருத்தரங்கு களையும் நடத்துவதுடன். கலை இலக்கிய நிகழ்ச்சிகளையும் விளை யாட்டுப் போட்டிகளையும் நடத்தி வருகின்றன.

**ம. அழகேசன்**

1977ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் 7 ஆயிரம் ஏக்கர் தேயிலைத் தோட்டக் காணியை சுவீகரித்தது. அதில் திட்டமிட்ட பேரினவாதக் குடியேற்றங்களை ஏற்படுத்த முற்பட்டது. அந்நடவடிக் கையைத் தடுத்து நிறுத்த வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. டெவன் தோட்டநில அளவையில் ஈடுபட்டிருந்த அரசாங்க நில அளவையாளர்களைத் தடுத்து நிறுத்தும் போராட்டத்தில் யொக்ஸ் போர்ட் தோட்ட இளைஞர்களும் கலந்து கொண்டனர். அப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைக்கும் நடவடிக்கையில் டிம்புல்ல பொலீசார் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை பொலீசாரினால் யொக்ஸ் போர்ட் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான் அவன்தான் சிவனு லெட்சுமணன்.

அச்சம்பவத்தை அடுத்து முழு மலையகமும் அமைதி இழந்து மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங் களைச் செய்தனர். பாடசாலை மாணவர்களும் கண்டன ஊர்வலங் களை நடத்தினர். அரசாங்கம் காணி சுவீகரிப்பைக் கைவிட்டது. அக்காணி சுவீகரிப்பட்டிருந்தால் சில பெருந் தோட்டங்கள் மூடப்பட்டு தொழிலாளர் கள் வீதிகளில் விடப்பட்டிருப் பார்கள்.அதனால் நுவரெலியா மாவட்டத்திலும் மலையகத் தமிழ் மக்களின் குடிப்பரம்பல் பாதிக்கப் பட்டிருக்கும். பேரினவாத குடியேற்றத் தால் மலையகத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு மேலும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும்.

சுதந்திரக் கட்சியின் அநுரபண்டார நாயக்க 1997இல் வெற்றிபெறுவதை நோக்காகக் கொண்டும். பேரினவாத நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்தும் விதத்திலும் அக்குடியேற்றம் மேற் கொள்ளப்படவிருந்தது.

அதனை எதிர்த்துப் போராட்டத் தையும். சிவனு லெட்சுமணனின் தியாகத்தையும் இ.தொ.கா.வும் ஐ.தே.க.வும் 1977இல் தேர்தலில் வெற்றிபெற சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டது. வென்ற பிறகு ஐ.தே.கட்சி மலையத் தோட்டங்களில் பல திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்தது. இ.தொ.கா. பார்த்துக் கொண்டு சும்மா இருந்தது.

மேல்கொத்மலைத் திட்டம் அமுல் செய்யப்பட்டால் ஆயிரக்கணக்கான வளமான. தேயிலை நிலம் நீரில் மூழ் கடிக்கப்படும். அதற்கு ம.ம.மு. முழுமை யான ஆதரவைக் கொடுக்கிறது.

எனவே 1977 மே மாதப் போராட்டத் தையும். சிவனு லெட்சுமணனின் தியாகத்தையும் நினைவு கூர்ந்து. புதிய அரசியல் பாதையில் அணி திரள் வது அவசியம் என்பதை இன்றைய மலையக இளம் தலை முறையினர் விளங்கிக் கொண்டுள்ளனர்.

# புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதை மட்டுமே மலையகத் தொழிலாளர்களுக்கு விடிவு தரும்

"உறங்கிக் கொண்டிருப்பதாக கொள்ளப்படுகின்ற மலையகம் விழித்தெழுகின்ற போது அதன் ஆத்மாவான புதிய-ஜனநாயகக் கட்சியின் பலம் தெரிய வரும். எமது கட்சி பாரம்பரிய தொழிற்சங்கப் பாதையிலோ. சந்தர்ப்பவாத பாராளுமன்றப் பாதையிலோ அன்றி புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையிலேயே பயணம் செய்கிறது. அப்பாதை பலமடைந்து புத்தெழுச்சி பெறுகின்றபோது பெருந்தோட்டத் தொழிலாளர்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் போராட்டப் பலம் தெரிய வரும். அப்போதுதான் மலையகத்தின் ஆத்மாவான புதிய-ஜனநாயகக் கட்சியின் பலமும் தெரிய வரும்" என்று புதிய-ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா அட்டன் கிறிஸ் தவ தொழிலாளர் ஒத்துழைப்பு மண்ட பத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத் தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

## அட்டன் மேதினக் கூட்டத்தில் தோழர் தம்பையா

புரட்சிகரப் பாடல்கள் இசைக்கப்பட்டு புரட்சிகரமாக நடத்தப்பட்ட மேற்படி கூட்டத்தை தோழர் எம். நாகராஜன் நெறிப்படுத்தினார்.

அக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய தோழர் தம்பையா குறிப்பிட்டதாவது.

1978ம் ஆண்டு 402 ஆசிரியர் நியமனங்களை பெறுவதற்கான போராட்டம் தொடக்கம் பிந்தனுவெவ கொலைகளுக்கு எதிரான போராட்டம் உட்பட மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எதிரான போராட்டம் வரை மக்களின் எதிர்ப்பியக்கங்களை பலவற்றை நடத்துவதிலும். பங்கெடுப்பதிலும் புதிய-ஜனநாயகக் கட்சி அதனுடைய பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. எதிர்ப்பியக்கங்களின் வளர்ச்சியிலும் தொடர்ச்சியிலும் தொழிலாளர் வர்க்கப் புரட்சி வெற்றி யடைவதுடன் சோஷலிஸம் ஜனன மாகும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் புதிய-ஜனநாயகக் கட்சித் தோழர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களுக்கான. மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப் பதற்கான போராட்டக் கருத்தியலை விதைப்பதிலும். பிரசாரங்களை முன்னெடுப்பதிலும் நாம் முன்நின்று உழைத்துள்ளோம்.

தொடர்ச்சி 10ம் பக்கம்




அட்டனில் நடைபெற்ற புதிய-ஜனநாயக கட்சியின் மேதினக் கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா உறையாற்றுவதையும் அருகில் தோழர் இராஜேந்திரன் அமர்ந்திருப்பதையும் கூட்டத்தில் பங்குபற்றியோரையும் படத்தில் காணலாம்.

# மலையகமும் மே தினமும்

மலையகத்தின் பெரும் அமைப்புக்கள் எனக் கூறிக்கொள்ளும் இ.தொ.கா வும். ம.ம.மு.யும் அவற்றின் பலத்தை எடுத்துக் காட்டுவதற்காக மே தினக் கூட்டங்களை பயன்படுத்த முயற்சித்தன. அவை இரண்டும் எதிர்பார்த்த அளவிற்கு அவற்றின் கூட்டங்களுக்கு மக்களை அணி திரட்ட முடியவில்லை. அக்கூட்டங் களில் இளைஞர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்பட்டது.

இது இப்படி இருக்க மலையக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக சம்பளப் பிரச்சினை. வீட்டுப் பிரச்சினை. சுயநிரண்ய உரிமை போன்ற பலத்த சவால்களை எதிர் நோக்கிய மக்களின் வாக்குரிமையின் மூலமே இரண்டு அமைச்சர்களும் பிரதி அமைச்சர் களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்று ஜம்பவான் களாக வலம் வந்து கொண்டிருக் கிறார்கள். இவர்களது பாணியில் இவர் களுக்கு ஏற்றவாறு மக்களை ஆட்டிப் படைக் கும் சர்வாதிகாரப் போக்கு மேலோங்கு கின்றதை நாம் அவதானிக்கலாம்.

அதே போல இலங்கை தொழிலாளர் காங்கிரஸை எடுத்துக் கொண்டால் அரை நூற்றாண்டுகளுக்கு மேல் மேதின விழாவை களியாட்டமாக இன்றுவரை கொண்டாடி வருகின்றார்கள். அதாவது மக்களிடம் சந்தா வாங்குவதும். இந்தியாவில் இருந்து பாடகர்களை வரவழைத்தும் இன்னிசை நிகழ்ச்சிகளை நடாத்தியும் மேதின விழாவிற்கு மக்களே தங்களின் சொந்த செலவில் செல்வதும் வழமையாகி விட்டன. ஆனால் இம்முறை நுவரெலியாவில் நடைபெற்ற மேதின விழாவில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தன்னுடைய உரையில் மாடி வீடு கட்டுவதற்கு ஆர்வம் காட்டுவதையே முக்கிய கருப்பொருளாக கொண் டுள்ளார். ஆனால் மாடி வீட்டில் மரணம் நிகழ்ந்தால் எங்கு இறுதி கிரிகைகள் செய்வது என்று கேட்டதிற்கு "மாடி வீட்டில் ஒருவர் இறக்கட்டும் அப்போது பதில் கூறுகின்றேன்" என்று திமிருடன் கூறினார்.

இந்த மாடி வீடுகளும் நீண்டகால கடன் அடிப்படையில் தான் தொழி லாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. அதுவும் மூன்று லட்ச ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் எவ்வாறு இதனை செலுத்துவது. இவர்களின் மாத சம்பளமோ ஆகக்கூடியது இரண்டாயிரம் ரூபாய் மட்டுமே. அதற்கு இவர்கள் தற்பொழுது வசிக்கும் வீட்டில் இருப்பதுவே மேல். ஆனால் பெருந்தோட்ட வீடமைப்பு அமைச்சர் தனது சுயலாபத்திற்காக மலையக மக்களை படுகுழி யில் தள்ளுவது எந்த வகையில் நியாயமான தாகும்.

அடுத்த பக்கம் அட்டனில் நடைபெற்ற மேதின விழாவில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான சந்திரசேகரன் அவருக்கு சளைத்தவரல்ல என் பதை நிரூபிக்க தன்னுடைய மேதின உரையை எவ்வித கருத்துகளுமின்றி நிகழ்த்தி யுள்ளார். இவர்களின் கட்சி அங்கத்தவர்க ளுக்கு தோட்ட நிர்வாகத்திட மிருந்து ரூபா. 250/-ஐ வழங்கும்படி கூறியுள்ளார். அதுவும் அவர்களின் சம்பளப் பணத்திலேயே கழிக்கப்படு கின்றது.

தலைவனும் நானே. தரகனும் நானே. உன்னை அடக்கி வைப்பவனும் நானே. காட்டிக் கொடுப்பவனும் நானே. பல முக்கிய நிகழ்வுகளில் உனக்காக ஒப்பாரி வைப்பவன் போல் நடிக்கும் மகா கலைஞரும் நானே என்றிருந்தவர்கள் மேதினத்திலன்று விஸ்பரூபம் எடுத்து விடுவதுடன் தன் அடிவருடி புகழ் துதிக்கும் இனவாத சக்திகளையும் மேடையேற்றி பூமாலை. பொற்கிழி என காட்சி படுத்துவதை காண மனம் வேகுதையா? விரக்தி தான் கொள்ளாதா? மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்து போன தொழிலாளர்கள் வண்ண வண்ண கட்சிக் கொடியினைத் தாங்கி கூட்டம். கூட்டமாக கூடி நிற்பது அவர்கள் ஆளுக்கு இத்தனை தலை என ஊடகங்களுக்கு காட்டத்தானா?

ஆம் டெவன் மண்ணில் உறங்கும் சிவனுவின் உடலும் கொத்மலைத் திட்டத்துடன் மூழ்கிப் போகுமா. கீழ் கொத்மலைத் திட்டத்துடன் குடி யெழும்பி திக்கெட்டும் சிதைந்தவர்கள் போல் மேல் கொத்மலைத் திட்டத் துடன் மலை நிலத்தின் ஆணிவேர் ஆட்டங்கண்டு சிதலம் அடையலாம். இதுபற்றி இவர்களுக்கு எவ்வித கவலையும் இல்லை. எவர்குடி எப்படிக் கெட்டாலும் பரவாயில்லை லெப்பைக்கு நாலு பணம் போல் விழாவினையும். களியாட்டங் களையும் மக்களின் பணத்திலேயே செய்து வருகின்றனர். கேள்வி கேட்க யாருமில்லை என்ற ஒரு ஆணவப் போக்கும் காணப்படு கின்றது.

இப்படியான சூழ்நிலையிலும் புதிய ஜனநாயகக் கட்சி பலத்த சவால்க ளுக்கு மத்தியில் அட்டனில் தனது மேதினத்தை வெற்றிகமாக நடாத்தியது. உலக தொழிலாளர்களே ஒன்று சேருவோம் என்ற தொனிப் பொருளை மையமாக வைத்து பேரின வாதத்தை எதிர்த்தும். அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களை எதிர்த்தும். தொழிலாளர்கள். வவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளை வற்புறுத்தியும் இம் மேதினம் இடம் பெற்றது. நாட்டின் பிரதான பிரச்சினைகள் பற்றியும் மலையக மக்கள் எதிர் நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும் அவற்றை வென்றெடுக்கும் மார்க்கம் பற்றியும் மேதின உரைகள் அமைந்திருக் கின்றன.

**- செ. விஜி -**

# பணிதல் மறுப்பார் எழுவார்!

**இராகலை பன்னீர்**

*லட்சுமணா உன் மீது சத்தியம் - நாம்*
*நின் வழி வருவோ மினி நிச்சயம்*
*மலை மகனே உன் சொல் கேட்டோம்*
*மலை நாடு விழித்திட பணி யேற்றோம்*

*தலைவ ரென சிலர் இங்கு வந்தார் - அவர்*
*தமக்கு நிகரிலை யென மொழிந்தார்*
*விலை யிலா நீ வீழ்ந்த டெவன்*
*விளை நிலம் விற்றும் பொருள் பெற்றார்*

*பணிதல் மறுத்துயிர் துறந்தவன் நீ - இவர்*
*பணி கண்டும் பார்க்க மறந்தாயா*
*துணி விலார் இவர்க்கு பதவியோ சொல்?*
*தூய்மை யிலா ரிவர் தலைவரோ சொல்?*

*மந்திரி சுகத்தால் லட்சுமணா - இவர்*
*மக்கள் துய ரெலாம் மறந்து நின்றார்*
*தந்திரத்தா லிவர் வந்தவர் இலையோ?*
*தன் கடமை யெலாம் துறந்து நின்றார்*

*மேடையிலே தினம் ஆயிரம் பொய்கள்*
*மொழிவார் அதை நீ கண்டாயா?*
*நடையிலே ஓடும் நளினமும் எழிலும்*
*நமதிலை என மனங் கொண்டாயா?*

*கல்லறை இல்லா கலங்கரையோ - பொறு*
*காலம் வருகுது நீயும் நில்*
*சிறுமை மனிதரின் செய்கை மறுத்து*
*சீறி எழுவார் நீயே சொல்*

*மக்களின் பிள்ளைகள் மண்ணில் உண்டு*
*மலைகளிலும் உண்டு அறிவாய் நீ*
*தன் நலம் பாரார் தாழ்ந்திட மாட்டார்*
*தரணி குலுங்கிட அவரெழுவார்*

*தத்தோம் தத்தோம் தரிகிடதோம் - திம்*
*தரிகிட தரிகிட ததிங்கினத்தோம்*
*தரணிக்கே புது மொழி தருவார் - நம்*
*தாயகம் மலர்ந்திட வழி தருவார்.*

* 1977ல் மலையகம் டெவன் தோட்டச் சுவீகரிப்பை எதிர்த்த போராட்டத்தில் பொலீஸ் துப்பாக்கிக்கு முன்னே நெஞ்சை நிமிர்த்தி நின்று போராடித் தியாகியாகிய சிவனு லட்சுமணன் நினைவாக.

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 ஜூன் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 68
எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

# நிறைவேற்று அதிகாரம் யாருக்குத் தேவை?

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் கூடிய அக்கறை காட்டி வருகிறார். அவ்வதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு இடைஞ்சல் கொடுக்கலாம் என்று நம்பிக்கையுடன் செயற்படுகிறார். ஐ.தே.மு. அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புக்களுடன் முரண்படுவதாக காட்டிக் கொண்டு பாராளுமன்றத்திலும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதற்குமான முயற்சிகளில் சந்திரிகா ஈடுபட்டு வருகிறார். பாராளுமன்றத்தை எவ்வேளையிலும் கலைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்பதைப் பல வழிகளில் வெளிப்படுத்தி வருகிறார். அமைச்சரவை அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் விடயங்களை, மீளப்பெறும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த் மொரகொடவிடம் இருந்த தேசிய லொத்தர் சபையை மீளப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியும்-பிரதமரும் வேறு வேறு கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான பலப் பரீட்சைகள் நடப்பதுண்டு. எனினும் நிறைவேற்று அதிகாரத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக வெளிக்காட்டிய சந்திரிகா அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தும் போது முன்வைக்கும் நியாயங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஒரு வருடத்திற்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாக வாக்குறுதி அளித்து ஜனாதிபதியாகிய அவர் தற்போது நிறைவேற்று அதிகாரத்தை ஒவ்வொரு சிறிய விடயத்திலும் பிரயோகிப்பதும், பிரயோகிக்க முயற்சிப்பதும் வேடிக்கையானதாக இருக்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் திருத்தத்துடனும் கூடிய புதிய அரசியலமைப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாக சந்திரிகா வாக்குறுதி அளித்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாமல் ஜே.வி.பி. விலகிக் கொண்டது ஞாபகம் இருக்கலாம். அதே ஜே.வி.பி. சந்திரிகாவை நிறைவேற்று அதிகாரத்தைப் பாவிக்கும்படி கேட்பதுன். அதற்கு ஆதரவையும் வழங்கி வருகிறது. ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு எதிராக ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும் என ஜே.வி.பி. வற்புறுத்தி வருகிறது. ஐ.தே.மு. அரசாங்கத்தை பதவியிலிருந்து அகற்றுவதற்காக ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்து வருகிறது. அது மட்டுமல்ல பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கத்தை அமைக்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது. சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கான இணக்கப்பாடு ஏற்படுத்தப்படவில்லை.

1978 அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கென உறுதி செய்யப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டே சந்திரிகா ஐ.தே.மு. அரசாங்கத்தை இடைஞ்சலுக்குள்ளாக்குகிறார் என்பதையும், அவ்வதிகாரங்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பது பற்றியோ பிரதமர் ரணில் எதுவுமே பேசாமல், சந்திரிகா தன்னுடன் ஒத்துப்போனால் பிரச்சினை ஏற்படாது என்றே வலியுறுத்தி வருகிறார். ஐ.தே.மு. யின் சுமூகமான ஆட்சிக்கு, 1978 அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரங்களே தடையாக இருக்கின்றன என்பதை வெளிப்படையாகக் கூறி அதற்கு எதிராகச் செயற்பட ரணில் விரும்பவில்லை. ஏனெனில் அவரும் ஜனாதிபதியாகி நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தில் இருக்கிறார். சந்திரிகா நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்ற வேண்டும் என்று கூறியபோது தானும் அதனை மாற்ற ஆதரவு வழங்குவதாக ரணில் தெரிவித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆக, ஐ.தே.க., பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. என்பன நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறைக்கு ஆதரவாகவே இருக்கின்றன என்பது தெளிவாகிறது. அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள ஜனாதிபதி முறையைத் தொடர்ந்து வைத்திருப்பதில் அவர்களுக்கு சௌகரியமேயன்றி, அசௌகரியமில்லை.

1978ஆம் ஆண்டு ஜனாதிபதி என்ற தனி ஒரு ஆளுக்கு மிகையான அதிகாரங்களை வழங்குவதாகவும், மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் கட்டுப்படுத்துகின்ற அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குவதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பு மாற்றியமைக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை பலரும் தெரிவித்த போதும் ஐ.தே.க., சு.க., ஜே.வி.பி. போன்றவற்றுக்கு மாற்றியமைப்பதில் அக்கறை இல்லை என்பது தெரிய வருகிறது. அதனை மாற்றியமைப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலமும், அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றியும் நிபந்தனைகளாக இருக்கின்றன. நடைமுறையில் இருக்கின்ற விகிதாசார தேர்தல் முறையின் கீழ் எந்தவொரு தனிக் கட்சியும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற முடியாது. அதனால் தனியொரு கட்சி மட்டும் தீர்மானித்தாலும் ஜனாதிபதி ஆட்சிமுறையை அல்லது அதனை ஏற்பாடு செய்திருக்கும் 1978 அரசியலமைப்பை மாற்றியமைக்க முடியாது. கட்சிகள் கூட்டிணைந்து அதனை மாற்றியமைக்கும் சூழ்நிலையில் இலங்கை அரசியலில் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்பது தெளிவாகிறது. பிரதான சிங்களக் கட்சிகள் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றன. முஸ்லீம் காங்கிரஸ்? இ.தொ.கா. போன்றனவும் அவற்றின் பேரப்பேச்சு அரசியலைத் தொடர்ந்து முன்னெடுக்க ஜனாதிபதி ஆட்சிமுறை தேவை என்றே கூறி வருகின்றன.

எவ்வாறு தான் நீட்டி முடக்கி விவாதித்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையும் அதற்கான அரசியலமைப்பும் அடிப்படையில் இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் எதிரானதாகும். நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் நலன்களுக்கும் இருப்புக்கும் உத்தரவாதம் வழங்கவே ஜே.ஆரினால் கொண்டுவரப்பட்டதாகும். அதனை முற்றாக இல்லாமல் செய்து மக்களுக்கான ஒரு அரசியல் அமைப்பை உருவாக்குவதே தேவையானதாகும்.

- ஆசிரியர் குழு -

# சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னால் மறைந்து நிற்கும் உண்மைகள்

"சமாதானம் பற்றி தலைவர்கள் உரத்து முழக்கம் செய்யும் போது பெரும் யுத்தம் ஒன்று வெடிக்கப் போகின்றது என்பதை மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்" இவ்வாறு ஜேர்மனியின் புகழ்பெற்ற நாடகாசிரியரும், நாஜி எதிர்ப்பாளரும் கம்யூனிஸ்ட்டுமான பெட்ரோல் ஃபிரக்ற் 1940களில் கூறி இருந்தார். அவரது கூற்று இன்றும் செல்லுபடியாகக் கூடியதொன்றாகவே இருந்து வருகின்றது.

இலங்கையின் ஆளும் தரப்புத் தலைவர்கள். அமெரிக்காவிலிருந்து அடிக்கடி வந்து செல்லும் உயர் மட்டத் தலைவர்கள். இந்திய ஆளுவோர் இலங்கையில் சமாதானம் பற்றி உரத்துப் பேசி வருகின்றார்கள். ஆனால் அதற்கான ஆக்கபூர்வமான எந்தவொரு நடைமுறையையும் விரிவுபடுத்தி முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. அதேவேளை இவர்கள் அனைவரும் திரை மறைவில் யுத்தம் ஒன்றை மீண்டும் அரங்குக்கு கொண்டு வருவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை காரணமாக பத்தொன்பது வருடகால யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வந்த போதெல்லாம் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே நடைமுறைச் சாத்தியமான வழி என்பதை நியாய சிந்தை உள்ள மக்கள் சார்பு சக்திகள் வற்புறுத்தி வந்தன. பேரினவாத யுத்த வெறியின் முன்னால் யுத்த நிறுத்தம் சமாதானம் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என்பன நிராகரிக்கப்பட்டவையாகவே இருந்து வந்தன. ஆனால் அவை காலத்தின் கட்டாயமாகவும் மக்கள் முன் உள்ள யதார்த்தமாகவும் இருந்த காரணத்தால் பல பக்க நிர்பந்தங்களினாலும் 2002 பெப்ரவரியில் அரசாங்க-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் தாகியது. அன்றிலிருந்து இன்றுவரை யுத்த நிறுத்தம் நடைமுறைப் படுத்தப் பட்டு ஒருவகையான சமாதான சூழல் நிலவுகின்றது. ஒரு சில செயற்பாடுகள் மூலமாக மக்கள் வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் நிம்மதிப் பெருமூச்சு விடக் கூடியதாக இருந்தது.

ஆனால் இவை தற்காலிகமான ஒரு சிறு பகுதி மட்டுமேயாகும். இந்நிலை முழுமையடைந்து நிரந்தர சமாதானம் ஏற்பட இன்னும் ஆற்றப்பட வேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு. அதற்கான அடிப்படை பேச்சுவார்த்தை யில் உறுதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதாகும். அத்தகைய ஒரு நிலை காணப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள். செயற்பாடுகள் எதுவும் கடந்த பதினைந்து மாதகால சமாதானப் பேச்சுவார்த்தையின் ஆறு கட்டச் சந்திப்பின் மூலம் சாத்தியமாக்கப் படவில்லை, ஏன் என்பதுதான் எழுந்து நிற்கும் பிரதான கேள்வியாகும்.

அங்கே தான் திரைமறைவில் இருக்கும் சில உண்மைகள் காணப்பட வேண்டியவை ஆகின்றன.

1. தற்போதைய ஐ.தே.கட்சி தலைமையிலான அரசாங்கம் சமாதானம் பற்றிப் பேசி புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் புலிகள் இயக்கத்துடன் வந்தபோதிலும் அதன் உள்ளார்ந்த பேரினவாத அகங்கார நிலைப்பாடு கைவிடப்படவில்லை. அதனால் ஒரு நியாயமான அதிகாரப் பகிர்வைச் செய்து கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுக்கு வரத் தனது பின்னடிப்பைக் கொண்டிருக்கிறது. அதனால் சமாதானப் பேச்சு வார்த்தையைப் பயனுள்ளதாக மாற்றி விருத்தி செய்வதற்குப் பதிலாக ராணுவ ரீதியிலான விஸ்தரிப்பு. பலப்படுத்தல். சர்வதேச சமூகத்தின் ஆதரவு என்பனவற்றிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி நிற்கின்றது. ராணுவ ஆட்சேர்ப்பு. பயிற்சி. ஆயுதக் கொள்வனவு, ஆலோசனைகள். மறைமுக ஒப்பந்தங்கள் என்பன உள்ளூரவே நாளாந்தச் செயற்பாடுகளாக ஆளும் தரப்பில் முன்னெடுக்கப்படுகின்றன.

2. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பதினைந்து மாதகால சமாதான சூழலில் தமது பெரு முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையான தாராள. தனியார் மயப்படுத்தும் நடைமுறைகளையும் தொழிலாளர் விரோத மக்கள் விரோதச் சட்டங்களையும் நடை முறைக்கு கொண்டு வந்துள்ளது. சமாதானத்தின் மறைவில் இவை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

3. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியையும் அதன் பொருளாதார அரசியல் கொள்கை நிலைப்பாட்டையும் பூரணமாகப் பயன்படுத்தி உலகமயவாக்கத்தின் கீழான நிகழ்ச்சி நிரல் அமெரிக்க. மேற்குலக. யப்பானிய பல்தேசியக் கம்பனிகளால் வேகமாகவும் ஆழமாகவும் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன. இதில் வடக்கு கிழக்கு தற்போதைய சமாதான சூழலில் உள்ளடக்கப்பட்டு அங்கே பல்தேசியக் கம்பனிகள் வேகமாகப் பாய்ந்து வருகின்றன.

**வெகுஜனன்**

4. இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தும் நோக்கில் இந்தியக் கம்பனிகளும் பெரு முதலீட்டாளர்களும் இலங்கையின் பொருளாதாரத் தளங்களில் ஊடுருவி வருகிறார்கள். அத்துடன் ராணுவ கடற்படைத் தேவைகளை நிறைவு செய்து வருவதிலும் பின் நிற்கவில்லை.

5. அரசாங்கம் அமெரிக்காவிடம் வலதுகரத்தையும் இந்தியாவிடம் இடதுகரத்தையும் நீட்டிக்கொள்ளும் நிலைப்பாட்டைத் தொடர்கிறது. இரு தரப்பினரும் உள்ளார்ந்த தத்தமது மேலாதிக்க நோக்கங்களுக்காக ராணுவ பொருளாதார உதவிகள் ஒத்துழைப்புகள் ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர். இதில் உள்ளார்ந்த அமெரிக்க இந்தியப் போட்டி இடம் பெற்றும் வருகின்றது.

தமது உள்நோக்கமான இலங்கையை யாருடைய பிடியில் வைத்திருப்பது என்பதில் அமெரிக்க இந்திய ஆளும் வர்க்கப் போட்டி அமைந்திருந்த போதிலும் புலிகள் இயக்கத்தைப் பற்றிய கண்ணோட்டத்தில் அமெரிக்க இந்திய இலக்கு தற்போதைய சூழலில் ஒன்றாகவே காணப்படுகின்றது. புலிகளைப் பலவீனப்படுத்தி மேல் எழும்பாதவாறு பார்த்துக் கொள்வதில் இரு தரப்பும் கவனம் செலுத்தி வருகின்றன. புலிகள் மீது விதிக்கபட்ட தடையைத் தொடர்வதும். அவ்வப்போது அமெரிக்கா விரல் சுட்டி ஆணையிட்டு வருவதும், இந்தியா சமமாக உட்கார மறுப்பதும், பேரினவாதிகள் தரப்பு நியாயங்களுக்கு செவி மடுத்து ஆதரிப்பதும் காணக் கூடியவைகளாகும்.

7. சமாதானப் பேச்சுவார்த்தைச் சூழலைத் தமக்குச் சாதகமானதாகப் பயன்படுத்துவதில் ஜனாதிபதியும் எதிர்க் கட்சியினரும் மும்மரமாகச் செயற்படுகிறார்கள். பொதுசன முன்னணிக்கு மீண்டும் பாராளுமன்ற அதிகாரப் பசி ஏற்பட்டு நிற்கிறது. அதற்கு எந்தெந்த வழிகளில் பேச்சு வார்த்தையைக் குழப்ப முடியுமோ அந்தந்த வழிகளில் முன் நிற்கிறது. ஜே.வி.பி. பாராளுமன்ற ஆசனங்களைக் கூட்டிக் கொள்ளவும் அதிகாரத்தில் பங்கேற்கவும் பேச்சு வார்த்தை சூழலைப் பயன்படுத்துகிறது. பேரினவாதக் கூச்சலை கூச்ச நாச்சமின்றிக் கக்கி தென்னிலங்கைப் பத்திரிகைகளிலும் வீதிச் சுவர்களிலும் பளிச்சிடச் செய்து வருகிறது. இந்நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து வருகிறார்கள்.

8. சிறிலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி- சிஹல உறுமய போன்ற கட்சிகளின் வெளிப்படையான பேரினவாத நிலைப்பாட்டுடன் இந்தியா கைகோர்த்து நிற்கிறது. பேச்சுவார்த்தை தொடர வேண்டும் சமாதானம் மலர்ந்து நிலைக்க வேண்டும் என இந்தியா உதட்டளவில் கூறுகிறதே தவிர அதன் உட்கிடக்கை தற்போதைய அரசு-புலிகள் பேச்சுவார்த்தை குழப்ப வேண்டும் என்பதேயாகும்.

9. தனது அமெரிக்க சார்பு நிலையால் இந்தியா சீற்றமடைந்து எதிர்நிலை சக்திகளுக்குப் பலம் சேர்த்து விடும் என்ற அச்சத்தால் இந்தியாவை தாஜா பண்ணுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் அடிக்கடி புது டில்லிக்குச் சென்று இந்தியத் தலைவர்களைக் குளிர் வித்து வருகிறார்கள். அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திய ஆளும் வர்க்கத் தலைமை இலங்கைக்குள் தமது பொருளாதார ராணுவப் பிடிகளை முடிந்தளவுக்கு இறுக்கி வருகிறது.

10. பிரதமர்-அரசாங்கம். ஜனாதிபதி-எதிர்க்கட்சி. அமெரிக்கா. இந்தியா மற்றும் பேரினவாத யுத்தவெறியர்கள் என்போர் தற்போதைய சமாதான பேச்சுவார்த்தை மூலம் நியாயமானதும் நிரந்தரமாகக் கூடியதுமான தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை என்பது தான் உண்மையான நிலையாகும். ஆனால் இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தை சூழலைத் தத்தமக்குரியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதைக் கண்டு கொள்ள அதிக சிரமப்பட வேண்டியதில்லை. சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளும் கூட பல சிக்கல்கள் நிர்பந்தங்களை எதிர் நோக்கி நிற்கின்றனர். அதேவேளை அவர்களும் தங்களது உள்ளார்ந்த இருப்பு எதிர்காலம் முதன்மை நிலை என்பனவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அம்சங்களைப் பெற்றுக் கொள்வதிலும் தமது நிலையை வலுப்படுத்துவதிலும் முனைப்பாக இருந்து வருவதையும் காணலாம்.

மேற்கூறியவற்றின் சாதக பாதக அம்சங்களைக் கணக்கிட்டே சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுகின்றது. அதனால் அடிக்கடி ஐயப்பாடுகளும் பலத்த கேள்விகளும் சவால்களும் தோன்றிய வண்ணமே உள்ளன. இவை அனைத்தையும் ஒரே பாச்சலில் கடந்து பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்பதோ நியாயமான அரசியல் தீர்வு ஏற்பட்டு நிரந்தர சமாதானம் கிடைக்கும் என்பதோ வெறும் கற்பனையாகவே இருக்க முடியும். இதன் மறுபக்கம் யுத்தம் வேண்டும் என்பதல்ல. சமாதானம் சாத்தியமற்றது என்ற நம்பிக்கை யீனமும் அல்ல.

இன்று பேச்சு வார்த்தையில் காணப்படும் யதார்த்தங்களை உண்மைகளாகக் கண்டு அவற்றின் பாதக அம்சங்களை நிராகரித்து சாதக அம்சங்களை பற்றிக்கொண்டு முன் செல்ல பரந்துபட்ட மக்கள் அனைவரும் அரசியல் தீர்வுக்கான கடுமையான அழுத்தங்களை வெகுஜன இயக்கங்களாக முன்னெடுக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்காவுக்கு அடிமைச் சாசனமா?

மோகன்



தமிழ்த் தேசியவாதத் தலைமையும் சிங்களப் பேரினவாதத் தலைமையும். ஏன் முஸ்லிம் தேசியவாதத் தலைமையும் கூட. பிரித்தானியக் கொலனிய எசமானர்கட்கு எதிராகத் துணிந்து ஒரு சொற் பேசியதில்லை. இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக ஒரு துளி இரத்தமும் சிந்தப்படவில்லை என்பது இந்தத் தேசியவாதத் தலைமைகளைப் பொறுத்தவரை முற்றிலும் உண்மை. பிரித்தானிய ஆட்சியாளர்கட்கு எதிராக ஒலித்த குரல் இடதுசாரிச் சிந்தனை சார்ந்தே எழுந்தது. என்ற உண்மை. இவர்கள் எழுதிய வரலாற்றினுள் வேண்டுமென்றே புதைக்கப்பட்டு விட்டது.

நேரடி கொலனி ஆட்சியின்று சுதந்திரம் கிடைத்த பின்பு சிங்கள தேசிய முதலாளியம். தவிர்க்க முடியாமல். ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தேசிய நலன்களை வற்புறுத்த நேர்ந்தது. 1956முதல் 1964 வரை ஸ்ரீ.ல.சு.கட்சியின் சில ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகள் அதை ஒரு முற்போக்குச் சக்தியாக அடையாளங் காண உதவின. இந்த நடவடிக்கைகள் மக்கள் நடுவே பெற்றிருந்த வரவேற்புக் காரணமாக 1965முதல் 1970 வரை இருந்த யூ.என்.பி. தலைமையிலான அணியால் முற்றிலும் ஏகாதிபத்தியத்தின் சார்பான நிலைமைக்குப் பெயர முடியவில்லை. அதன் ஏகாதிபத்திய சார்பான போக்கைச் சிறிது மட்டுப்படுத்துவதில் அன்றைய உலக நிலவரமும் ஏகாதிபத்திய விரோத விடுதலைப் போர்களும் ஒரு பங்கு வகித்தன. 1970-77 காலத்தில் இரண்டு சந்தர்ப்பாவாத இடதுசாரிக் கட்சிகளின் துணையுடன் அமைந்த 'மக்கள் அரசாங்கத்தின்' ஆட்சியின்போது தேசிய முதலாளியத்தின் இயலாமை தெளிவாகியது. ஒருபுறம் மக்களின் உணர்வுகளை மதித்து ஏகாதிபத்திய விரோத நிலைப்பாட்டை ஏற்றாலும். மறுபுறம் ஏகாதிபத்தியத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ந்தது. எனினும் சோவியத் யூனியன் ஒரு பெருவல்லரசாக அமெரிக்காவுக்கு எதிராகப் போட்டியிட்ட சூழலும் சீனாவின் மூன்றாமுலகச் சார்பான நிலைப்பாடும் 1970களில் பல தேசிய முதலாளிய நாடுகளைப் போல இலங்கையையும் ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகள் சிலவற்றில் ஈடுபட ஊக்குவித்தன.

1977ல் இலங்கையில் யூ.என்.பி. பாராளுமன்றத் தேர்தலில் ஏகப் பெரும்பான்மையுடன் பெற்ற வெற்றி உலக அரங்கிற்பல நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுடனும் ஏகாதிபத்தியம் புதிய உபாயங்களுடன் உலக ஆதிக்கத்துக்கு ஆயத்தமாகி மீண்டும் போர்க்கோலம் பூண்டதுடனும் சேர்த்தே நோக்கப்பட வேண்டும்.

உலகளாவிய முறையில் சோவியத் யூனியனின் சரிவை நோக்கிய நகர்வையும். சீனாவில் மாஓவுக்குப் பிந்திய தலைமையின் திரிபுவாதப் போக்குத் தலை தூக்கியதையும். பல தேசிய முதலாளிய அரசியற் தலைமைகள் படிப்படியாக ஏகாதிபத்தியத்துக்குப் பணிந்து போகத் தொடங்கியதையும். முதலாளிய உலகமயமாக்கல். உலகின் மீதான ஆதிக்கத்துக்கான ஒரு திட்டமாக முழுமை பெறுவதையும் 1980களில் நாம் கண்டோம். சென்ற நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகள் உலக சோஷலிஸ இயக்கத்தின் மிக மோசமான பின்னடைவுகளை அடையாளப்படுத்தின. ஆயினும். அதன் இறுதி மூன்று ஆண்டுகளுள் (1998-2000) உலக முதலாளியம் தவிரக்க முடியாத நெருக்கடிக் குள்ளாகியது. இந்த நெருக்கடி இன்னும் நீங்கவில்லை.

அமெரிக்காவின் இன்றைப ஆரவாரமான ஆக்கிரமிப்புத் தோற்றத்தை அதன் இராணுவ வலிமையின் பிரதிபலிப்பாக நோக்குகிறவர் உள்ளனர். இதன் காரணமாக. அமெரிக்காவை எதிர்த்தால் நாமும் அழிய நேரிடும் என்று இவர்களிற் பலர் அஞ்சுகின்றனர். சிலர் அமெரிக்காவுடன் சேர்ந்து நிற்பதன் மூலம் வெல்லுங்கட்சியின் நண்பர்களாகி நன்மை பெறலாம் என்று நினைக்கின்றனர். ஆனால் உண்மையான நிலை வேறு. அமெரிக்கா 1970களின் முற்பகுதியிற் சந்தித்ததை விட மோசமான ஒரு பொருளாதார நெருக்கடியில் ஆழ்ந்துள்ளது. இது. அமெரிக்க நிதி நெருக்கடியுடனும் பெரு முதலாளியத்தின் லாப நோக்கு அமெரிக்க உற்பத்தி முறையில் ஏற்படுத்தியுள்ள சீர்குலைவுடனும் தொடர்புடையது.

எனவே அமெரிக்கப் போர்க் கோலத்தின் நோக்கங்களுள் மூன்றாமுலகின் மூலவளங்களைத் தனதாக்கும் திட்டத்தினளவுக்கு அமெரிக்க மக்களின் கவனத்தை நாட்டின் பொருளாதாரத் தேக்கம். வேலையின்மை. வறுமையின் அதிகரிப்பு போன்றவற்றினின்று திசை திருப்புவதும் முக்கியமானது. உண்மையில் 2001 செப்றெம்பர் 11 தாக்குதல் அமெரிக்காவின் போர்க் கோலத்துக்கு ஏற்பட்ட ஒரு வசதியே. செப்றெம்பர் 11 தாக்குதலுக்கும் வெகுகாலம் முன்னரே ஈராக் மீதான போருக்கான அடித்தளம் இடப்பட்டு விட்டது என்பதை நாம் அறிவோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று ஆஃப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் நடத்தி முடித்த ஆட்சிக் கவிழ்ப்பு அமெரிக்காவை ஒரு உண்மையான புலியாக. பயங்கரமான இரும்புப் புலியாகக் காட்டலாம். ஆனால் அமெரிக்கா தனது பொம்மை அரசாங்கங்களை அங்கு நிறுவித் தனது அதிகாரத்தை நிலைநாட்டி அமைதியைப் பேண இயலாதிருப்பது அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு காகிதப் புலியே என்பதை நமக்கு உணர்த்துகிறது. இன்று அமெரிக்காவுக்கு எதிரான அராபிய. இஸ்லாமிய பயங்கரவாத நடவடிக்கைகள் வலுத்து வருகின்றன. இவை மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க முடியாது. ஆனால் இவை அமெரிக்காவுக்கு எதிராக மக்களது கோபத்தின் ஒரு அறிகுறி என்பதும் அக் கோபம் இன்னமும் ஒரு வெகுசன இயக்கத்தின் வடிவில் ஒரு போராட்டமாக் உருவெடுக்க வேண்டியுள்ளது என்பதுமே நாம் உணர வேண்டிய உண்மை.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடர்

**தமிழ் முஸ்லீம் தலைமைகள் அமெரிக்காவைத் தட்டிக் கேட்கத் தயங்குவது ஏன் என்பது முன்னிலும் பார்க்க வலுவான கேள்வியாகிறது.**

\- மோகன் -

பான ஒருவரது நிலைப்பாடு ஒருவர் அமெரிக்காவை ஒரு இரும்புப் புலியாகப் பார்க்கிறாரா அல்லது காகிதப் புலியாகப் பார்க்கிறாரா என்பதைப் பொறுத்தது. இன்று சில மூன்றாமுலக நாடுகள் துணிந்து அமெரிக்காவை எதிர்த்து நிற்கின்றன. அமெரிக்காவின் மிரட்டலால் அவற்றை ஒன்றுஞ் செய்யமுடியவில்லை. பல விடுதலை இயக்கங்கள் அமெரிக்காவின் "பயங்கரவாதிகள்" என்ற முத்திரையைப் பொருட்படுத்தாமல் உறுதியாகப் போராடுகின்றன. அதேவேளை பிற தேசிய இனங்களைப் பகைமையுடன் நோக்குகிற தேசியவாதிகளும் இன ஒடுக்குமுறையைக் கடைப்பிடிக்கும் தேசியவாத அரசாங்கங்களும் அமெரிக்காவின் முன் கைகட்டிப் பணிந்து நிற்கின்றன.

**அமெரிக்கா தன்னுடைய மேலாதிக்கத் தேவையை ஒட்டியே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களை ஊக்குவித்து வந்துள்ளது.**

நாம் கவனிக்க வேண்டிய விடயம் ஏதென்றால் அமெரிக்கா தன்னுடைய மேலாதிக்கத் தேவைகளை ஒட்டியே ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களை ஊக்குவித்துள்ளது. இது பொஸ்னியாவிலும் சேர்பியாவிலும் ஈராக்கிலும் காணப்பட்டது. ஈராக்கில் குர்திய விடுதலை இயக்கம் ஒன்றைக் கடந்த பத்தாண்டுகளாக ஆதரித்து வந்துள்ள அமெரிக்கா. குர்திய மக்களை மிகமோசமாக ஒடுக்கி வந்துள்ள துருக்கியை முற்றாக ஆதரிக்கிறதை வைத்தே இதை விளங்கிக் கொள்ளலாம். இதே அமெரிக்கா தான் ஆதரித்த சிறுபான்மை விடுதலை இயக்கங்கள் பலவற்றைக் கைவிட்டு ஒடுக்குமுறை ஆட்சியுடன் சமரசம் செய்துள்ளதையும் நாம் கண்டிருக்கிறோம்.

எனவே ஒடுக்கப்பட்ட மக்களையும் அவர்களது போராட்ட இயக்கங்களையும் பொறுத்தவரை அமெரிக்கா என்றுமே அவர்களது நண்பனல்ல.

இந்தப் பின்னணியில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையை நாம் நோக்கினால். அமெரிக்கா இலங்கையில் இரட்டை வேடம் பூண்டு வந்ததை விளங்கிக் கொள்வது கடினமல்ல. ஸ்ரீ.ல.சு.கட்சி அதிகாரத்தில் இருந்தபோது ஸ்ரீ.ல.சு.கட்சியை விடத் தனக்கு விசுவாசமான யூ.என்.பியை ஆதரிக்கும் நோக்கில் அமெரிக்கா தமிழ்த் தேசியவாதத் தலைமையை ஊக்குவித்தது. இதை 1960களின் முற்பகுதியிலும் 1970 முதல் 1977 வரையும் கண்டோம். யூஎன்.பியின் தேசிய இன ஒடுக்குமுறையை அமெரிக்கா தட்டிக் கேட்காததோடு 1983க்குப் பின்பு அதன் இன ஒழிப்புப் போரையும் ஆதரித்து ஊக்குவித்தது.

சிங்களப் பேரினவாதிகள் அமெரிக்காவை விரும்புவதில் வியப்பில்லை. ஆனால் அமெரிக்கா சிங்கள மக்களின் நண்பனல்ல என்பதைப் பற்றி அவர்களும் அறிவார்கள். அவர்களுடைய அதிகார மோகமும் வர்க்க நலன்களும் சிங்கள மக்களின் நலன்களை விட முக்கியமானவை.

தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் அமெரிக்காவைத் தட்டிக் கேட்கத் தயங்குவது ஏன் என்ற கேள்வி இப்போது முன்னிலும் வலுவாக எழுந்துள்ளது. குறிப்பாக. விடுதலைப் புலிகளின் குரல்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட நாலு கூட்டமைப்புக் கட்சிகளும் தயங்குவதற்கான நியாயமென்ன? இவ் விடயத்தில் விடுதலைப் புலிகளும் அமெரிக்காவைக் கண்டிக்க வேண்டிய இடங்களிற் பகிரங்கமாகக் கண்டிக்கத் தயங்குவது தமிழ் மக்களின் நிலைப்பாட்டை அமெரிக்காவுக்குச் சாதகமாக வைத்திருக்க முயலும் சக்திகளுக்கே உதவுகிறது.

ஈராக்கில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர் நியாயமற்றது என்பது பற்றியும் ஈராக்கிய மக்கள் மீது மட்டுமன்றி ஒடுக்கப்பட்ட மூன்றாமுலக நாடுகள் மீதும் தொடுக்கப்பட்ட போர் என்பது பற்றியும் மூன்றாமுலகின் தலைமைகள் யாவும் உணருகின்றன. எனினும். மக்கள் மத்தியில் உள்ள எதிர்ப்புணர்வை அரசாங்கங்கள் போதியளவில் பிரதிபலிக்கவில்லை என்பது பல நாடுகளிலுங் காணப்பட்ட விடயமே. எனினும் தென்னாசியாவின் பிரதான அரசியற் கட்சிகளின் நடத்தை மிகவும் ஏமாற்றமளிக்கிறது. ஒப்புக்குப் போரை எதிர்த்து ஊர்வலம் போன தேசியவாதக் கட்சிகள் அதன் பிறகு அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றி எதுவுமே பேசவில்லை. இந்தியாவில் இடதுசாரி இயக்கத்தின் தூண்டுதலிலேயே ஈராக் ஆக்கிரமிப்புக்கு எதிரான இயக்கம் இன்னமும் அங்கே செயற்படுகிறது.

இலங்கையின் தமிழ்த் தேசியவாதத் தலைமையிடமிருந்து அமெரிக்காவுக்கு எதிரான மூச்சுக்கூட எழவில்லை. இது ஏன்? ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் வெறும் தூரத்துப் பார்வையாளர்களாகவே இருந்தார்கள். அமெரிக்காவை ஆதரித்து அறிக்கை விடாதளவில் நாம் நிம்மதி காண முடியும் என்று கூறத் தோன்றுமளவுக்கு அவர்களது மௌனம் நம்மை வெறுமையடையச் செய்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் அத்துமீறிக் குறுக்கிடுவது பற்றி தமிழ்த் தேசியவாதிகள் அனைவருமே வாய் திறவாமலிருப்பது எதைக் குறிக்கிறது? தேசியவாதம் என்பது தன் குறுகிய பார்வையில் தன் சகோதரத் தேசிய இனங்களைப் பகைமையுடன் நோக்குமளவிற்கு ஒவ்வொரு தேசிய இனத்தினதும் சுதந்திரத்திற்கு மிரட்டலாக உள்ள பிரதான எதிரியை அடையாளங் காண்பதில் வேண்டு மென்றே தவிர்ப்பதைக் குறிக்கிறதா? இது தட்டிக்கழிக்க முடியாத ஒரு கேள்வி.

முஸ்லிம் தலைமைகளின் நடத்தை மிகவும் வியப்பளிக்கிறது. தமிழ்-முஸ்லிம் மோதல் பற்றி மிகுந்த கவனத்தைக் குவிக்கிறதோடு அதைத் தணிப்பதற்கு மாறாகத் தொடர்ந்தும் எரிய விடும் விதமாக நடந்து கொள்கிற இத் தலைமைகள் சிங்களப் பேரினவாதத்தின் தொடர்ச்சியான அச்சுறுத்தல் பற்றி ஏனோ கண்டு கொள்ள மறுக்கின்றன. இந்தப் பின்னணியில். அமெரிக்காவின் ஈராக் யுத்தம் பற்றிய அவர்களது நிலைப்பாடும் பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலியத் தாக்குதல்கள் பற்றிய அவர்களது செயற்பாடுகளும் நமக்குக் கூறுவதென்ன?

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவமற்ற முஸ்லிம் தீவிரவாதிகள் தவிர்ந்த எவரும் தாங்கள் கூட்டுச் சேர்ந்துள்ள பெரிய அரசியற் கட்சிகளின் அமெரிக்க சார்புக் கொள்கை பற்றிய அதிருப்தியைத் தெரிவிக்கத் தவறியதோடு மௌனமாக அதை அங்கீகரிப்பதாகவுமே தோன்றுகிறது. இது எப்படி இயலுமாகிறது. அமெரிக்கா தெளிவாகவே இஸ்லாமிய விரோத. அராபிய விரோத நோக்கில் இன்று தனது போர்க்கொள்கையை முன்னெடுப்பது பற்றி முஸ்லிம் தலைவர்கள் அறியாமலிருக்க முடியுமா? அப்படியிருந்தும் அவர்களால் ஏன் அதற்கெதிராகப் பேச முடியவில்லை?

முஸ்லிம் தேசியவாதத் தலைமைகள் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முஸ்லிம் இன அடையாளம் சார்ந்த உணர்வைப் பாவிப்பதும் தமது பாராளுமன்ற ஆசன வலிமையைப் பாவித்துத் தங்களது சொந்த நலன்களைப் பேணுவதும் பற்றி முஸ்லிம் மக்கள் நடுவே அதிருப்தி வளர்ந்து வந்துள்ளது. ஆயினும். ஒரு மாற்று அரசியல் மார்க்கம் இல்லாததாலும் முஸ்லிம் அடிப்படை வாதத்தின் அரசியல் வறுமையும் ஜனநாயக விரோத அணுகுமுறையும் இன்னமும் இந்தச் சந்தர்ப்பவாதத் தலைமைகளிடையே உள்ள போட்டிகளில் முஸ்லிம் மக்களைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது.

அமெரிக்காவின் சுயரூபம் ஆஃப்கானிஸ்தானிலும் அதை விடத் தெளிவாக ஈராக்கிலும் அம்பலமாகி விட்டது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதன் மூலம் தேசிய இன ஒடுக்குமுறைகட்கெதிரான சகல முற்போக்கான. தேசபக்தச் சக்திகளையும் ஒன்று திரட்ட முடியும். இதன் மூலம் நாட்டின் உண்மையான சுதந்திரத்துக்கும் தேசிய இனங்களுக்கிடையிலான சமத்துவத்துக்கும் பெரும் பங்காற்ற முடியும். இதைச் செய்யத் தவறும் ஒவ்வொரு தேசியவாதத் தலைமையும் அமெரிக்காவுக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்திருக்கிறது என்றுதான் நாம் கூற முடியும்.

www.padippakam.com



# பெண்கள் எதிர்கொள்ளும் தலைமைத்துவ சவால்கள்

## மக்கள் யுத்தக்களத்திலிருந்து ஒரு பெண் போராளி

**தோழியர் பார்வதி**

1996 பெப்ரவரியில் நேபாள (மாஓ வாத) கம்யூனிஸ்ற் கட்சி (மா.) நே.க.க..) நேபாளத்தில் தொடக்கி வைத்த மக்கள் யுத்தம் அலை மேல் அலையாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. மேற்கு நேபாளத்தின் சில மாநிலங்களில் பற்றிய புரட்சித் தீ நாடு முழுவதையும் மேவி நிற்கிறது. அரசாங்கத்தின் கூற்றுக்களின்படி மக்கள் யுத்தம் நேபாளத்தின் 75 மாவட்டங்களில் 73ஐப் பாதித்துள்ளது. மக்கள் யுத்தத்தின் முதுகெலும்பான மக்களை அணிதிரட்டாமல் இவ் வெற்றிகள் யாவும் இயலுமாயிருந்திராது. நேபாளத்தின் மக்கள் யுத்தத்தில் பெண்களின் அணிதிரட்டல் குறிப்பாகப் புலனாகிற ஒன்றாகும். அவர்களுடைய துணிவான சாதனைகளைக் கவனியுங்கள். 1996 பெப்ரவரி 13ம் நாள். மக்கள் யுத்தத்தின் தொடக்கத்தைக் குறித்து நின்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த முதலாவது வேலை நிறுத்தத்தின் விளைவாக நேபாளம் பரவலுமாக நிலவிய முறுகலான மௌனத்தை முதலிற் கலைத்தவர்கள் அவர்களே. 1996 மார்ச் 8ம் நாள் (புரட்சிகர) அனைத்து நேபாளப் பெண்கள் சங்கம் (பு.)அ.நே.பெ.ச..) அனைவரும் கைது செய்யப்படுவர் என்ற வலுவான ஊகங்களின் நடுவே. கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்யவும் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்குத் தீர்வு காணும் முழுமையான புரட்சியின் தேவையை எடுத்துரைக்கவும் துணிந்தது. அத்துணிவு மிக்க நடவடிக்கையின் பின்னரே .பிற வெகுசன அமைப்புக்கள் தமது வேலைத் திட்டங்களை முன்வைக்கத் தொடங்கின. மேற்கு நேபாளத்தின் கலி கோட் மாவட்டத் தலித் பெண்களே முதல் முதலாகப். பிற்போக்குவாத இராணுவப் படையினரிடமிருந்து றைகுிள் துவக்குகளைப் பறித்தெடுத்து உள்ளூர்க் கட்சியிடம் ஒப்படைத்து அம் மாவட்டத்தில் மக்கள் யுத்தத்தைத் துரிதப்படுத்தினர். 2001 மார்ச் மாதம் வலுவாக அரண் செய்யப்பட்ட போர்க்கா (மாவட்டச் சிறைச்சாலையினின்று ஆறு மாஓ வாதிப்) பெண்களின் வரலாற்று முக்கியம் வாய்ந்த துணிகரமான சிறையுடைப்பு. அரிதான நிகழ்வுகளில் ஒன்று. 2001 நவெம்பரில் அவசர காலச் சட்ட நிருவாகம் திணிக்கப்படும் வரை. எல்லா வெகுசன அமைப்புகளிலும் அதிக செயலூக்கமுடையதாக. அது இயக்கத்தின் முன் வரிசையில் நின்றது. உண்மையில். 2001 ஒக்தோபரில் முழு நாட்டையும் உலுக்கிய வெற்றிகரமான மது ஒழிப்பு இயக்கமே. (பு) அ.நே.பெ.சங்கத்துடன் பேசும்படி அரசாங்கத்தை நெருக்கியது. இன்னொரு உண்மையையும் கவனியுங்கள் : கட்சியிலுள்ள ஆண்கள் தமது பரம்பரைச் சொத்துக்களைக் கட்சிக்குத் தானமாக வழங்க முன்னமே. றொல்பாவைச் சேர்ந்த பெண்கள் வலிந்து தமது சொந்த நகைகளை உள்ளூர்க் கட்சிக்குத் தானமாக வழங்கினர். அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட பின்பு. மேலும் அதிக எண்ணிக்கையிற் பெண்கள் வன்கலவிக்கும் கொலைக்கும் சிறைப்படுத்தலுக்கும் தலைமறைவாக்கலுக்கும் உட்பட்டுள்ளனர். இத்தனையையும் மீறி நேபாளத்தின் மக்கள் யுத்தத்தில் பெண்களின் பங்குபற்றுதல் கூடி வருகிறது.

சகல முனைகளிலும் பெண்களின் தலைமைத்துவத்தை விருத்தி செய்வதற்கு இப்போது புறநிலையான அடிப்படைகள் உள்ளன. இதை உணர்ந்ததன் விளைவாக நே(மா.) கட்சியின் மத்திய குழுவின் கீழே தனியான பெண்கள் திணைக்களமொன்றை உருவாக்கியுள்ளது. இத் திணைக்களத்தின் பணி ஏதெனில். கட்சி. இராணுவம். ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று முனைகளிலும் கொள்கையை இயற்றும் அமைப்புக்களை மேலும் அதிகம் பெண்கள் எட்டுமாறு. பெண்களின் உள்ளார்ந்த ஆற்றலை மேலும் உயர்த்து மாறான கொள்கைகளை விருத்தி செய்வதாகும்.

**(மா) நே.க.கட்சியில் பெண்களின் தலைமைத்துவம் பற்றிய பிரச்சனை**

கிராம. மாவட்ட மட்டங்களில் பிற்போக்கு அரச இயந்திரத்தின் இடத்தைப் புரட்சிகர ஐக்கிய முன்னணிகள் பிடித்து வந்த சூழ்நிலையில் நேபாளத்தில் பெண்கள் தலைமைத்துவப் பிரச்சனை மேலும் அதிக முக்கியம் பெறலாயிற்று. முன் கண்டிராத அளவில் இயக்கத்திற் பெண்கள் இணையவும் மாபெரும் அளவில் நீடித்துழைக்கும் திறமும் தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்டிருக்கவும் காணப்பட்ட போதும். இயக்கத்துக்குத் தலைமை தாங்குவதற்கான தேர்ந்த அறிவு போதாதவர்களாயிருந்தனர். பல்வேறு மட்டங்களில் ஐக்கிய முன்னணிகள் அனைத்தினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைவு செய்ய மத்திய மட்டத்தில் ஐக்கிய புரட்சிகர மக்கள் மன்றம் (ஐ.பு.ம.ம.) நிறுவப்பட்டதையொட்டி. இப்பிரச்சனை மேலும் முக்கியமானதாயிற்று. மேலும். மக்கள் விடுதலைப் படைக்குள் உயர் நிலை இராணுவக் கட்டமைப்புக்கள் உண்டாக்கப்பட்டதோடு. பெண்கள் பற்றிய பிரச்சனை பெண்களாலேயே எழுப்பப்படலாயிற்று. இராணுவக் கட்டமைப்புகள் பிறிகேட்படைப்பிரிவு மட்டத்தை எட்டியதோடு. இது மேலும் முக்கியமானதாகி பிறிகேடுகட்குள் தனியான பெண்கள் ப்ளவூன்களும் (காலாட்படைப் பிரிவுகள்) பகுதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இராணுவத் துறையில் ஆண்கள் நாற்பது வயது தாண்டிய பின்பு வரை விருத்தி பெறுகையில் பெண்கள் இருபத்தைந்து வயதிற்கப்பால் தொடர்வது அரிதாகவே காணப்படுகிறது. களத்தில் புறவயமான நிலவரங்கள் பெண் ஊழியர்கள் பெண்களின் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்யுமாறு வேண்டி நின்ற அதேவேளை கட்சிக்குள். கம்யூனிஸ இயக்கத்தில் பெண்களின் பங்கு பற்றிய கொள்கையளவிலான விவாதம் நடைபெற்றது. இரண்டாவது தேசிய மாநாட்டில் பிரசண்டப் பாதை ஏற்பதற்கு முன்னோடியாக. நேபாளத்தில் மக்கள் யுத்தத்தின் சாதனைகளைப் பகுத்துத் தொகுக்கின்ற போக்கிலே. தொடர்ச்சியான புரட்சியை நிறுவனப்படுத்துவதில் பெண்களது பங்கும் எதிர்ப் புரட்சியைத் தடுப்பதில் அவர்களது பங்கும் பற்றிக் காத்திரமான முறையில் அலசப்பட்டது. தனியான பெண்கள் திணைக்களம் ஒன்றன் உருவாக்கமும் பிரசண்டப் பாதையின் விளைவு தான். கட்சி. இராணுவம். ஐக்கிய முன்னணி ஆகிய மூன்றிலும் பெண்களது பங்கு பற்றி அலசப்பட்டது. இம் மூன்றிலும் கட்சியே அதி தீர்மானகரமானது என்பதாற் கம்யூனிஸ்ற் கட்சியில் புரட்சிகரப் பெண் தலைவர்களை வளர்தெடுப்பதற்கு முக்கியம் வழங்கப்பட்டது.

**தலைமைத்துவப் பிரச்சனையும் பெண்களும்**

தலைமைத்துவம் என்பது அரசியற் சித்தாந்தத்தின் மெய்மைப்படுத்தலாகும். எனவே. கம்யூனிஸ்ற் கட்சியில் தலைமைத்துவத்தின் தன்மையைத் தீர்மானிப்பது சித்தாந்தம் பற்றிய ஆளுமையே. இப்பண்பு. தொடர்ச்சியான வர்க்கப் போராட்டத்தாலும் உட்கட்சிப் போராட்டத்தாலும் அகப் போராட்டத்தாலுமே விருத்தி பெறுகின்றது. எனவே. எந்த நாடுகளில் வர்க்கப் போராட்டம் உள்ளதோ. எங்கே அகப் போராட்டத்தினூடு தனிமனிதர்உயர்நிலைக்கு மாற்றமடையுமாறு வேண்டி நிற்கும் ஆரோக்கியமான உட்கட்சிப் போராட்டங்கள் உள்ளனவோ. அங்கேயே மெய்யாகப் புடமிடப்பட்ட ஒரு தலைமை தோன்றுகிறது. றோஸா லக்ஸம்பூர்க். அலெக்ஸாண்ட்ரா கொல்லன்வுாய்.க்ளாரா ஜெறற்கின். ஜியாங் சிங் போன்றோர் ஜேர்மனி. ரஷ்யா. சீனா ஆகிய நாடுகளில் தத்தமது காலத்தின் உக்கிரமான வர்க்கப் போராட்டத்தினதும் உட்கட்சிப் போராட்டத்தினதும் விளைவாக உருவானோரே. மேலும்.

தொடர்ச்சி 10ம் பக்கம்..

# யாழ்ப்பாணமும் நீர்வளமும்

## யாழ் குடா நாடு பாலைவனமாகுமா?

**நிலநீர் ஆய்வாளர் க. நடனசபாபதி**

**நன்னீரைக் காப்போம் - பெறுவோம்**

காரைதீவு என்று நெடுங்காலமாக வழங்கிவந்த இடத்திற்கு இப்போதைய பெயர் காரைநகர். பல வசதி படைத்த செல்வந்தர்கள். வர்த்தகர்கள் இங்கே வாழ்கிறார்கள். நாம் அங்கே அவர்கள் வீடுகளுக்கு விருந்தினராகச் சென்றால் அவர்களால் வந்தவர்களுக்கு எதனையும் தாராளமாக வழங்க முடியும். ஆனால் நன்னீரை மட்டும் தாராளமாகத் தரமுடியாத பரிதாப நிலையில் உள்ளார்கள். வந்த விருந்தினர்களுக்குப் போதிய அளவு நன்னீர் வழங்கமுடியவில்லையே என்று வருந்தும் நிலையைக் காண முடிந்தது. இன்றும் அப்பிரதேசத்தில் அந்நிலையே நிலவி வருகிறது.

அந்த நாளில் பழைய கச்சேரிக் கட்டிடப் பகுதியில்தான் அரசாங்க அதிபரின் வசிப்பிடம் இருந்தது. மாரிகாலங்களில் பெய்யும் மழைநீர் கூரைகளிலிருந்து பீலிகள் வழியாகக் கீழே வருகிறது. இந்த மழைநீர் அனைத்தையும் வாய்க்கால் வழியாக ஓடச்செய்து கிணறு ஒன்றிற்குள் பாய்ச்சச் செய்தனர். இந்த மழைநீரை நீர்த் தேவைக்குப் பயன்படுத்தி வந்தனர். திருநெல்வேலி. கோண்டாவில் குடிநீர்த்திட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு அரச அதிபரின் நீர்த் தேவைகள் அனைத்தையும் குடிநீர் விநியோகத் திட்டமே மேற்கொண்டதனால் மழைநீரைப் பயன்படுத்துவது கைவிடப்பட்டது. ஆகவே இந்த ஏற்பாடு இன்று வெறும் காட்சிப் பொருளாகவுள்ளது.

ஆகவே நன்னீர் - மழைநீர் சேமிக்கும் முறையை ஒவ்வொரு வீட்டாரும் தத்தமது வீடுகளில் ஏற்படுத்தினால் நீருக்காக நெடுந்தூரம் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வீட்டிலும் சமையல் அறையில் கூரை வழியாகப் பாயும் மழைநீரைச் சேகரிக்க நிலத்தடியில் நீர்த் தொட்டிகளைக் கட்டிவைத்துக் கொள்ளலாம். சமைக்கத் தேவைப்படும் நீரை இந்நிலத்தடித் தொட்டிகளிலிருந்து அவ்வப்போது பெற்றுக் கொள்ளலாம். நித்திய சமையல் தேவைக்கு நாளொன்றுக்கு மூன்று கலன் நீருக்குமேல் சாதாரணமாகத் தேவைப்படமாட்டாது. சுமார் 300 நாட்களுக்குத்தான் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மழை பெய்வதில்லை. ஆகவே ஓராண்டுக்கு மழை பெய்யும் வரை தேவைப்படும் நீர் 3ஒ 300ஞ்900 கலன் நீர்மட்டுமே வருடம் முழுவதற்குமாக ஒரு வீட்டுக்குத் தேவைப்படும். இந்த ஏற்பாட்டை ஒவ்வொரு வீட்டினரும் செய்து கொண்டால் நன்னீர் பெற நெடுந் தூரம் அலைந்து திரியும் தேவை ஏற்படாது. 5.25 அடி நீளம் அந்த அளவு அகலம். ஆழம் கொண்ட தொட்டியை அமைத்துக் கொண்டால் போதுமானது. நீண்ட நாட்களுக்கு சேமித்து வைப்பதனால் நீரில் நுண்ணங்கிகளும். கிருமிகளும் தோன்றித் தீங்கு விளைவித்து விடாதோ என்று அஞ்சத் தேவையில்லை. நீரைச் சமைக்கும்போது கொதிக்கவைக்கிறோம் அல்லவா? கொதிக்கவைத்தால் நுண்ணங்கிகள் இறந்துவிடும்.

**யாழ்ப்பாண நகர நீர் விநியோகத் திட்டம்**

யாழ்ப்பாண நகருக்கு திருநெல்வேலி விவசாய நிலையத்திலிருந்து தினமும் 75.000 கலன் நீர் வழங்கப்படுகிறது. மற்றொரு நீர் வழங்கு நிலையம் கோண்டாவிலில் இருக்கிறது. இதில் மூன்று வெவ்வேறு கிணறுகளிலிருந்து பெறப்படும் நீர் ஒரு மத்திய கிணற்றுக்குப் பாயவிடப்படுகிறது. மூன்று கிணறுகளின் அடிமட்டம் மத்திய கிணற்றைவிட உயரமானவை. இத்தொடர்புகள் நிலத்திற்கு அடியில் கிணற்றின் கீழ்ப்பகுதி வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாய்க்கிணறான மத்திய கிணற்று நீர் யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த

**நன்னீரைப் பாதுகாக்க தூரநோக்குடைய திட்டங்கள் அவசியம்.**

இரண்டு விநியோகத் திட்டங்களிலிருந்தும் முழுமையாக 75.000+ 225.000 = 300.000 கலன் நீர் மட்டுமே தினமும் வழங்கப்படுகிறது. யாழ்ப்பாண நகரில் சுமார் ஒரு லட்சம் பேர் அன்று வாழ்ந்து வந்தனர். ஒரு மனிதனின் சகல தேவைகளுக்கும் சுமார் 3 கலன் நீரே வழங்கக்கூடியதாகவுள்ளது. வீடுகள் மிகவும் நெருக்கமாக அமைந்துள்ளமையால் வீடுகளில் கிணறுகளை அமைக்க முடியாத நிலையில் உள்ளனர். இவர்கள் முழுமையாக நம்பி வாழ்வது அரசாங்கம் வழங்கும் திருநெல்வேலி. கோண்டாவில் குழாய் வழியாக வழங்கப்படும் நீரையேயாகும். இந்த நிலை இப்படியிருக்கும்போது கோண்டாவிலில் வாழ்ந்து வந்த விவசாய மக்கள் தங்களுடைய கிணறுகள் யாழ்ப்பாண நகர மக்களுக்கு நீர் வழங்குவதால் பாழடைந்து போவதாகக் கருதுகின்றனர். யாழ்ப்பாண அரசாங்க அதிபராகவிருந்த காலம்சென்ற ஸ்ரீகாந்தா தலைமையில் விவசாயிகள் அரசாங்கத்திற்கு முறைப்பாடு செய்தனர். இதனை ஆராய முற்பட்டது நீர்பாசனத்திணைக்களம். இறைப்பு - நீர் வழங்குகிணற்றுத் தொகுதியைச் சுற்றி 16 கிணறுகளை அவதானிப்புக்கு எடுக்கப்பட்டன. நாள்தோறும் நீர்மட்டங்களும் நீரின் இரசாயனத்தன்மையும் ஆராயப்பட்டன. அவற்றில் எவ்வித மாற்றங்களும் தென்படவில்லை. விவசாயிகள் தத்தம் கிணறுகளிலிருந்து நீர் விநியோகக் கிணற்றிலிருந்து இறைத்தெடுக்கப்படும் நீரினளவு நீர் அன்றாடம் இறைக்கப்படுகிறது. நீர் விநியோகக் கிணறும் விவசாயக் கிணறுகளைப்போன்ற ஒன்றுதான். தமக்கு வேறொரு விதத்திலும் நீர்வசதியைக் கொண்டிராத யாழ்ப்பாண நகர மக்களுக்கு நீர் வழங்கும் ஏற்பாட்டை மறுக்கும் கோண்டாவில் விவசாயப் பெருமக்களின் தாராளச் சிந்தனையை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.

திருநெல்வேலி விவசாயப் பாடசாலையை சூழவுள்ள மக்கள் யாழ்ப்பாண நகருக்கு குடிநீர் வழங்குவதை ஏன் எதிர்த்துப் போர்க்கொடி ஏந்தவில்லையென்று தெரியவில்லை.

வீதியில் அமைக்கப்பட்ட குடிநீரைத் தமது வளவுகளில் வளர்க்கப்படும் பூச்செடிக்குப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் பரிதாபக் காட்சியை நாம் அன்றாடம் காணலாம்.

**யாழ்ப்பாணத்து நன்னீர் ஊற்றுக்கள்**

கீரிமலைக்கேணியில் நீராடும்போது நிலப்புறத்திலிருந்து நன்னீர் பாய்ந்து வருவதையும் கடல் பக்கத்திலிருந்து உவர்நீர் வருவதையும் காணலாம். நன்னீர் எப்படிப் பாய்ந்து வருகிறது என்பதை அறிய அதிசயமாக இருக்கிறதுதானே? மழைபெய்தவுடன் நீர் நிலத்தினூடாகக் கசிந்து உட்புகுந்து சுண்ணம்பாறையில் காணப்படும் நுண்றுழைகளில் நுழைகிறது. அவையனைத்தும் நிறைந்தவுடன் மேலதிக நீர் நிலத்திற்கு வெளியே அனுப்பப்படுகிறது. இப்படி வெளியேறும் நீரை ஊற்று என்கிறோம். இப்படியான நன்னீர் வெளியேற்றம் குடாநாட்டின் கடற்கரையோரமெங்கும் காணலாம். சிலவிடங்களில் வெளிப்படையாகப் புலப்படுகிறது வேறு இடங்களில் இவ்வெளியேற்றம் புலப்படும்படியாக இருப்பதில்லை.

இடத்தில் இப்படியான நன்னீர் வெளியேற்றம் மழைபெய்ததும் ஜனவரி. பெப்ருவரி. மார்ச் ஆகிய மூன்று மாதங்களில் துல்லியமாகத் தென்படும். மக்கள் இவ்விடத்தில் குதூகலத்துடன் நீராடுவதைக் காணலாம். இந்த நன்னீர் வெளியேற்றம் சிலகாலமாக நடைபெறுவது தடைப்பட்டுவிட்டது. இதற்கான காரணம் நீர் ஊற்று வேறொரு திசையில் பாயத் தொடங்கியதேயாகும். இப்படி வெளியேறும் நன்னீரை பயனுள்ள விதத்தில் எடுத்து மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டால் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்கலாம்.

- முற்றும் -

படிப்பகம்

www.padippakam.com



# ஈராக்: போர் இன்னும் முடியவில்லை

"நாயைப் போல பின்னங்கால்களுக் கிடையில் வாலைச் சுருட்டிக் கொண்டு அமெரிக்கா இராக்கை விட்டு வெளி யேறத்தான் போகிறது". ஸ்காட் ரீட்டர், ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்.

கேட்பதற்கே மிக இனிமையான இந்தக் காட்சியை நாம் காண முடியுமா? இது சாத்தியமா? கோடிக்கணக்கான உலக மக்களின் எதிர்ப்பை மீறி, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலை மீறி, தனது ஐரோப்பிய நண்பர்களை மீறி அமெரிக்க பிரிட்டிஷ் அரசுகள் இராக் மீது தொடுத்த போரில் அவர்கள் வெற்றி பெற்று விட்டனர். இராக் இன்னொரு காலனி நாடு.

பாக்தாத் வீதிகளில், இராக்கின் நகரங்களில் எங்கும் அமெரிக்க டாங்கிகள். இராக்கின் 'வைஸ்ராய்' அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டு விட்டார். இடைக்கால அரசொன்றை நியமிப்பதற்குத் தேவையான கைக்கூலி களை அவர் தேடிக் கொண்டிருக் கிறார். இந்நிலையில் ஸ்கார்ட் ரீட்டர் கூறுவது போன்றதொரு காட்சியை நாம் கற்பனை செய்தும் பார்க்க முடியுமா?

முடியும். அவ்வாறு கார்பலாவில் கூட்டப் பட்ட முதல் கூட்டத்திற்கே அமெரிக்கா எதிர்பார்த்த அளவு கையாட்கள் வரவில்லை என்ற உண்மையிலிருந்து அத்தகையதொரு காட்சியை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். மனித குல நாகரிகத்தின் தொட்டிலான மெசபடோமியாவில், 4000 ஆண்டு களுக்கு முன்னரே 'சுதந்திரம்' என்ற வொரு சொல்லை, கருத்தை உலகிற்கு அளித்த அந்த நாகரிகத்தின் வாரிசுகளான இராக் மக்களுக்குச் சுதந்திரம் வழங்குவதாக, கடற் கொள்ளைக்காரன் கொலம்பஸின் வாரிசுகள் அறிவித்தபோது அந்தக் கணமே அங்கேயே அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து சுதந்திரத்திற்காக 12 பேர் உயிர் துறந்தார்களே . அந்தச் செய்தியிலிருந்து அமெரிக்க நாய்களின் ஓட்டத்தை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும்.

சதாமின் மிகக் கொடிய சர்வாதி காரத் தின் கீழ் 25 ஆண்டுகள் அல்லல்பட்ட போதும், கோமாளி புஷ் எதிர்பார்த் ததைப் போல அமெரிக்க இராணு வத்தை இராக் மக்கள் பூச்செண்டு தந்து வரவேற்கவில்லை. புஷ்ஷின் புனை கதையை நம்பி சதாமிடமிருந்து இராக் மக்களுக்கு விடுதலை வாங்கித் தருவதற்கு வந்த அமெரிக்க இராணுவத்தின் சிப்பாய் ஒருவன் சொன்னான் "இராக் மக்கள் நன்றி கெட்டவர்கள்".

ஏமாளித்தனமான ஏகாதிபத்திய வாதிகளை இராக் மக்கள் நம்பி ஏமாந்த காலமொன்று இருந்தது. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் "துருக்கி ஆட்டோமான் பேரரசின் கொடுங் கோன்மையிலிருந்து உங்களை விடுவிக்கத்தான் தேவகுமாரர்களாகிய நாங்கள் வந்திருக்கிறோம்" என்று பிரிட்டிஷ்காரர்கள் கூறியபோது அதை நம்புவதற்குச் சில ஏமாளிகள் அன்று இருந்தார்கள். அந்த மடமை தெளியவும் பிரிட்டனுக்கெதிரான ஆயுதப் போராட்டம் தொடங்கவும் அன்று சில ஆண்டுகள் தேவைப்பட்டன. இன்றோ வெற்றித் திமிருடன் நிற்கும் இராணுவ டாங்கிகளை நேருக்கு நேர் எதிர் கொண்டு "அமெரிக்காவே வெளியேறு" என்று முழங்குகிறார்கள் இராக் மக்கள். போர் இன்னும் முடியவில்லை.

ஆயுதப் படைகளையும் கவச வண்டி களையும் எதிர்த்து நின்று நிராயுத பாணிகளான மக்கள் வெறுங்கையை உயர்த்தி முழக்கமிடுவதைப் போர் என்று சொல்ல முடியுமா?

ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டு வந்து அம்மணமாக்கி இருட்டறையில் தள்ளி, வாரக்கணக்கில் பட்டினி போட்டு, தாகத்தால் தவிக்க விட்டு அதன் பிறகு பத்து போலீசார் அவனைச் சுற்றி நின்று தாக்கி வீழ்த்துவதைப் போர் என்று அழைக்கலாமென்றால், வாயிலும் மூக்கிலும் ரத்தம் வழிய அடிபட்ட, நைந்து துவண்டு போன அந்த மனிதன் மெல்ல நிமிர்ந்து போலீசாரை ஒரு ஏளனப் பார்வை பார்த்தால் அந்தப் பார்வை தான் அவன் நடத்தும் போர்.

13 ஆண்டுகளாக இராக் மீது பொருளாதாரத் தடை இருக்கிறது. ஐ.நா.வின் அனுமதியின்றி ஒரு நெல்மணியையோ குண்டூசிகளையோ கூட அவர்கள் இறக்குமதி செய்ய இயலாது. உயிர்காக்கும் மருந்து களுக்குத் தடை விதித்ததால் பிறந்தவுடன் இறந்த குழந்தைகள் பல இலட்சம்.


பிழைத்து வளர்ந்து பள்ளி சென்றால் நோட்டுப் புத்தகம் கிடையாது- பென்சிலும் கிடையாது. காகித உற்பத்திக்குத் தேவைப்படும் வேதிப் பொருட்களும், பென்சிலில் உள்ள காரீயமும் இராணுவ நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுமென்பதால் அவற்றுக்கும் தடை. பொருளாதாரத் தடையின் வக்கிரத்துக்கு இது ஒரு சான்று.

1980 முதல் 1988 வரை அமெரிக்க ஆதரவுடன் சதாம் நடத்திய ஈரான்- இராக் போர், பின்னர் அப்பன் புஷ் நடத்திய வளைகுடாப் போர், அதன் பின் கடந்த 13 ஆண்டுகளில் மோனிகா லெவின்ஸ்கி பிரச்சினை உட்பட பல காரணங்களுக்காக அவ்வப்போது இராக் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடை காவு கொண்ட உயிர்கள்-இவை அனைத்துக்கும் தப்பி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் இராக்கின் மக்கள் தொகையில் சுமார் 60மூ பேர் சிறுவர்கள்-குழந்தைகள். மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் அன்றாடம் ஐ.நா. வழங்கும் இலவச உணவுக்குக் கையேந்தி நிற்கும் வறியவர்கள்.

இராக் இராணுவமோ, சீருடை தவிர அனைத்தையும் இழந்து விட்டது. பத்தாண்டுகளாக அமெரிக்காவின் கையாளாக இருந்து ஐ.நா. நடத்திய ஆயுதப் பரிசோதனையில் இராக் இராணுவத்தின் அரைஞாண் கயிறு உட்பட அனைத்தும் அறுத்தெடுக்கப் பட்டு விட்டன.

இத்தனையையும் உத்தரவாதம் செய்து கொண்ட பிறகும் அமெரிக்கச் சூரப்புலிகளுக்குத் தைரியம் வரவில்லை. துருக்கி, ஈரான் உள்ளிட்ட எல்லைப் பகுதி நாடுகளின் ஒத்துழைப்பை உறுதி செய்து கொண்டு, குவைத், குவெட்டார், சவுதி ஆகிய எல்லைப்புற நாடுகளின் தளங்களில் வந்து இறங்கினார்கள்.

உலகத்தையே பலமுறை அழிக்குமளவு ஆயுத பலம் கொண்ட அமெரிக்க வல்லரசு, ஏற்கனவே ஒருமுறை உலகத்தை ஆதிக்கம் செய்து அழித்த அனுபவம் கொண்ட பிரிட்டிஷ் வல்லரசு, அவர்களுடைய 3 லட்சம் துருப்புக்கள், 20,000 டன் வெடி மருந்துகள், இலக்குகளைக் குறி வைத்துத் தாக்கும்



அமெரிக்க ஆக்கிரமிப்பாளனே ஈராக்கை விட்டு வெளியேறு என ஒரு ஈராக்கிய பிரஜை அமெரிக்க சிப்பாயை நோக்கி ஆக்ரோஷத்துடன் கூறுகிறார்.

14,000 ஏவுகணைகள், 2000க்கும் மேற்பட்ட போர் விமானங்கள், இன்னும் டாங்கிகள், கவச வண்டிகள் இன்ன பிற...

இத்தனைக்குப் பிறகும் அவர்கள் இராக்கில் நுழையவில்லை. எல்லையி லிருந்தே ஏவுகணைகளை வீசிப் பின் உற்பத்தி நிலையங்கள், தொலைபேசி நிலையங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் . , உணவுக் கிடங்குகள், குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகிய அனைத்தையும் ஏவுகணைகளால் தகர்த்தார்கள். பிறகு பள்ளிகள், கடைவீதிகள், குடியிருப்புகள் மீதும் குண்டு வீசி ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றார்கள். அந்தப் பாலைவன மண்ணில் எஞ்சியிருக்கும் மக்களுக்குக் குடிநீர் கூட இருக்கக் கூடாது என்பதை உத்திரவாதம் செய்து கொண்டு, அதன்பின் தைரியமாக இராக்கில் காலடி எடுத்து வைத்தார்கள் அமெரிக்க, பிரிட்டிஷ் 'வீரர்கள்'!

போர் என்பது இரு தரப்பினர் பொருதும்



பக்தாத் நகரில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு படையினரால் ஈராக்கிய இளைஞர்கள் கண்கள் கட்டப்பட்டு துப்பாக்கி முனையில் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

நிகழ்வைக் குறிக்கும் சொல். இராக்கைப் பதின்மூன்று ஆண்டுகள் பட்டினி போட்டு, சூழ்ச்சியால் ஆயுதங் களைப் பறித்து அமெரிக்கா நடத்தி யிருக்கும் இந்த கிருஷ்ண பரமாத்மா வேலைக்கு வேண்டுமென்றால் வேறு பெயரிடலாம்; நிச்சயம் இது போர் அல்ல. மிதிபட்டு நைந்துபோன இராக்கின் மைந்தன், பீரங்கிக் குழாயின் முன் நிமிர்ந்து நின்று "அமெரிக்காவே வெளியேறு" என்று முழங்குகிறானே, இதுதான் போர். இந்தப் போர் இன்னும் முடியவில்லை.

உலகின் அதிநவீன இராணுவத்தின் ஹெலிகாப்டரை வேட்டைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார் ஒரு விவசாயி. சின்னஞ்சிறு நகரங்களுக்குள் நுழைவதற்கே அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவங்கள் 15 நாட்கள் போராடின. ஆனால் 50 இலட்சம் மக்கள் தொகை கொண்ட தலைநகர் பாக்தாத் மூன்றே நாட்களில் வீழ்ந்தது. "இது சதாம் உசேனுடன் அமெரிக்கா செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கை" என்ற இரகசியம் அம்பலமாகிச் சந்தி சிரிக்கிறது.

ஒரு சர்வாதிகாரியின் துரோகத்துக்காக இராக் மக்கள் தலைகுனியத் தேவை யில்லை. ஆனால் சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டவும், பூமிக்கடியில் அந்தச் சர்வாதிகாரி ஒளித்து வைத்திருக்கும் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கவும் போர் தொடுப்பதாகக் கூறி வரும் புஷ்ஷும் பிளேயரும்தான் இந்தப் பித்தலாட்டத்திற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்தப் 'பாக்தாத் ஒப்பந்தம்' உயிர்ப் பிச்சை வழங்கியிருப்பது சதாமுக்கல்ல; நகர்ப்புற கொரில்லா யுத்தத்தில், பாக்தாத் எனும் திக்குத் தெரியாத காட்டில், டாங்கிகள் நுழைய முடியாத அதன் சந்து பொந்துகளில் எலிகளைப் போலச் சுடுபட்டுச் செத்திருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான அமெரிக்கச் சிப்பாய்களுக்குத்தான் இந்தத் துரோக ஒப்பந்தம் உயிர்ப்பிச்சை வழங்கியிருக் கிறது.

பதின்மூன்று ஆண்டுகள் தாக்கப்பட்ட பின்னரும் தலைநிமிர்ந்து எதிர்க்கும் சமூகத்தை, பதின்மூன்றே நாட்களில் பயந்து உயிர்ப்பிச்சை கேட்ட கோழைகளாக அடக்கியாள முடியும்? எனவேதான் சொல்கிறோம். போர் இன்னும் முடியவில்லை.

இந்த மாபெரும் போரில், உலகின் மாபெரும் இராணுவத்தின் மாவீரர்கள் காட்டிய துணிவைக் கண்டு உலகமே கைகொட்டிச் சிரித்தது. தங்களுக் கெதிராக ஒரு தோட்டா சுடப்பட்டால் உடனே கண்ணை மூடிக் கொண்டு எட்டுத் திக்கிலும் ஓராயிரம் தோட்டாக் களை உமிழ்ந்தார்கள். பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், கோல் ஊன்றி நடக்கும் முதியவர்கள், ஆடுகள், கோழிகள் போன்ற எந்த வடிவத்திலும் தற்கொலைப் படை தங்களைத் தாக்கக் கூடுமென அஞ்சியதால் எல்லோரையும் எல்லாவற்றையும் சுட்டார்கள்.

ஒரு நியூயார்க் கட்டிடம் தகர்க்கப் பட்டதன் பீதியில் அலறிய அமெரிக்கா; பாக்தாத் நகரமே தகர்த்துத் தூளாக்கப் படுவதைக் கண்ட பிறகும் உயிருக்கஞ் சாமல் நாட்டைக் காக்க விரையும் இராக் மக்கள் ஒரு தோட்டாவைச் சந்தித்தவுடன் கண்ணில் பட்டவர்களை யெல்லாம் சுட்டுத்தள்ளும் அமெரிக்கச் சிப்பாய்கள்; ஓராயிரம் குண்டுகள் பொழிந்து கொண்டிருந்தபோதும் மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியில் ஒரு உயிரைக் காப்பாற்ற அறுவைச் சிகிச்சை செய்யும் பாக்தாத்தின் ஈடிணையில்லா மருத்துவர்கள்.

யாருக்கு யார் அடிபணிவார்கள்? சுய நலத்தின் முன் தியாகமும், கோழையின் கீழ் வீரமும் அடிபணிந்ததாக வரலாறில்லை. எனவேதான் சொல் கிறோம், போர் இன்னும் முடியவில்லை.

வென்றவர் யார் தோற்றவர் யார் என்றறிய கைகளைப் பார்க்காதீர்கள். கண்களைப் பாருங்கள். துப்பாக்கி என் றொரு பொருள் அமெரிக்கச் சிப்பாயின் கைகளில் இருப்பதையே பொருட்படுத் தாமல் "அமெரிக்கனே வெளியேறு" என்று முழங்குகிறார்கள். "இந்தக் குழந்தையை ஏன் கொன்றாய், உன்னுடைய புஷ் எங்கே, அவனைப் பதில் சொல்லச் சொல்" என்று முகத்துக்கு நேரே கையை நீட்டி சபிக்கிறார்கள். தொலைக்காட்சிகளில் நமக்குக் காட்டியது இவ்வளவு. காட்டப்படாதது எவ்வளவோ!

மக்களின் கண்களில் வெறுப்பு, கோபம். அவர்களை எதிர்கொள்ளும் சிப்பாய் களின் கண்களிலோ ஒருவித அச்சம், வெறுமை, தார்மீக ரீதியில் தோற்றுப் பின்வாங்கும் கண்களுக்கேயுரிய வெறுமை. அவர்கள் துப்பாக்கி ஏந்திய பிணங்கள். மக்களோ ஆயுதம் ஏந்தாத வீரர்கள்.

இத்தகைய சூழ்நிலைகள் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் புதியவையில்லை. எத்தனை டன் குண்டுகளை வீச வேண்டியிருக்கும், எத்தனை ஆயிரம் மக்களைக் கொல்ல வேண்டியிருக்கும் என்று போருக்கு முன்னர் திட்டமிடும் போதே, கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியுள்ளவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கான தந்திரங் களையும் சேர்த்துத்தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

அடிமைப்படுத்தப்பட்ட "மக்களின் உள்ளத்தையும் சிந்தனையையும் வென்றெடுப்பது" என்று இந்தத் தந்திரத்திற்குப் பெயரிட்டிருக்கிறார்கள். போருக்குப் பின் அமெரிக்க மேலாதிக்கத்தின் நியாயத்தையும், எண்ணெய் வயல்களையும் தனியார்மய மாக்குவதன் அவசியத்தையும் இராக் மக்களுக்குக் "கற்றுக் கொடுக்க வேண்டும்" என்று ஆலோசனை வழங்கியிருக்கிறது 'ஹெரிடேஜ்' எனும் அமெரிக்கக் கல்வி (ராணுவ) நிறுவனம்.

வன்புணர்ச்சியின் நியாயத்தையும், அதன் தவிர்க்கவியலாத தன்மையையும், அதனால் கிடைக்கக் கூடிய ஆதாயத்தையும் ஒரு பெண்ணுக்குப் புரிய வைத்து ஏற்கச் செய்ய முடியுமென்றால் அடிமைத்தனத்தை ஏற்குமாறு இராக் மக்களையும் பக்குவப்படுத்தலாம்.

'கற்பழித்தவனையே காதலிக்கச் செய்வது' என்ற இந்த ஆலோசனை அருவருக்கத்தக்கதாக நமக்குத் தோன்றக்கூடும். ஆனால் இந்தச் 'சவால்' பற்றித்தான் பி.பி.சி., சி.என்.என். தொலைக்காட்சிகளில் ராஜதந்திரிகளும் வல்லுநர்களும் அன்றாடம் விவாதிக் கிறார்கள்.

"வெறும் சோறு மட்டும் போதுமா சுதந்திரம் வேண்டாமா" என்று கம்பியூனிசத்திற்கு எதிராகச் சண்ட மாருதம் செய்தவர்கள் "சோறு போடு கிறேன் சுதந்திரத்தைக் கொடுத்துவிடு" என்று பேரம் பேசுகிறார்கள். கோக், பெப்சி, அமெரிக்க நுகர்பொருட்கள் ஆகியவற்றைச் சந்தையில் குவித்து "குடி, அனுபவி, அமெரிக்காவைக் காதலி" என்று இராக் மக்களுக்கு ஆசை காட்டத் திட்டமிடுகிறார்கள். ஆனால் உலகெங்கும் ஏற்கனவே அமெரிக்க மோகத்தில் கட்டுண்டு கிடந்த பலர் இந்த ஆக்கிரமிப்புப் போரைக் கண்டபின் பித்தம் தெளிந்து விட்டனர். அமெரிக்க, பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கெதிரான இராக் மக்களின் போர், அமெரிக்க, பிரிட்டிஷ் மேலாதிக்கத்திற்கெதிரான உலக மக்களின் போராட்டமாக வடிவெடுத்து விட்டது. காலனியாதிக்கமும் ஏகாதிபத்தியமும் ஒழியும் வரை இந்தப் போர் முடியப் போவதில்லை.

உலகமயவாக்கம், உலகு தழுவிய சுதந்திரம் என்ற முதலாளித்துவப் பிதற்றல்களை இந்த ஆக்கிரமிப்பு துடைத்தெறிந்துவிட்டது. "முதல் உலகப் போர் என்பது நாடுகளை மறுபங்கீடு செய்து கொள்வதற்கு ஏகாதிபத்தியங்கள் நடத்தும் நாய்ச்சண்டை" என்று லெனின் கூறியபோது அதை ஏற்க மறுத்தவர்கள் ஏராளம். இரண்டாம் உலகப் போரின் போது பாசிச எதிர்ப்பு என்ற முகமூடிக்குள் தங்கள் ஏகாதிபத்திய முகத்தை ஒளித்துக் கொண்டன அமெரிக்க, பிரிட்டிஷ் போன்ற அரசுகள். பனிப்போர் காலத்தில் 'கம்யூனிச பூதத்தைப் பற்றிக் கட்டுக்கதை பரப்பித் தங்களை ஜனநாயகவாதிகளாகச் சித்தரித்துக் கொள்வதிலும் இவர்கள் வெற்றி பெற்றனர். நியூயார்க் தாக்குதலுக்குப் பின் பயங்கரவாதத்திற் கெதிரான உலகப் போர் என்று கூறி ஆப்கான் ஆக்கிரமிப்பையும் கூட நியாயப்படுத்த முடிந்தது.

ஆனால் இந்த இராக் ஆக்கிரமிப்புப் போரிலோ "பேரழிவு ஆயுதம்-இராக்கின் சுதந்திரம்" என்ற எந்தக் கட்டுக்கதை யும் செல்லுபடியாகவில்லை.

தொடர்ச்சி 10ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# பெண் ஒடுக்குமுறையின் வடிவம்
## வரதட்சணை – சீதனம்

அண்மையில் இந்தியத் தலைநகர் டில்லியில் இருந்து ஒரு பரபரப்பூட்டும் செய்தி படத்துடன் வெளி வந்திருந் தது. பன்னிரண்டு லட்சம் ரூபா பணம் வரதட்சணையாக வைக்கும்படி வற்புறுத்திய மணமகனை மணப் பந்தலில் வைத்து நிராகரித்துவிட்டு மணப்பெண் துணிச்சலுடன் கழுத்து நீட்ட மறுத்து வெளியேறினாள். கொம்பியூட்டர் எஞ்சினியரான அம் மணப் பெண்ணின் துணிவான செயலுக்கு பாராட்டுக்களும் வரவேற்பும் கிடைத்ததாக அச் செய்தியில் காண முடிகிறது.

இந்தியாவில் வரதட்சணைக் கொடுமை விபரிக்க முடியாத வகை களில் இருந்து வருகின்றது. பெண் ஒடுக்கு முறையின் உச்ச வடிவமாகக் காணப்படும் இவ் வரதட்சணையால் நாளாந்தம் இந்தியப் பெண்கள் குடும்பச் சச்சரவு, அமைதியின்மை, வன்முறை, படுகொலைகள், தற்கொலைகள் என்பனவற்றை அனுபவித்து வருகின்றனர். இதற்கு எதிராகச் சட்டம் கூட அங்கு உண்டு. ஆனால் இந்தியப் பண்பாடு, இந்து மதம், பழமை, பாரம்பரியம் என்பன வற்றின் பெயரால் இந்த வரதட் சணைக் கொடுமை பெண்கள் மீதான ஒடுக்கு முறையாக நீடிக்கின்றது.

நமது நாட்டில் இது சீதனம் என்னும் பெயரில் காணப்படுகின்றது. இச் சீதனக் கொடுமை பல்வேறு அளவு களில் பல்வேறு சமூக, இன மக்களிடையேயும் நிலவி வருகின்றது. குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் கனதியுடையதாகக் காணப்படு கின்றது. பெண்ணுக்கு நிலம், வீடு, பணம் என்பனவற்றை சீதனம் என்ற பெயரில் சட்டபூர்வமாக எழுதும் நடை முறை இன்றும் இருந்து வருகின்றது. இதனை நியாயப்படுத்துவோரும் அதற்குத் துணையாக தேசவழமைச் சட்டத்தைக் காட்டுவோரும் இருந்து வருகிறார்கள்.

ஆடு, மாடுகளை விலை பேசிப் பெற்றுக் கொள்வது போன்று பெண் களைத் திருமணம் செய்யும் போது சீதனம் எவ்வளவு என்பதில் பலத்த பேரம் பேசுதல் இடம்பெறுவது இன்றும் துன்பகரமானதாகவே காணப்படுகின்றது. வீடு, நிலம், பணம், பவுண் நகைகக்கள் எனபன இச் சீதனத்தின் மையப் பொருட்களாகும். இவை மேலே செல்லச் செல்ல விரிவடைந்து செல்லும். இவ்வாறு ஒரு பெண்ணுக்கான சீதனம் பேசப்பட்டு வரையறை செய்து சட்ட பூர்வமாக எழுத்தில் இடப்படும்போது கூட அப்பெண்ணின் கல்வி, குணம், நடை, உத்தியோகம், வருமானம் என்பவை பெரிதாகக் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அடிமை கொள்ளும் பெண்ணுக்கு அவை யாவும் முக்கியம் அல்ல. சீதனமே மைய விடயமாகி நிற்கும் கொடுமை சமூக நடைமுறையாகிக் காணப்படுகின்றது. இதனை பெண்கள் மீதான ஒடுக்குமுறை என்றோ ஒரு வகை அடிமைத்தனம் என்றோ யாராவது வாய்மொழிய முற்பட்டால் பெற்றோர் முதல் தரகர், ஊரார் வரை சீதனம் கொடுப்பதை நியாயப்படுத்துவதைத்தான் கேட்க முடிகிறது. "பெண்ணைப் பெற்றால் கொடுக்க வேண்டியதைக் கொடுத் தே ஆக வேண்டும்". "எல்லாம் பொருத்தம் சீதனத்தில் குழப்பமாம்". "சீதனம் சரியாய்க் கொடுக்காததால் அவளை அவன் துரத்திப் போட்டா னாம்". "சீதனப் பிரச்சினையால் தானாம் அவள் மருந்து குடிச்சு செத்தவளாம்". "நாலு பெட்டை யளையும் கரை சேர்க்கத் தானே மூண்டு பெடியளும் வெளி நாட்டிற்குப் போனவங்கள்". "நல்ல வடிவு, நல்ல உத்தியோகம், மாதம் எண்ணாயிரம் சம்பளம் ஆனால் சீதனம் இல்லை யெண்டு அதுகள் கலியாணம் இல்லாமல் இருக்குதுகள்". "சீதனம் கொடுக்க வழி இல்லாமல் பாவம் குமருகளை வைச்சு அதுகள் முழுசுதுகள்". "குமருகளும் பெரு மூச்சு விட்டபடி இருக்குதுகள்". "ஏதோ இருக்கிறதை வித்துச் சுட்டாயினும் கேட்ட சீதனத்தைக் கொடுத்து கரை சேர்க்க வேணும்".

இவ்வாறு சீதனக் கொடுமையானது ஆயிரம் கதைகளைக் கூறி நிற்பதையே நமது சமூகச் சூழலில் காண முடிகிறது. இக் கொடுமையால் பெண்கள் அனுபவிக்கும் துன்பச் சுமைகளும் சோகங்களும் தொடர் கின்றன. சொத்து, சுகம், சுயநலம் என்பனவற்றை மையப்படுத்தி நிற்கும் இன்றைய இழிவு கொண்ட சமூக அமைப்பிலே சீதனமுறை ஒரு கேடு கெட்ட சமூக நடைமுறை என்பது உணரப்படல் வேண்டும். இதற்கு எதிராக கருத் தாலும் நடைமுறை யாலும் செயல்பட பெண்களை விட இளம் தலைமுறை ஆண்கள் முன்வரல் வேண்டும்.

# பாடசாலை
## சீருடை இறக்குமதி

2004ம் ஆண்டிற்குத் தேவையான பாடசாலை சீருடையில் 60% சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது. இதனால் ஏற்கனவே பல பாரிய நெருக்கடிக்குள் தவிக்கும் உள்ஊர் புடவை உற்பத்தியாளர் ஆத்திரமடைந் துள்ளனர்.

பாடசாலை சீருடையில் உற்பத்தி செய்து தர முடியுமென 50 உற்பத்தியாளர் தெரிவித்திருந்தனர். ஆனால் கோட்டா சபை எட்டு உற்பத்தியாளர் களை மட்டும் தெரிவு செய்திருந்தது. உற்பத்தியாளர் ஏற்கனவே உற்பத்தியை ஆரம்பித்திருந்தனர். இதற்கிடையில் கல்வி அமைச்சு அதிகாரிகள் சீனாவிலிருந்து சீருடையை தொடர்ந்தும் இறக்குமதி செய்யத் தீர்மானித்திருப்பதாக ஒரு விசேட கூட்டத்தில் தெரிவித்திருந்தனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் ஆட்சேபத்தைத் தொடர்ந்து யூலை 2002ல் உள்ஊரில் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட சீருடையை கொள்வனவு செய்யுமெனவும் மிகுதி மட்டுமே சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

யூலையளவில் 30 இலட்சம் மீட்டர் புடவை உற்பத்தி செய்யப்பட்டு விட்டதாகவும் நாட்டின் முழுத் தேவை 80 இலட்சம் மீட்டர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்தால் நாட்டின் முழுத் தேவையையும் உற்பத்தி செய்து தர முடியும் எனப் புடவை உற்பத்தியாளர் அறிவித்திருந்தனர். ஆனால் 2002ல் 50 இலட்சம் மீட்டர்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

சீனாவிடமிருந்து ஒரு மீட்டர் 67 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப் படுகிறது. உள்ளூர் உற்பத்தியாளர் 75 ரூபாவிற்கு துணியை வழங்க முடியுமென்று முன்னர் அறிவித் திருந்தனர். அண்மையில் அறிவித்துள்ள 20% சலுகையின் மூலம் உள்ஊர் உற்பத்தியாளர் சீனாவின் விலையை விட குறைந்த விலையில் புடவையை விநியோகிக்க முடியுமென்றும் தெரிவிக்கின்றனர்.

அன்னியச் செலாவணி நெருக்கடியில் இருக்கும் போது உள்ஊர் உற்பத்தியை ஊக்குவிக்காமல் இறக்குமதி செய்ய அதிகாரிகள் கங்கணம் கட்டி நிற்பதன் அர்த்தம் என்ன?

உள்ளூர் உற்பத்தி எக்கேடு கெட்டாலும் அந்நிய இறக்குமதியால் தரகுப் பணம், தாஜாப் பணம், வெட்டுக் கொத்துப் பணம் எனப் பல வழிகளிலும் உயர் அதிகாரிகளுக்குப் பணம் வந்து சேர்ந்தால் போதுமானதே. இதுவே தாராளமயப் பொருளாதாரத்தின் அச்சாணியாகும். நாடும் மக்களும் அல்ல தமது பணப் பைகளே முக்கியம். மக்கள் விழிப்புற்று மௌனம் கலைக்கும் வரை இந்த இழி நிலை தொடரும் வளரும்.

# வடபுலத்தில் கண்டதும் கேட்டதும்

வடபுலத்திலே தொடரும் சாதியம் பற்றி சிலர் அறவே அக்கறைப்படுவ தில்லை. வேறு சிலர் அப்படி ஒன்று இல்லை என வாதிடவும் செய்வர். மற்றும் சிலர் அதனைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்து அதெல்லாம் விடுதலைப் போராட்டத் தால் மறைந்து விட்டது எனவும் கூறிக் கொள்வர். எவ்வாறு மறைத்தாலும் மறுத்தாலும் சாதியும்-தீண்டாமையும் தமிழர்களிடையே குறிப்பாக வடபுலத்தில் தனது அசிங்கங்களை அரங்கேற்றிக் கொண்டே இருக்கின்றன. இதோ அண்மையில் அவதானிக்கப்பட்ட சில சம்பவங்கள்.

* வலி – மேற்கில் ஒரு கோவிலில் பட்டிமண்டபம் நிகழ்த்தச் சென்ற இளைஞர் குழுவினரை கோவிலுக் குள் அந்நிர்வாகம் அனுமதிக்க வில்லை. அத்துடன் அவர்களுக்கு உணவு வழங்குவதில் சங்கடம் ஏற்பட்டு வழங்கப்படவில்லை. காரணம் அப்பட்டிமண்டபக் குழுவில் தாழ்த்தப் பட்ட இளைஞர்-மாணவர் அடையாளம் காணப்பட்டமையாகும்.

* வலி -கிழக்கு புத்தூர் பகுதியில் தகரம் பிள்ளையார் கோவிலில் சுவாமி தூக்க முற்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தடுத்து நிறுத்தப் பட்டதால் இரு தரப் பினரிடையே சச்சரவும் கைகலப்பும் இடம்பெற்றது. மேற்படி கோவிலைச் சுற்றி வாழ்ந்து வருவோர் தாழ்த்தப் பட்ட மக்களாவர்.

* கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி முடித்து மீண்டும் பாடசாலைகளுக்கு கற்பித்தலுக்குச் செல்ல ஆசிரியர்கள் தயாராகி வருகிறார்கள். தமக்கு எந்தப் பிரதேசப் பாடசாலை கிடைக்குமோ தூரம் தொலைவோ என ஆசிரியர்கள் யோசனையுடன் இருந்து வருகிறார்கள். இதனிடையே ஒரு இளம் ஆசிரியை தனது சக ஆசிரியை களிடம் கூறிய விடயம் தூக்கிவாரிப் போட்டது. தனது வீட்டிற்குப் பக்கத்தில் முன்பு கல்வி கற்பித்த அந்த பாடசாலைக்கு மீண்டும் நியமனம் கிடைத்தால் அங்கு செல்லமாட்டேன். எவ்வளவு தூர மென்றாலும் வேறு பாடசாலைக்குச் செல்வேன் என்றார். காரணம் கேட்டபோது அவரிடம் இருந்து வந்த பதில் "அந்தப் பாடசாலை 'மற்றதுகள்' படிக்கும் பாடசாலை" என்பதாகும். அதில் கற்பித்தால் தனது உறவினர் கள் தன்னைக் கேலி செய்கிறார்கள். அத்துடன் வெளியார் தன்னையும் குறைந்த சாதி என நினைத்துக் கொள்கிறார்கள் என்றும் கூறினார் அந்த ஆசிரியை.

* புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர் மன்றத் தலைவராக ஒரு தாழ்த்தப்பட்ட மாணவன் தெரிவு பெற்றதால் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதனால் வருடாந்த மாணவர் ஒன்று கூடல் பின்போடப்பட்டு வந்தது. இது பற்றி புதியபூமி ஏற்கனவே அம்பலப்படுத்தியது. அதன் காரணமாக சென்ற வருடத்திற்கான மாணவர் ஒன்று கூடல் அண்மையில் நடாத்தப்பட்டது. அது ஒரு புது வகையானதாக இருந்தது. அதாவது மாணவர் ஒன்று கூடலுக்கான தலைமை முன்பு கூறப்பட்ட மாணவத் தலைவனின் தலைமையில் இடம்பெறவில்லை. பதிலாக நான்கு பிரிவுகளில் இருந்தும் நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டு கூட்டுத் தலைமையில் நடாத்தப்பட்டது. இந்தக் கூட்டுத் தலைமை மூலம் தாழ்த்தப்பட்ட மாணவர் தலைவனின் தலைமை சடையப்பட்டது. • • • • • • •




# பாட்டாளி வர்க்கக் கட்சி தேவையா?

பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே சோஷலிச நிர்மாணத்தின் போது வெகுசனங்களுக்குத் தலைமை தாங்கி வழிகாட்ட முடியும் என்பது மாக்ஸிய நிலைப்பாடு. அது மட்டுமில்லாமல், சோஷலிசக் காலகட்டத்தின் போது அதாவது முதலாளிய அரசு தூக்கி எறியப்பட்டு அரசு என்ற ஒன்று இல்லாது ஒழியும் கம்யூனிஸ சமுதாயத்தின் தோற்றம் வரை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பதை ஏற்க மறுக்கும் எவரும் மாக்ஸியவாதியல்ல என்பது லெனினின் திட்டவட்டமான கருத்து. இதை மறுத்தவர்களுள் திரிபுவாதிகள் முக்கியமானவர்கள். ஸ்தாலினுக்குப் பின் குருஷ்ச்சொவ் கும்பல் சோவியத் யூனியனில் அதிகாரத்தைத் தனதாக்கிக் கொண்ட பின்பு, பாராளுமன்றப் பாதை மூலம் சோஷலிசத்தை அடைவது பற்றிய மயக்கம் எல்லாத் திரிபுவாதிகளையும் பற்றிக் கொண்டது. அது தவிர்க்க முடியாமலே திரிபுவாதிகளது அரசியற் சந்தர்ப்பவாதத்துக்கும் பூரணமான அரசியற் சீரழிவுக்கும் இட்டுச் சென்றது. அது மட்டுமில்லாமல், உலகளாவிய முறையில் சோஷலிசம் பற்றியும் கம்யூனிஸ்ட் கட்சிகள் பற்றியும் அவநம்பிக்கைக்கு வித்திட்டது.

இன்று மாக்ஸியம் பற்றியும் இடதுசாரிக் கட்சிகள் பற்றியும் முன்வைக்கப்படும் விஷமப் பிரசாரங்கள் மட்டுமில்லாமல் நியாயமான விமர்சனங்களும் மேற்குறிப்பிட்ட வரலாற்று அனுபவத்தைச் சார்ந்தே எழுகின்றன. இந்த நிலையிற், சோஷலிசப் புரட்சியை ஏற்பதாகச் சொல்கிறவ்ரகள் சிலரிடமிருந்து கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று தேவையா என்ற கேள்வியும் எழுகிறது. இது ஒருபுறம் அரச மறுப்புக்காரர்கள் (அனாக்கிஸ்ற்றுகள்) வற்புறுத்தி வந்துள்ள "எழுந்தமான புரட்சி" பற்றிய கொள்கை ஒட்டியது. இப்போது பின்நவீனத்துவத்தின் வாயிலான "பெருங்கதையாடல்களின் மறுப்பு" என்பது முதல் "சகல விதமான அதிகாரங்களையும் எதிர்ப்பது" என்ற பேரில் ஒரு போராட்ட இயக்கத்துக்கும் போராட்டத்தின் மூலம் உருவாக்கும் அரசுக்கும் எதிரான ஒரு கோஷமாகி விட்டது. இக் குரல் எல்லா அதிகாரங்களையும் எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்டாலும் முதலாளிய அரச அதிகாரத்தையும் ஏகாதிபத்தியத்தையும் முறியடிப்பதற்கான ஒரு பாதையைக் காட்டாத அளவில், அது செய்ய முனைவது என்ன? அது முதலாளியத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான சக்திகளைப் பலவீனப்படுத்த முயல்கிறதல்லவா!

மறுபுறம், பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்பது பாட்டாளி வர்க்கத்தின் பேரில் மட்டும் செயற்படுகிற ஒரு கட்சியாக இயங்குமானால் அது பழைய திரிபுவாதக் கட்சிகள் போல ஆகிவிடும் அபாயம் உள்ளது. இந்த அபாயம் பற்றி லெனினும் அவரை விடத் தெளிவாகவும் விளக்கமாகவும் மாஓ சேதுங்கும் கூறியிருக்கிறார்கள். அந்த அபாயத்துக்கு எதிரான வழியும் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. கட்சிக்குள், சனநாயக மத்தியத்துவம் விமர்சனம்–சுயவிமர்சனம் என்ற நடைமுறைகள், கொள்கையளவில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுப்பாடானதாகவும் அதேவேளை சனநாயகமானதாகவும் வைத்திருக்க அவசியமானவை. ஆனால் கட்சிக்குள் அதிகாரத்துவப் போக்குகள் தலைதூக்குவதற்கு வசதியான சூழ்நிலைகள் முற்றாக ஒழிந்து விடமாட்டா. குறிப்பாக, ஒரு கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்போது, கட்சி அலுவலர்களும் அரச நிருவாகிகளும் பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்திலிருந்து வழுவி முதலாளியச் சிந்தனைகட்குத் தமது சிந்தனையில் இடமளிக்க இடமுண்டு. எனவே சோஷலிசத்திற்கு எதிரான சக்திகள் தூக்கி எறியப்பட்ட வர்க்கத்திலிருந்து மட்டுமல்லாமல் அகன் சிந்தனைகள் பாட்டாளி வர்க்கத் தலைமையுள் ஊடுருவுவதன் மூலமும் தொடர்வது தவிர்க்க இயலாதது.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான கால இடைவெளியில் சோவியத் யூனியன் முதல் மக்கள் சீனம் வரை இது நடந்திருக்கிறது. இதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இதிலிருந்து என்ன முடிவுகட்கு வருவது, எந்தத் திசையில் நகருவது என்பதே நம்மை எதிர்நோக்குகின்ற சவால்கள்.

சோஷலிசத்துக்கான பாதையில் ஏற்படும் பின்னிடைவுகளைக் கண்டு தடுமாறுகிற ஒருவர் தனது தடுமாற்றத்தை நியாயப்படுத்தும் விதமாக நம்பிக்கையீனத்தை மற்றவர்கள் நடுவில் விதைப்பதோடு மட்டுமில்லாது உறுதியோடு செயற்படுகிறவர்களை எதிர்ப்பதிலும் மும்முரமாக இருப்பார்கள். அவர்களுடைய இத்தகைய காரியங்களில் அவர்கட்கு உதவியாகச் சில சிந்தனைமுறைகளும் வந்து சேருகின்றன.

நிச்சயமின்மையையும் குழப்பத்தையும் முதன்மைப்படுத்தும் ஒவ்வொரு சிந்தனைமுறையும் புரட்சிகரச் சக்திகளின் ஒவ்வொரு பின்னிடைவின் போதும் தலைதூக்குகின்றன. இவற்றை உறுதியாக எதிர்த்து நின்று அம்பலப்படுத்துவதன் மூலமே புரட்சிகர இயக்கம் முன்னே செல்ல முடிகிறது.

பாட்டாளி வர்க்கக் கட்சி தேவையா என்று கேட்கிறவர்கள் சிலர் தாங்கள் சார்ந்திருக்கிற என்.ஜீ.ஓ. அமைப்புக்கள் தேவையா என்று கேட்பதில்லை. போராட்டங்களிலிருந்து அரசியலைப் பிரிப்பதிற் கண்ணுங் கருத்துமாக இருக்கிறவர்கள்தான் பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையிலான ஒரு வலிய அரசியல் அமைப்புப் பற்றி அஞ்சுகிறார்கள். அது போலவே வர்க்கப் போராட்டத்தை நிராகரிக்கிற தலித்திய, பெண்ணிய அமைப்புகளும் தேசியவாதிகளும் வர்க்க அடிப்படையிலான அரசியற் பார்வை தங்களது குறுகிய நலன்கட்கு விரோதமாகச் செயற்படும் என்று அஞ்சுகிறார்கள்.

பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்று இல்லாமல் உலகில் எங்கேயும் இதுவரை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்ததில்லை. முதலாளியத்தைத் தூக்கி எறியாமல் எந்தச் சமூக அநீதியையுங் களைய முடியாது என்பது ஒவ்வொரு உலக நெருக்கடியாலும் முக்கியமான வரலாற்று நிகழ்வாலும் நிறுவப்பட்டு வருகிறது.

மறுபுறம், ஒரு புரட்சிகரப் போராட்டத்தில் ஒரு கட்சி வகிக்கக்கூடிய பங்கு என்ன என்பது பற்றிய தெளிவு மாக்ஸிய லெனினியவாதிகளுக்கு அவசியமானது. முன்கூட்டியே இன்னின்ன விதமாக அது அமைய வேண்டும் என்று எவருமே கூற இயலாது. ஆயினும் கடந்த நூற்றாண்டின் அனுபவங்கள் சில விடங்களை நமக்கு வற்புறுத்துகின்றன.

சிந்தனைத் தளத்தில், மாக்ஸிய லெனினியச் சிந்தனையின் வழிகாட்டலின் ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டின் படு பிற்போக்கான சக்திகட்கும் எதிரான மிக விரிவான ஐக்கிய முன்னணியும் குறைந்தபட்ச வேலைத் திட்டம்: போராட்டத்தின் குறுகிய கால இலக்குகட்கும் நீண்டகால இலக்குகட்குமிடையிலான தெளிவான பார்வையும் அதையொட்டிய போராட்ட உபாய முறைகளும் முக்கியமானவையாகும்.

சமூக யதார்த்தங்களைச் சரிவர விளங்கிக் கொள்வதற்குச் செம்மையான ஒரு வரலாற்றுப் பார்வையும் இயங்கியல் அணுகுமுறையும் அவசியம். மற்றவர்களின் அநுபவங்களினின்று கற்பது மட்டுமன்றித் தமது அநுபவங்களினின்று கற்பதற்கும் அவ் அநுபவங்களது பொதுமையான பண்புகளையும் குறிப்பான வேறுபாடுகளையும் தெளிவாக அடையாளங்காண வேண்டும். இதன் மூலம் ஒருபுறம் ஏட்டுச் சுரைக்காய்த்தனமான பார்வையும் மறுபுறம் எல்லாவற்றையும் தனித்தனியே நோக்கிக் குழம்பிப் போகிற முனைப்பும் தவிர்க்கப்படுகின்றன.

நம்முன்னே உள்ள கேள்வி, பாட்டாளி வர்க்கக் கட்சி தேவையா என்பதல்ல. மாறாகப், பாட்டாளி வர்க்கக் கட்சி எப்படி அமைய வேண்டும் என்பதே.

கடந்த காலப் பின்னடைவுகளால் ஒதுங்கி நிற்பவர்களிற் பலரை மீள வென்றெடுப்பது அவசியமானதும் இயலுமானதுமாகும். அதற்கான நம்பிக்கையை ஊட்டுவதற்குச் சரியான கொள்கைகள் மட்டுமில்லாது வலுவான போராட்ட நடைமுறையும் முக்கியமானதாகும்.

– இமயவரம்பன் –

படிப்பகம்

www.padippakam.com



# யூ. என். பி. ஆட்சியின் வரி மன்னிப்பு
## பெருமுதலாளிகளுக்கு கொண்டாட்டம்

யூ.என்.பி. ஆட்சியின் பெரு நன்மைகளையும் சுகபோகங்களையும் பெரு முதலாளிகளும் தரகு வர்த்தகர்களும் வசதி படைத்தோருமே அனுபவித்துக் கொள்வதே வழமை யானதாகும். இந்த ஆட்சி பதவிக்கு வந்ததும் வட்டி வீதங்களைக் குறைத்தும். வரிச் சலுகைகளைச் செய்தும் அரச சொத்துக்களை மிகச் சொற்ப பணத்திற்கு விற்றும். அந்நிய முதலீடுகளுக்குப் பெரும் சலுகை களைச் செய்தும் உலக வங்கியின் ஆணைப்படி செயற்பட்டும் வந்துள்ளதை அரசியல். பொருளாதார ஆய்வாளர்கள் புரிந்து கொள்வர். தென் ஆசியாவிலேயே அமெரிக்கா வுடன் சுதந்திர வர்த்தக உடன் படிக்கை ஒன்றைச் செய்வதற்குத் தகுதியுள்ள நாடென அமெரிக்க நிர்வாகம் நற்சாட்சிப் பத்திரம் வழங்கியதில் இருந்து யூஎன்.பி. அரசு எத்தகைய ஏகாதிபத்திய விசுவாசம் கொண்டது என்பதை ஒருவரால் விளங்கிக் கொள்ள இயலும்.

இந்தச் சூழலிலேயே ரணிலின் அரசாங்கம் அறிவித்துள்ள உள்நாட்டு இறைவரி விசேட ஏற்பாடுகள் பத்தாம் இலக்கச் சட்டம் பற்றிப் பேச வேண்டியுள்ளது.

இலங்கையில் பல்வேறு வரிகள். தீர்வைகள். தண்டங்கள். அந்நியச் செலவாணி. சுங்கத் தீர்வை போன்றவை அடங்கலாக இருபத்தியாறு சட்டங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. இத்தனை சட்டங்களின் மூலமாக வரி. தீர்வை. தண்டம் என்பவற்றுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டோர் செய்ய வேண்டியது 2002ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதியிலிருந்து தமது சொத்து. கொடுப்பனவு தொடர்பான ஒரு பிரகடனத்தை 2003ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதிக்கு முன் வெளியிட வேண்டும். அவ்வாறு வெளியிடப்படும் பிரகடனத்தை இறைவரித் திணைக்களம் எதுவுவித கேள்வியுமின்றி ஏற்றுக் கொள்ளும்.

இவ்வாறு செய்வதன் மூலம் விளைவு என்ன?

1. 31.03.2002க்கு முன் மேற் கொண்ட விசாரணைகள் மீளப் பெற்றுக் கொள்ளப்படும்.
2. 31.03.2002க்கு முன் மேற் கொள்ளப்பட்ட வழக்குகள் மேற் கொண்டு நடவடிக்கைக்குட் படாது மீளப் பெற்றுக் கொள்ளப்படும்.
3. குறித்த 26 சட்டங்களில் ஏதாவது ஒன்றில் விதிக்கப்பட்ட தண்டம் செலுத்தப்படாத பட்சத்தில் அவை தற்போது செலுத்த வேண்டிய தில்லை.
4. வரி தொடர்பான தகராறுகள் 31.03.2002க்கு முற்பட்டதாயின் சம்பந்தப்பட்ட நபரின் கூற்றைத் திணைக்களம் ஏற்றுக் கொள்ளும்.
5. வரியாளரின் 31.03.2002க்கு முற்பட்ட எந்த ஒரு விடயமும் விசாரணைக்குட்படாது.
6. பணம். சொத்து எவ்வாறு கைக்கு வந்தது என்ற விபரம் கொடுக்கத் தேவையில்லை.
7. பொய்யான விபரங்கள் கொடுத்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள் கள் சம்பந்தமான தண்டங்கள் இதுவரை செலுத்தப் படாவிடினும் அவை செலுத்த தேவையில்லை.
8. இறக்குமதித் தீர்வையென்றாலும் வரியிறுப்பாளர் கூறும் பிரகடனத் தின் படி தண்டனைக்குள்ளாக மாட்டார்கள்.
9. நாட்டிலுள்ள சட்டங்களை மீறிய பெருமுதலாளிகளின் சொத்துக்கள் யாவும் சட்டபூர்வமாக்கப்படுகின்றது.
10. இந்த வரி விலக்குகள் மூலம் ஐயாயிரத்து அறுநூறு கோடி ரூபாய்கள் (5.600) அரசாங்கத் திற்கு கிடைக்காமல் போய்விடும்.

* நாட்டில் பொருளாதார நெருக்கடி எனக் கூறிக் கொண்டு வியாபாரிகளுக்கும். சட்டவிரோதமாகப் பணம் சேர்த்தவர் களுக்கும் இப்பாரிய தொகையை வழங்குவதென்பது தேர்தல் காலங்களில் யூஎன்.பி. க்கு செலவு செய்ததற்கு கைமாறாக செய்யும் செய்கையாகும்.

* கள்ளக் கடத்தலானாலும். அன்னியச் செலவாணி மோசடி செய்தாலும். போதைப் பொருள் சம்பந்தப்பட்ட மோசடியென்றாலும். சம்பந்தப்பட்ட அனைவரும் முன்னைய குற்றச் செயல்களிலிருந்து சட்டபூர்வ மாக விடுதலை பெறுகின்றனர்.

* சட்டத்தை மீறியவர்கள் 2003 மார்ச் 31ம் திகதியில் மேற்கொண்ட பிரகடனம் மூலம் சட்டபூர்வமாக்கப் படுகின்றனர்.

போதைப் பொருள் வியாபாரம் தினம் ஒன்றிற்கு ஐந்து கோடி ரூபாய் என உத்தியோகபூர்வமாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் நிச்சயமாக பெரும்புள்ளிகள் உள்ளனர். இந்தப் புள்ளிகளில் அமைச்சர்கள். பாராளு மன்ற உறுப்பினர்கள் முதல் அதி உயர் அதிகாரிகள் வரை உள்ளடக்கம்.

ஒரே தினத்தில் ஏகப்பட்ட மோசடிக் கனவான்கள் புனிதர்களாகவுள்ளனர். திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் யார் யார் பயன் பெறுகின்றனர் என்பதை மக்கள் இப்போதாவது உணர்வார்களா?

# துரோகத்தின் வரலாற்றை மீள எழுதுதல்: தமிழ்க் காங்கிரஸின் கை வண்ணம்

மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்ததில் தமிழ்க் காங்கிரஸ் செய்த துரோகம் பற்றிய கதைகளை மாற்றி எழுதுவதில் அதன் புதிய தலைமுறை மும்முரமாக இருக்கிறது. இந்தத் துரோகத்தின் வரலாறு பற்றிய தமிழ்க் காங்கிரஸ்– தமிழரசுக் கட்சி விவாத மாகவே அவர்கள் இதைப் பார்ப்பது அதிசயமில்லை. ஆனால். மலையக மக்களுக்கு வடக்கு-கிழக்கு தமிழ்ப் பாராளுமன்றத் தலைவர்கள். குறிப்பாக தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள். செய்த துரோகத்தை மூடிக்கட்டும் முயற்சியில் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லுவது இதுதான்:

பிரசாவுரிமைச் சட்டத்திற்கு எதிராக ஜி.ஜி.பொன்னம்பலமும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும். ஈ.எம்.வி.நாகநாதனும் வாக்களித்தனர் என்று சொல்லும் போது சில முக்கியமான உண்மைகள் நழுவி விடுகின்றன.

முதலாவதாக பொன்னம்பலமும் செல்வநாயகமுமே பிரதிநிதிகள் சபையில் இருந்தனர். நாகநாதன் மூதவை உறுப்பினர். எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஏழு தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களில் இரண்டு பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்து எப்படி? இது காங்கிரஸின் அனுமதி இல்லாது மற்றோர் நடந்து கொண்டதைக் குறிக்கிறதா? அல்லது டி.எஸ்.சேனநாயக்கவுடன் பொன்னம்பலம் செய்த இரகசிய உடன்படிக்கையின் அரங்கேற்றமா?

பொன்னம்பலத்தை அமைச்சராக்கு வதற்கு முன் நிபந்தனையாக தமிழ்க் காங்கிரஸில் இருந்து ஒருவர் மட்டுமே அந்த அநீதியான சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க அனுமதிப்பதாக சேன நாயக்க வற்புறுத்தினார். அந்த ஒருவர் தானாகவே இருப்பதன் மூலம் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்சிற தனது நோக்கத்தை நிறை வேற்றப் பொன்னம்பலம் விரும்பினார். ஆனால் செல்வநாயகமும் பிடிவாத மாகத் தான் எதிர்த்து வாக்களிக்கப் போவதாகச் சொல்லவே. சேனநாயக்காவுடன் மறுபடி பேரம் பேசி எதிர்த்து வாக்களிக்கிற வர்களது தொகையை இரண்டாக உயர்த்தினார் பொன்னம்பலம்.

இதன் பின்பு தானும் எதிர்த்து வாக்களிப் பேன் என்று கு.வன்னியசிங்கம் பிடிவாதம் பிடிக்கவே அவரை எதிர்த்து வாக்களிக்காமல் தடுப்பதற்காக அவரைப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு மணி ஒலித்தபோது பாராளுமன்ற கழிப்பிட அறைக்குள் வைத்துப் பூட்டி வாக்களிக்காமல் தடுக்கப்பட்டது. இதனாலேயே வன்னியசிங்கம் வாக்களிப்பிற் பங்குபற்ற முடியவில்லை.

நமக்குத் தெளிவாகத் தெரிவது ஏதெனில். ஜி.ஜி.பொன்னம்பலம் தனது கட்சியினர் பிரசாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப்பது பற்றி எதுவிதமான ஆர்வமும் காட்டவில்லை என்பதுதான்.

இதன்பின்னர் நிறைவேற்றப்பட்ட இந்திய–பாகிஸ்தான் பதிவுச் சட்டத்தின் மூலம் மலையக மக்களது வாக்குரிமை யை மீளவும் பெறுவதற்குப் பொன்னம் பலம் முயன்றது எவ்வளவு தூரம் நல் லெண்ணமும் விவேகமும் கொண்டது என்பது இன்னொரு விடயம்.

தனக்கு மந்திரிப் பதவி தர சேனநாயக்க மறுத்ததாலேயே செல்வநாயகம் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியை நிறுவினார் என்பது பொன்னம்பலம் இறுதிவரை பிடிவாதமாகச் சொல்லி வந்ததும் செல்வநாயகத்தின் ஆதரவாளர்கள் பிடிவாதமாக மறுத்து வந்ததுமாகும். உண்மை ஏதாயினும். பொன்னம்பலம் வன்னியசிங்கத்தை வாக்களிக்காமல் தடுக்க இயலுமானது எப்படி என்பதற்கு நமக்கு இன்னமும் திருப்தியான விளக்கம் இல்லை. தன்னால் வாக்களிக்க முடியாமற் போனது பற்றி வன்னியசிங்கம் சாகும்வரை மனம் வருந்தினாரென்று சொல்லப்படுகிறது. இவை பற்றி ஒரு முன்னாள் தமிழரசுக் கட்சித் தலைவரான வி.நவரத்தினம் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

தயவுசெய்து "கலாநிதி" குமரகுருபரன் அவர்களோ பிற தமிழ்க் காங்கிரஸ் வரலாற்று வியாக்கியானக்கார எவருமோ பொதுமக்களுக்குத் தெளிவாக இந்த விடயங்கள் பற்றி விளக்குவார்களா?

– விடாக்கண்டன் –

## பெண்கள் எதிர்கொள்ளும்

7ம் பக்க தொடர்ச்ச..

பெண்களாக இருந்த காரணத்தால், தமது காலத்தின் ஆண்களினதை விடச் சிக்கலான அகப் போராட்ட த்தை அவர்கள் நடத்த நேர்ந்தது.

தலைமைத்துவப் பிரச்சனை. புறவயமான தேவையுடனும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுடனும் தொடர்புடையது. இரண்டுக்குமிடையிலான இயங்கியல் உறவில். புறவயமான நிலைமைகள் ஒரு தலைவரது தோற்றத்தைத் தீர்மானிக்கின்றன. எனினும் குறிப்பாக யார் தலைவராகிறார் என்பது தற்செயலானது. இங்கேதான் பெண் களின் தலைமைத்துவப் பிரச்சனை சற்றுச் சிக்கலாகிறது. புரட்சிகர கம்யூனிஸ இயக்கங்கள் எப்போதுமே பெண்களின் சீற்றத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன என்பது உண்மை. ஆனால். அந்தச் சக்தியை நெறிப் படுத்தி. நின்று நிலைக்கக் கூடிய கம்யூனிஸ பெண் தலைவர்களை உருவாக்க இயலாதுள்ளது. மாக்ஸியம் பெண்கள் மீதான ஒடுக்குமுறை பற்றி ஆழமாகத் துருவி நோக்கும் ஒரு ஆய்வையும் தீர்வையும் வழங்கியுள்ள போதும் கம்யூனிஸ்ற் கட்சிகளில் பெண் தலைவர்களது எண்ணிக்கை ஏன் இவ்வளவு குறைவாக உள்ளது என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுந்துள்ளன. எனவேதான் கம்யூனிஸ்ற் கட்சிகளில் பெண் தலைவர்களை உருவாக்கு வதற்கான புறவயமான நிலைமைகள் வளர்ந்து வருகின்ற போதும். அது தற்செயலாக நிகழக் கூடியவை ஏன் வரையறைக்குட்பட்டுள்ளது என்ற கேள்வி எழுகிறது. இது ஆழமான ஆய்வை வேண்டி நிற்கிறது.

### பெண்கள் அரசியற் களத்திற்குப் பிந்தி வந்தவர்கள்

அடிமை முறை நிலவிய காலந் தொட்டு. சிறப்புரிமையுடைய வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்கள் நாட்டின் அரசியல் விவகாரங்களை நடத்துவதில் தமது ஆற்றலை விருத்தி செய்து வந்துள்ளனர். இரண்டு வர்க்கங்களை யுஞ் சேர்ந்த பெண் கட்கும் அடிமைப் பட்ட ஆண்கட்கும் கேடான முறையில் அவர்கள் தமது தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்தனர். இது இன்றுவரை ஏதோ ஒரு வடிவிற் தொடருகிறது. தாயுரிமை தூக்கி யெறியப்பட்டமையே பெண் பாலினருக்கு நேர்ந்த உலக வரலாற்றுத் தோல்வி எனவும் ஆண்கள் வீட்டிலும் ஆணை செலுத்தத் தலைப்பட்டனர் எனவும் சொன்ன ஏங்கல்ஸை இங்கு நினைவி லிருத்துவது தகும். பெண் தரந் தாழ்த்தப்பட்டுச் சேவகஞ் செய்யும் நிலைக்கு இறக்கப்பட்டாள். அவர் ஆணின் காம இச்சையின் அடிமை யாகவும் குழந்தைகளை உற்பத்தி செய்யும் கருவியாகவும் ஆனார். சொத்துடைமை மீது தமது தனி உரித்துக் காரணமாக ஆண்கள் ஆளுவோராயினர். வரலாற்று வழி வந்த தாயுரிமை இழந்ததன் பயனாகப் பெண்கள் ஆளப்பட்டோராயின ஆண்கள் சிந்தனை சார்ந்த பணிகளை எடுக்கையிற். பெண்கள் உடலுழைப்புக்கு ஒதுக்கப்பட்ட முறை யிலமைந்ததான அன்றைய வேலைப் பங்கீடு. உலகைப் பகுத்தாய்ந்து தொகுத்திணைக்கும் செயலில் ஆண் களுக்கு திரட்டப்பட்ட அனுபவத்தை வழங்கியது: பெண்கள் வீட்டு வேலை களைக் கொண்ட கண்காணாத உலகிற் காணமாற் போயினர். இவ்வாறு. ஆண்கள் உலக அறிவுத் துறை மீது ஏகபோகஞ் செலுத்தினர்: உலகை வரைவிலக்கணஞ் செய்வதில் மட்டுமன்றி மாற்றுவதிலும் அவர்கள் செயலூக்கத்துடன் பங்குபற்றினர். ஆண்கள் வாக்குரிமை பெற்று வெகு காலத்தின் பின்பே பெண்கள் வாக்குரிமை பெற்றனர் என்பதை எண்ணிப் பாருங்கள். இன்றைய 21ம் நூற்றாண்டிற் கூடக் குவெய்த்தில் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. ஆப்புனிஸ் தானில் (இப்போது ஹமீட் கர்ஜாய் தலைமையிலான நிலமானியப் பிரபுக்களின் கூட்டமைப்பால் பிரதியீடு செய்யப்பட்ட) தலிபான் போன்ற மத அடிப்படையிலான. உலக வரலாற்றின் இடைநிலைக்கால நிலமானிய ஆட்சி யாளர்கட்கும் அராபிய வளைகுடா நாடுகளின் ஷேக்குகட்கும் ஏகாதி பத்திய ஆட்சியாளர்கள் ஆதரவு வழங்குகையிற். பெண்கள் பொது வாழ்விற் புகாதவாறு மறிக்கப்படு கின்றனர். நேபாளத்தை எடுத்துக் கொண்டால். இங்கே நிலவும் நிலமானிய முடியரசு முறை காரண மாகப். பெண்களுக்கும் கருப்பையில் இருக்குங் காலந்தொட்டே ஆளும் உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. ஒப்பிடுகையில் அண்மைக் காலத்தின வானவையும் நடைமுறையிலுள்ள பிரதான அரசியற் கட்சிக்கு மிகவும் பகைமையானவை யுமான கம்யூனிஸ்ற் கட்சிகள் உட்பட. அரசியற் கட்சிகளில் பெண்களின் தலைமைத்துவத்தை விருத்தி செய்வதற்கான போராட்டத் தின் மீது இவை யாவும் பாதிப்பை ஏற்படுத்து கின்றன.

### நடைமுறையிலுள்ள உற்பத்தி முறை சாதகமானதல்ல

இன்றைய சமுதாயத்தின் தளமும் மேற்கட்டுமானமும் பொதுவாகவே சுரண்டலை. அதிலுங் குறிப்பாகப். பெண்களின் குழந்தைப் பேற்று. வீட்டுப் பணி உழைப்பின் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது. சொத் துடைமை உறவுகளைப் பொறுத்த வரை. ஆண்களின் சொத்துக்களைப் பேணுவோராகவும் அச்சொத்துக் களை ஆண் வழிச் சந்ததிக்கு வழங்கு வதற்காக ஆண்பிள்ளை களைப் பெறுவோராகவுமே பெணகள் கருதப் படுகின்றனர். நடைமுறையிலுள்ள சமூக. பண்பாட்டு. கல்வி. அரசியல். மேற்கட்டுமானக் கூறுகள் யாவுமே இந்தச் சுரண்டலை ஆதரிக்கிற முனைப்போடு உள்ளன. திருமணம் என்கிற ஒழுங்கமைப்பை எடுத்துக் கொள்ளுங்கள். சொத்துடமை உறவு களில் ஆண்கள் தமது மேலாதிக்கந் தொடர்ந்தும் பேணவதற்குரிய ஒரு வசதிக்கான சம்பந்தமே அது. பெண்களைப் பொறுத்தளவில். அச் சம்பந்தம் அவர்களை வீட்டு அடிமைகளாக விளிம்பு நிலைக்குத் தள்ளி விடுகிறது. வருந்தத்தக்க விதமாக இது. குறைந்தளவி லெனினும். கம்யூனிஸ்ட்டுகட்கும் பொருந்துகிறது.

வலுவான இடதுசாரி இயக்கங் களைக் கொண்ட நேபாளம். காலத் துக்குக் காலம். செயலூக்கமுள்ள பெண்கள் பலரைத் தந்துள்ளன. எனினும் அவர்கள் அடையாளங் காணப்பட்டவுடனேயே மறைந்து விடுகிறார்கள். நம்பிக்கை தரக்கூடிய பல பெண்களை நம்மிடமிருந்து பறித்ததான திருமணம் என்ற ஒழுங்கமைப்பு அதற்கான முக்கிய மான காரணங்களுள் ஒன்றாகும். மக்கள் யுத்தம் அந்தக் கோலத்தை மாற்றுகிறது போற் தெரிகிறது. எனினும். பெண்களின் தலைமைத் துவத்தின் தொடர்ச்சி பற்றிய கேள்வி. குறிப்பாக அவர்கள் திருமணஞ் செய்து குழந்தைகளைப் பெற முடிவு செய்கிற நிலையில், மக்கள் யுத்தத்தினுள்ளும் எழுகிறது. இது ஏனெனில். முன்னேறிய நாடுகளில் உள்ள தந்தைவழிச் சமூகங்களை விட அதிக ஒடுக்குமுறைப் பண்பு வாய்ந்த தான நிலமானிய முறைத் தந்தை வழிச் சமூகம் உள்ள நேபாளம் போன்ற நாடுகளில். பெண் கம்யூனிஸ் ற்றுக்களின் திருமண வாழ்க்கை மேலும் சிக்கலானதாகலாம். நேபாளத் தில் மக்கள் யுத்தம் தொடுக்கப்பட்ட பின்பு தனியார் உடைமை என்ற சிந்தனைக் கூறு மெல்ல மறைந்து வருகிற போதும். தேவையின் பேரால் நிகழும் வேலைப் பங்கீடு போன்று. நிலமானியத்தின் பண்பாட்டு வேர்கள் பல வடிவங்களில் நுழைந்து விடுகின்றன. ஒரு பெண் தாயாகும் போது ஏற்படும் ஒற்றைத் தரப்பிலான சுமையும் இவற்றுடன் சேர்ந்து கொள்கிறது. ஒவ்வொரு குழந்தை யின் பிறப்புடனும் பெண் வீட்டு வேலை அடிமைத்தனத்துள் மேலும் ஆழமாக அமிழ்கிறார். நேபாளத்தில் மக்கள் யுத்தத்திற் செயற்பாட்டுடன் இயங்கிய பெண்கள் பலர். குழந்தைகளைப் பெறுவது. ஒழுங்கு நடவடிக்கைகட்கு உட்படுத்தப்படுவது போன்றது என்று முறைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் நீண்ட காலத்துக்குக் கட்சி நடவடிக்கை களினின்று விலகியிருக் கின்றனர். இவ்வகையிற். தமது விருப் பிற்கமைந்த தோழர்களை மணம் செய்த அறிவாற்றலும் செயலூக்கமு முள்ள கம்யூனிஸ்ற் பெண்கள். புலனாகாமலே மறைந்து போகும் ஆபத்தை எதிர் நோக்குகின்றனர். தமது பிள்ளைப் பேற்றுக் காலத்தில் வெகுசன அமைப்புக்களிடமிருந்தோ கட்சியிட மிருந்தோ ஆதரவைப் பெற இயலாதுள்ளவையான. வெள்ளை அதிகாரம் (மரபுவாத மேட்டுக் குடிகளின் அதிகாரம்-மொ.பெ.) நிலவும் பகுதிகளில். இது சிறப்பாகப் பொருந்தும். எனினும். றொல்பா. றுகும் தளப் பிரதேசங்களில் வெகுசன ஆதரவும் கட்சி வலுப்பெற்றமையுங் காரணமாகப். பெண் தலைவர்களது இவ்வாறான தாய்மையின் சுமைகளைக் கட்சியும் வெகுசனங்களும் தாங்கி நிற்க இயலு மானதன் விளைவாக அப்பிரதேசங் களில் இப்பிரச்சனை தீர்க்கப்பட்டு வருகிறது. நேபாள நிலமானியச் சமூகத்தின் இன்னொரு அம்சம் ஏதெனின். பெண்கள் குழந்தைகளைப் பெறு மாறு. குறிப்பாக ஆண் குழந்தை களைப் பெறுமாறு நெருக்கப்படுவ தாகும். மக்கள் யுத்தம் தொடுக்கப் பட்டதையடுத்து இவ்வம்சம் ஒரு அவவுக்கு மறுதலிக்கப்பட்டுள்ள தாயினும். இன்னமும் ஒரு குழந்தை யையாவது பெறுமாறு நெருக்குவாரம் இருக்கிறது.

வெளிவெளியாகவோ மறைமுகமாக வோ. பெண் ஊழியர்களைத் திருமணம் செய்யுமாறு நெருக்கு வாரத்தை உண்டாக்கும் போக்கும் உள்ளது. ஏனெனில் மணமாகாத பெண்கள். மணமாகாதவர் என்ற அவர்களது சமூக அந்தஸ்த்துக் காரணமாக. ஆண்களதும் பெண் களதும் சந்தேகத் துக்குப் பெரிதும் இலக்காகின்றனர். இதன் விளை வாக. அவர்கள் திருமணத்துக்கு ஆயத்தமாகு முன்னரே தமது விருப்பிற்கு மாறாக மணமுடிக்கும்படி நேருகிறது. அதிலும் முக்கியமாக. அரசியற் தவறுகளை விடப் பாலியற் தவறுகளைப் பாரியனவாகக் கருதும் ஒரு போக்கும் உள்ளது.

வளரும்

www.padippakam.com



# அசை: சஞ்சிகை காட்டி நிற்கும் திசை எது?

அசை என்கிற கட்டுரைத் தொகுப்புச் சஞ்சிகையின் முதலாவது இதழ் வந்தபோது அதன் நோக்கங்கள் பற்றிய தெளிவீனங்கள் மிகுதியாக இருந்தன. எனினும் ஒரு பரந்துபட்ட இடதுசாரி சமூக-அரசியல் ஏடு என்ற அடிப்படையில் அதைப் பலராலும் வரவேற்க முடிந்தது. ஆனாலும் சில விடயங்கள் பற்றிய தயக்கங்கள் வெளிவெளியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தன. அசை இரண்டாவது இதழ் இப்போது நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு வந்துள்ளது.

நூலின் பெரும்பகுதியைப் பிடித்திருப்பது அரங்க குணசேகரனின் நேர்காணல். காலக்குறியினின்று மறுபிரசுரமானது போல தோற்றமளிக்கும் இந்த நேர்காணல் எந்த இதழில் முதற் பிரசுரமானது என்ற விவரமேதும் தரப்படவில்லை. தமிழகத் தலித்திய விவாதங்கள் பற்றிப் பரிச்சயமானவர்கட்குப் பல பயனுள்ள தகவல்களைத் தருகிற இந் நேர்காணல் மூலம் பாரிஸில் இருந்து நடத்தப்படுகிற தலித்திய விவாதங்களுக்குப் பயன் உள்ளளவுக்கு அதற்கு வெளியே உள்ளவர்கட்கு எவ்வளவு பயன் இருக்குமோ தெரியாது.

அரங்க குணசேகரன் சொல்கிற கருத்துக்கள் ஒரு உரையாடற் பாணியில் உள்ளவை. அவற்றைத் தொகுத்து மேலும் சுருக்கமாகவும் தெளிவாகவும் வழங்கியிருக்க முடியும். பல விடயங்களில் தலித்தியத்தின் பேரால் பிழைப்பு நடத்துகிறவர்கள் பற்றிய விமர்சனங்களை முன்வைக்கிறார். ஆனால் அவருக்கே மாக்ஸியம் பற்றிய தெளிவீனம் மிகுதி. மக்கள் மத்தியிலான முரண்பாடுகள் பற்றிய பார்வையே அவரது நேர்காணலில் தென்படவில்லை. மாக்ஸியவாதிகளை அவர் பகைமையுடன் நோக்கவில்லை என்பதுக்கு மேலாக அவரிடம் முழுமையான சமுதாய மாற்றத்தையும் சாதிமுறை ஒழிப்பையும் எவ்வாறு ஒருங்கிணைத்துப் போராட முடியும் என்ற பார்வை இருப்பதாகத் தெரியவில்லை. தமிழகத் தலித்திய சந்தர்ப்பவாதிகளை ஒருபுறமும் இடதுசாரிகளது போதாமைகளை மறுபுறமும் விமர்சிக்கிற குணசேகரனின் கருத்துக்கள் பட்டிமன்றப் பாங்கில் வழங்கப்பட்டுள்ளன. இது இந்தியச் சூழலில் பயன்படுமளவுக்கு வெளியே பயன்படுமா என்பது. பிரான்ஸில் உள்ள தலித்திய வாதிகளெல்லாம் தமிழகத்து விவாதங்களில் தான் சிக்குண்டு கிடக்கிறார்களா என்பதிலேயே தங்கியுள்ளது.

ந. ரவீந்திரனின் கட்டுரை மற்றக் கட்டுரைகளினின்றும் வித்தியாசமாக சாதி பற்றிய வரைவிலக்கணப்பாங்கான விளக்கங்களின் தொகுப்பாக உள்ளது. இக் கட்டுரை நூலின் இறுதியில் வரும் இமயவரம்பன் கட்டுரை (?) மாதிரி ஏதோ நடு நிலைப் பாவனை காட்டுவதற்காகச் சேர்க்கப்பட்டது போல் உள்ளது.

இமயவரம்பனின் கட்டுரைத் தொடர்பில் அறிமுகப்பகுதி பிரசுரமாகியுள்ளது. அதன் பின் வருகிற பகுதிகள் இல்லாமல். அதனால் யாருக்கும் என்ன பயன் என்றே விளங்கவில்லை. அதுபோக புதிய பூமியில் அக்கட்டுரை முகப்பில் மாக்ஸ். ஏங்கல்ஸ். லெனின். ஸ்தாலின். மாஓ ஆகியோரது படங்கள் பதிக்கப்பட்டிருந்தது. மீள்பிரசுரத்தில் ஸ்தாலினதும் மாஓவினதும் படங்கள் இல்லை. இது ஏன்? இதற்கான விடை ஸ்தாலினியத்தின் மீதான தமிழரசனின் விமர்சனமாகும். 1948-1954 என்ற கால இடைவெளி குறிப்பிடப்பட்டாலும் விமர்சனம் திரும்பத் திரும்பத் த்ரொத்ஸ்கிய வாதிகள் அரைத்த மாவையே அரைக்கிறது. உலகின் புரட்சிகர இலக்கியங்களில் நடந்த சகல தவறுகட்கும் ஸ்தாலின் மீதும் ஸ்தாலினியத்தின் மீதும் குறை கூறுகிற தமிழரசன் முடியுமானால் குறிப்பான பிரச்சினைகளில். முக்கியமாகத் தேசிய விடுதலை. விவசாயிகள் பிரச்சினை. புரட்சியை 'ஏற்றுமதி செய்வது'. புரட்சியின் பல்வேறு காலகட்டங்கள் என்பன பற்றித் தனது வாய்ப்பாட்டு மட்டையை ஓரமாக வைத்துவிட்டு ஸ்தாலினிய நிலைப்பாட்டையும் த்ரொத்ஸ்கிய நிலைப்பாட்டையும் ஒப்பிட்டு எழுதினால் அது இக்காலத்துக்குப் பொருந்தும்.

ஸ்தாலினைக் கொடிய சர்வாதிகாரியாகச் சித்திரிக்கிற தமிழரசனுக்கு விளங்காதது ஏதென்றால் ஸ்தாலினின் தவறுகள் பலவும் நெருக்கடி மிக்க சூழலில் புரட்சிகர நடைமுறையின் போக்கில் நடந்த தவறுகளே. அவற்றைத் தனித்தனியே பிரித்தெடுக்கிற காரியத்தை அவர் கண்டித்தாலும் உண்மையில் அவர் செய்வது அதையே தான். மறுபுறம், த்ரொத்ஸ்கி அதிகாரத்தைப் பகிர்ந்தபோது நடந்து கொண்ட விதம் பற்றிய விமர்சன்ங்களையும் தமிழரசன் வாசிப்பது நல்லது. ஸ்தாலின் சர்வாதிகாரி த்ரொத்ஸ்கி சனநாயக வாதி என்று காட்டமுயல்கிற முயற்சிகள் த்ரொத்ஸ்கியவாதிகள் தம்மையே ஏமாற்றிக் கொள்ளும் காரியங்கள். உலகில் விகிதாசாரத்தில் வலிய த்ரொத்ஸ்கிய இயக்கம் இருந்த நாடு இலங்கை. த்ரொத்ஸ்கிய நடைமுறைக்கு இலங்கையை உதாரணமாக வைத்து அசையில் தமிழரசன் ஒரு ஆய்வை முன்வைப்பாரா?

வந்தனா ஷிவாவின் நவீன தொழில்நுட்ப விரோதப் போக்குக்கான காரணம் இன்னமும் அவர் தனது கருத்துமுதல்வாதச் சிந்தனைத் தளத்தினின்று விடுபடாமையே. வந்தனா ஷிவாவின் பயனுள்ள பங்களிப்பையோ ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க முயற்சிகளை அவர் அம்பலப் படுத்துவதையோ பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் அவரால் ஏகாதிபத்தியத்துக்கு மாற்றுவழியாக ஒன்றை முன்வைக்க இயலாதுள்ளது. அசையில் வெளியாகியுள்ள கேள்வி-பதில் பகுதி வந்தனா ஷிவாவையோ அவரது அணுகுமுறையையோ பங்களிப்பையோ விளங்கிக் கொள்ள எவ்வளவு உதவும் என்று தெரியவில்லை.

அமார்த்தியா ஸேன் பற்றிய கட்டுரையும் விமர்சனமற்ற ஒன்றாகவே உள்ளது. அவரது தொடக்ககால இடதுசாரி நிலைப்பாடு நெகிழ்ந்து இப்போது அவர் சீர்த்திருத்தவாதியாக உலக அங்கீகாரம் பெற்றுள்ளார். அமார்த்தியா ஸேன் பற்றிய விமர்சனம் ஒன்று தேவையான இடத்தில் அவரது மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட கருத்துக்கள் மந்திர வாரத்தைகள் போல ஏற்கப்பட்டுள்ளன. இன்று சேன் இந்தியத் திரிபுவாதிகளுக்கு மிகவும் இனியவராக இருக்கிறார். இது ஏன் என்றும் அசை கவனிப்பது நல்லது.

ற்றெரி ஈகிள்ற்றனுடனான நேர்காணல் கொஞ்சம் பயனுள்ளது. ஆனாலும் மொழிபெயர்ப்பாளர் ஈகிள்ற்றனின் சொற்களைக் குழப்பியடிப்பதில் அமோக வெற்றியீட்டியிருக்கிறார். யமுனா ராஜேந்திரனைத் தமிழாக்குவதை விட ஆங்கிலத்திலேயே வாசித்துவிட்டுப் போவது பயன் மிக்கது.




அசை முதலில் எந்த நோக்குக்காகச் செயற்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளட்டும். எல்லாரையும் மகிழ்விக்க முயல்வதை விட ஒரு தெளிவான நோக்குடன் எல்லாரையும் சினக்க வைப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

இந்த இதழ் கண்ட பின்பு நமது சமூகச் சூழல் பற்றிய சமூகச் சிந்தனையின் விருத்திக்கான ஒரு களமாக அசை முன்னுக்கு செலல் முடியுமா என்ற கேள்வி என்னுள் எழுந்தமையைக் கூறியே ஆக வேண்டும் இருப்பினும் பரந்த சிந்தனை தளத்தின் மூலமாக அசை தனது திசையை தெளிவுபடுத்தி நிற்க வேண்டும். அதற்கான ஆளுமை நமது பிரச்சினைகளைப் பற்றி ஆழச் சிந்திப்போரது பங்குபற்றுதல் மூலமே கிட்டும். அசை அதற்கு ஆயத்தமாக இருக்கிறதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

**அருன்**

# விமர்சனத்தைத் தாங்க முடியாது குமுறுகிறார் மு.பொன்னம்பலம்

கடந்த மாதப் (01.05-2003) புதிய பூமியில் மு.பொன்னம்பலத்தின் "பொறியில் அகப்பட்ட தேசம்" கவிதை நூலுக்கு சி.சிவசேகரம் ஒரு விமர்சனம் எழுதியுள்ளார். 'பொறியில் அகப்பட்ட பொன்னம்பலம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட அவ்விமர்சனத்திற்கு மு.பொ.விடமிருந்து ஒரு நீண்ட எதிர்வினை புதிய பூமிக்குக் கிடைத்தது. "நோயில் அகப்பட்ட சிவசேகரம். பொறியில் அகப்பட்ட தேசம் பற்றிய சிவசேகரத்தின் விமர்சனம் தொடர்பாக இன்னொரு வாசிப்பு" எனத் தலைப்பிடப்பட்டிருந்தது.

மு.பொ.வின் அவ் நீண்ட வாசிப்பை முழுமையாக வெளியிட முடியவில்லை. சிவசேகரம் விமர்சன வாயிலாக எழுப்பிய கேள்விகளுக்கு உரிய பதில் மு.பொ.வின் வாசிப்பில் காணப்பட வில்லை. வழமையான வக்கிர வார்த்தைகள் கலந்த மறுப்புகளே காணப்படுகின்றன. அவற்றைப் பிரசுரிப்பதால் பத்திரிகையின் பக்கம் வீணாகி விடுவதுடன் வாசகர்களுக்கு உரிய பயன்பாடும் இருக்கமாட்டாது. இருப்பினும் மு.பொ.வின் தூற்றல்களுக்கு உதாரணமாக அவரது வாசிப்பிலிருந்து சிறு பகுதியை மட்டும் வெளியிடுகின்றோம். இதனைப் பதச்சோறாகக் கொண்டு வாசகர்கள் யார் நோயில் அகப்பட்டுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ள இயலும். மு.பொ.விற்கு நீண்ட காலமாக இருந்து வரும் நோய் மாக்சிய எதிர்ப்பு நோய் என்பதை மீண்டும் ஒரு முறை எடுத்துக் கூறி இருக்கிறார்.

இதோ அவரது நீண்ட வாசிப்பிலிருந்து ஒரு பகுதி.

"பேராசிரியர் சிவசேகரம் "புதிய பூமியில்" எனது "பொறியில் அகப்பட்ட தேசம்" பற்றி எழுதிய விமர்சனத்தைப் படித்தபோது அவரது எளியதான மன அமைப்புக்கு *(SIMPLE MINDED)* எந்த விதத்திலும் குந்தகம் ஏற்படாது பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது புலனாகிறது. தனக்கு எதிரான கருத்துடையவர்கள் என்றால் எந்தவித அடிப்படை நேர்மையுமற்று கண்ணை மூடிக் கொண்டு தாக்குகின்ற பேதமை.

தொடர்ச்சி 12ம் பக்கம்.

## பேரினவாத ஒடுக்கு...

3ம் பக்க தொடர்ச்சி..

நிலைப்பாடுமாகும். தமிழ் மக்கள் இன ரீதியில் ஒடுக்கப் படுவதை எதிர்த்து பேரினவாத ஒடுக்குமுறையைக் கடூரமாக எதிர்த்து வந்த எமது கட்சி அந்த ஒடுக்குமுறையின் பின்னால் மறைந்து நிற்கும் பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய அடிவருடித் தன்ங்களையும் எதிர்த்து வருகின்றது. உலகமயமாதலையும் அதன் நாசகாரங்களையும் எதிர்த்து அம்பலமாக்கி வருகின்றோம்.

ஆனால் தமிழர் தலைமைகள் என்று கூறப்படுபவர்கள் எவரும் உலகமயமாதலையோ அதன் தலைமையாக விளங்கும் ஏகாதிபத்தியத்தையோ எதிர்ப் பதற்குத் தயாரில்லாத போக்கிலேயே செல்கின்றனர். மிகக் கொடூர மாகவும் கேடு கெட்ட தனமாகவும் அண்மையில் ஈராக் அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்ட வேளையில் இந்தத் தமிழ் மண்ணிலே அதனைக் கண்டித்து எதிர்த்துக் குரல் கொடுக்க எமது கட்சியைத் தவிர வேறு எவருமே முன் வரவில்லை. எம்முடன் இணைந்து நிற்கவுமில்லை. இது விடுதலைப் போராட்டம் நடைபெறும் மண்ணுக்குரிய லட்சணமல்ல. ஏனெனில் அதே அமெரிக்கா நாளை இந்த மண்ணுக்கு வராது என்பதற்கு என்னதான் உத்தரவாதம் உண்டு என்ற கேள்வி எழுப்புவது அவசியமாகும்.

எனவேதான் பேரினவாத ஒடுக்குமுறையையும் அதனை முன்னெடுக்கும் பெருமுதலாளித்துவத்தையும் எதிர்த்துப் போராடும் அதேவேளை ஏகாதிபத்தியத்தையும் அதன் உலகமயமாக்கலையும் எதிர்த்து மக்களை அணி திரட்டிப் போராட வேண்டியது நம் அனைவர் முன்னுள்ள கடமையாகின்றது. அப்பொழுதுதான் அமெரிக்காவினது உலக மேலாதிக்க நோக்கத்திற்காக இலங்கையைப் பயன்படுத்தும் உள்ளார்ந்த திட்டங்களை மக்கள் முன் அம்பலமாக்கி முறியடிக்க முடியும். அதேவேளை பேச்சுவார்த்தையைக் குழப்பித் தனது பிராந்தி மேலாதிக்கத்தை விரிவுபடுத்த நிற்கும் இந்தியாவைப் பற்றிய எச்சரிக்கையையும் கொண்டிருக்க முடியும்.

மேலும் இம் மே தினக் கூட்டத்தில் தோழர்கள் க. தணிகாசலம். சி. நவரத்தினம். சோ. தேவராஜா. பொ. முருகேசு. மு. தியாகராசா. க. ஆனந்தகுமாரசுவாமி. கா. பஞ்சலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

## புரட்சிகர வெகுஜனப்

4ம் பக்க தொடர்ச்சி....

மலையகத்தில் நடைபெற்ற பல பெரிய போராட்டங்களின் ஊற்றுக் கண்ணாக இருந்துள்ளோம். பல எதிர்ப்புகள். பின்னடைவுகள். பிரச்சினைகளுக்கு மத்தியில் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்கான புரட்சிகர கட்சியைக் கட்டி வளர்ப்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம்.

ஐக்கியத்துக்கு எதிரான ஒருமுனைவாதிகளாகவன்றி ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளோம். சிநேகபூர்வமான ஐக்கியப்படக் கூடிய சக்திகளின் பிழைகளையும் தவறுகளையும் கண்டிக்கும் உரிமையுடன் அவற்றுடன் பல போராட்டங்களில் இணைந்து செயற்பட்டுள்ளோம். அதேவேளை மக்கள்விரோத. சந்தர்ப்பவாத சக்திகளை ஏகாதிபத்திய. முதலாளித்துவ. பேரினவாத சக்திகளை மகிழ்விப்பவர்களாக நாம் ஒருபோதும் இருக்க முடியாது. அதிலும் தொழிலாளர் வர்க்கத்திலிருந்து வளர்ந்து அவ் வர்க்கத்திற்கு எதிராகவும், முதலாளித்துவம். ஏகாதிபத்தியம் என்பவற்றுக்குச் சார்பாகச் செயற்படும் அதிகாரத்துவ முதலாளித்துவ வர்க்கத்தை நாம் ஒருபோதும் மன்னிப்பதில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்திலிருந்து கல்வி கற்று அதிகாரிகளாகவும். பிரமுகர்களாகவும் வளர்ந்து அச் சமூகத்தைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டு வரும் பலரை அதிகாரத்துவ முதலாளித்துவ வர்க்கமாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அவர்கள் சிறிய எண்ணிக்கையினராக இருந்த போதும் சமூகத்திற்கு அழிவு ஏற்படுத்தும் திட்டங்களுக்குத் துணை போகிறவர்களாக இருக்கின்றனர்.

அவர்களை விட மலையகத்தின் படித்தவர்களில் அதிகமான எண்ணிக்கையினர் சமூக அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களில் பலர் எமது கட்சியினதும் கட்சியின் வெகுஜன அணிகளினதும் அங்கத்தவர்களாகவும். அனுதாபிகளாகவும் இருக்கின்றனர்.

பெருந்தோட்டங்களை மீளக் குத்தகைக்கு விட்டு தொழிலாளர்களை கொத்தடிமைகளாக்கப் போகும் செயலை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஐக்கியப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

சமாதான பேச்சுவார்த்தைகளில் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் சேர்க்கப்பட்டு அவர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து அவர்களின் சுயாட்சியை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அக்கூட்டத்தில் புதிய-ஜனநாயகக் கட்சியின் மலையகக் கமிட்டியின் செயலாளர் தோழர் எஸ். பன்னீர்ச் செல்வம் . தோழர்கள் வெ. மகேந்திரன். பெ. சந்திரகுமார். எஸ். இராஜேந்திரன் உட்பட பலர் உரையாற்றினர்.

## ஈராக் : போர்க்

8ம் பக்க தொடர்ச்சி..

"இராக்கின் எண்ணெய் வயல்களை அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனங்கள் கைப்பற்றுவதற் காகத் தான் இந்தப் போர்" என்ற உண்மை பள்ளிச் சிறுவர்களுக்கும் புரிந்துவிட்டது.

எந்த ஐ.நா.வின் பெயரால் பொருளாதாரத் தடை என்ற பெயரில் 13 ஆண்டுகளாக இராக் மக்கள் பட்டினி போடப்பட்டுக் கொல்லப்பட்டார்களோ, அந்த ஐ.நா.வை ஒரே நொடியில் கொன்று விட்டு "கடவுளுக்கு நன்றி, ஐ.நா. செத்து விட்டது" என்று எகத்தாளம் செய்கிறது அமெரிக்கா. லீக் ஆஃப் நேஷன்ஸ் என்ற உலக மன்றத்தை இதேபோல இட்லர் ஒழித்துக் கட்டியதைத் திகிலுடன் நினைவு கூர்கிறார்கள் முதலாளித்துவ அறிஞர்கள். இட்லர் என்பவன் தப்பிப் பிறந்த தறுதலைப் பிள்ளையல்ல. ஏகாதிபத்தியம் பெற்றெடுத்த குலக்கொழுந்துதான் என்பதை புஷ் நிரூபித்திருக்கிறார்.

நடுநிலை, சுதந்திரம் என்று பம்மாத்துச் செய்து கொண்டிருந்த பி.பி.சி., சி.என்.என். போன்ற செய்தி நிறுவனங்கள், பத்திரிகைகள் ஆகிய அனைவரும் அமெரிக்க, பிரிட்டிஷ் முதலாளிகளின் அடைப்பக்காரர்கள் தான் என்ற உண்மை அசிங்கமாக அம்பலமாகிவிட்டது. இனி, இவர்களுடைய வானிலை அறிக்கைகளைக் கூட வளைகுடா மக்கள் சந்தேகிப்பார்கள் என்ற நிலை தோன்றிவிட்டது.

ஒரு போர், ஒரேயொரு போர், ஒரு நூற்றாண்டு மயக்கத்தைத் தெளிய வைத்துவிட்டது. இதற்குப் பல ஆயிரம் இராக் மக்களின் உயிர் பலி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்தியம் என்றால் போர் என்ற இந்த ரத்தம் தோய்ந்த உண்மை உலக மக்களின் நினைவில் நிற்கும் வரை ஏகாதிபத்தியங்களுக்கெதிரான மக்கள் போர் முடியப்போவதில்லை.

**மருதையன்**

நன்றி : புதிய கலாச்சாரம்
மே 2003

www.padippakam.com



புதியபூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 10 | ஜூன் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 58

**புதிய - ஜனநாயக கட்சியின்**

**25 வது ஆண்டு நிறைவாக**

**பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சிகள்**

**06.07.2003 யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளன.**

# ஆளும் வர்க்க அதிகாரப் போட்டியால் மக்களுக்கும் நாட்டிற்குமே ஆபத்து

பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது பாராளுமன்றத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மேலதிகமாக தேவைப்படும் ஆசனங்களை எப்படியாவது பெற்றுக் கொண்டு ஐ.தே.முயை ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் உயர் மட்டத் தலைவர்களில் அதிகமானோர் ஜனாதிபதி சந்திரிகாவை கேட்டுக் கொண்டுள்ளதாக அறிய முடிகிறது.

ஐ.தே.மு. ஆட்சியின் கீழ் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் படுகின்ற கஷ்டம். அரசாங்க கட்சித் தலைவர்களுக்கு எதிராக சுமத்தப்படுகின்ற ஊழல். மோசடி. குற்றச்சாட்டுக்கள். அதிகரித்துள்ள . குற்றச் செயல்கள் என்பவற்றைப் புறந்தள்ளி விட முடியாது.

சமாதான முயற்சிகள் வேகமாகவும் அர்த்தமுள்ளதாகவும் நகர்த்தப்படவில்லை என்றாலும் கடந்த ஒரு வருடமாக போரில்லாதிருக்கிறது என்பது ஐ.தே.மு.யின் இதுவரை கால அணுகுமுறையில் காணப்பட்டுள்ள முன்னேற்றமாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஐ.தே.மு.க்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்க்கிறது. சமாதான நடவடிக்கைகளின் ஒவ்வொரு நகர்வையும் தற்போது ஜனாதிபதி சந்திரிகா கடுமையாக விமர்சித்து வருகிறார்.

பொருளாதாரக் கொள்கையிலும் ஐ.தே.மு.யை விட எவ்வித மாற்றுக் கொள்கையையும் பொ.ஜ.ஐ. முன்னணி வைத்திருக்கவில்லை. இவ்வாறான நிலையில் ஐ.தே.மு. ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு முன்பு பொ.ஜ.ஐ. முன்னணி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கோ. பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்துவதற்கோ ஜனாதிபதி சந்திரிகாவால் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் இலங்கை அரசியலில் மேலும் குழப்பமான சூழ்நிலையே ஏற்படும்.

ஜனாதிபதி அரசாங்கத்திற்கும் பிரதமர் அரசாங்கத்திற்குமிடையிலான அதிகாரப் போட்டி பொ.ஜ.ஐ. மு.யினதும். ஐ.தே.கட்சியினதும் சகல மட்டங்களிலும் வெளிப்பட்டு வருகிறது. இரு கட்சி ஆதரவாளர்களும் கைகலப்பிலும் தாக்குதல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அபிவிருத்தி லொத்தர் சபையை அமைச்சர் மிலிந்த மொரகொடவிடமிருந்து ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்பதாக அறிவித்த பிறகு. அதற்கான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவிருந்த அரசாங்க அச்சகம் ஐ.தே.க. ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளது. தென்மாகாண அமைச்சர் ரஞ்சித் கொலை செய்யப்பட்டதற்கு ஐ.தே.க.. சு.க. முரண்பாடுகள் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

நிலைமைகளை அவதானிக்கின்றபோது இரண்டு கட்சிகள் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுப்பதாக இல்லை என்பது தெளிவாகிறது. நாட்டிற்கும். மக்களுக்கும் எவ்வித பாதிப்பு ஏற்பட்டாலும் அவை அவற்றின் அதிகாரத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

எனவே இவ்வாறான குழப்ப நிலைகளைத் தடுத்து நிறுத்தி. நாட்டின் அமைதியைக் குலைக்கும் வகையில் எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளுக்கும் எதிராகவும் மக்கள் இயக்கங்களை நடத்த வேண்டியது அவசியமாகிறது.

## மலையக மக்கள்..

1ம் பக்க தொடர்ச்சி..

மலையகத்தின் படித்தவர்கள் என்போரும் தொழிற்சங்கத் தலைமைகளும் அறிவுஜீவிகள் என்போரும் இன்னும் சலுகைகளுக்காகவும் சுயஈடேற்றத்திற்காகவுமே ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் இந்த பம்மாத்து பாராளுமன்ற அரசியல் தலைமைகளுக்கு கால் பிடித்து கை பிடித்து சேவகம் செய்து கொண்டே இருக்கிறார்கள். சந்திரசேகரனின் வாசலில் அண்ணனுக்காகவும் ஆறுமுகத்தின் வாசலில் தம்பிக்காகவும் காத்து நிற்கிறார்கள். பின்பு உள்ளே சென்று தத்தமது அலுவல்களைப் பார்த்துக் கொள்கிறார்கள்.

தலைமைகள் பேரினவாத ஆட்சிக்கு நெருக்குதல் அல்லது பிரச்சினை தரும் எந்தக் கோரிக்கை யையும் மலையக மக்கள் சார்பாக முன்வைக்கத் தயாரில்லை. மலையக மக்களின் இன, வர்க்க ரீதியான கோரிக்கை எதனையும் வலியுறுத்தாது அமைச்சர் பதவியை அனுபவிக்கும் தலைவர்களை மலையகத்திலேயே காண முடிகின்றது. தலவாக் கொல்லைக்கும் மலையகத்திற்கும் அழிவு தரும் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிர்ப்பும் இல்லை ஆதரவும் இல்லை என்று கூறும சந்திரசேகரன் தான் மலையக மக்களுக்காக உயிரையும் விடத் தயார் என்று கூறிய காலமும் உண்டு. இன்று என்னத்தை விட்டாலும் அமைச்சர் பதவியை மட்டும் விடமாட்டேன். அது எந்த அரசாங்கம் வந்தாலும் அதில் சென்று குந்துவதே இலட்சியம் என்றே இருந்து வருகிறார். இத்தகைய லட்சணத்தில் தான் அண்மையில் இடதுசாரிகளைத் திட்டியிருக்கிறார். இந்த சந்திரசேகரன் எப்படி இடதுசாரிகளைப் பயன்படுத்தித் தலைமை பெற்றார் என்பது வேறு கதை. இன்று இல்லாவிடினும் என்றோ ஒரு நாள் யாவும் அம்பலமாகவே செய்யும்.

**இராமன் மோகன்**

## வெள்ளம்

1ம் பக்க தொடர்ச்சி..

வடக்கிலிருந்து பொருட்கள் கொண்டு வரப்பட்டு. விநியோகிக்கப்பட்டது பற்றி தமிழ் ஊடகங்கள் மிகையாக பிரசாரப்படுத்தின: சிங்கள ஊடகங்கள் திட்டமிட்டே முற்றாக இருட்டடிப்புச் செய்தன. அப்பொருட்களை விநியோகிப்பதிலும் கூட அமைச்சர் சந்திரசேகரன் கூடிய விளம்பரத்தைத் தேடிக் கொண்டார்.

மக்கள் வீடிழந்து. உடமைகள் இழந்து உற்றார். உறவினர்களை இழந்திருக்கும் போது பாராளுமன்ற அரசியல்வாதிகள் அரசியல் ஆதாயம் தேடுவதில அக்கறை காட்டுவது மிகவும் கீழ்த்தரமானதாகும். பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசியல் கட்சி ரீதியாக. இன ரீதியாக. பிரதேச ரீதியாக பாகுபாடு காட்டுவதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது.

இயற்கை அனர்த்தங்களை முன்னறிவதற்கும் அதன் பாதிப்புக்களை குறைப்பதற்கும். மக்களைப் பாதுகாப்பதற்கும் அரசியல் ரீதியான அர்ப்பணிப்பும் திட்டமிட்ட நடவடிக்கைகளும் அவசியமாகும்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்கும் திட்டமிட்ட துரித நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

## புலிகளின்

1ம் பக்க தொடர்ச்சி..

போராட்டத்தில் முன்நிலையில் நின்று வந்த ஓர் விடுதலை இயக்கமாகும். அதன் கொள்கைத் தவறுகள். போராட்டத் தந்திரோபாய முறைமைகள். ஜனநாயக மறுப்புக்கள் என்பன ஏற்றுக் கொள்ளக் கூடியனவல்ல. ஆனால் அவை இரண்டாம் பட்சமானவைகளே. பிரதான அம்சம் புலிகளின் விட்டுக் கொடுக்காத போராட்டமே இன்றைய பேச்சுவார்த்தைச் சூழலைத் தோற்றுவித்துள்ள யதார்த்தமாகும். அதனாலேயே அவர்கள் இன்றைய சூழலில் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகளாகப் பேச்சுவார்த்தையில் பங்கு கொண்டு நிற்கிறார்கள். எனவே கடந்தகாலப் பாராளுமன்றத் தமிழர் தலைமைகள் பேரினவாத பெருமுதலாளித்துவத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு வந்த வரலாற்று அனுபவங்களில் இருந்து பாடங்களைப் பெற்றவர்களாகவும் இருப்பதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

இவற்றை வைத்துப் பார்க்கும் போது ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இழப்புகள். துயரங்களைச் சுமந்து நிற்கும் தமிழ் மக்களது நிலைப்பாட்டிலிருந்து நோக்கும் போது புலிகள் இயக்கம் எடுத்துள்ள நிலைப்பாட்டில் போதியளவு நியாயங்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

வடக்கு கிழக்கைப் புனரமைத்து மீளக் கட்டியெழுப்புவதற்கும் இயல்பு வாழ்வைப் படிப்படியாகக் கொண்டு வருவதற்கும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு அவசியம். முன்பு இடைக்கால நிர்வாக சபை பற்றி அரசாங்கத் தரப்பில் பேசப்பட்டு பின்பு கைவிடப்பட்டது. இப்போது புலிகளால் முன்வைக்கப்படும் நிர்வாகக் கட்டமைப்பானது புனர்வாழ்வு. புனரமைப்பு. மீளக்குடியமர்வு போன்றவற்றை ஒழுங்காகவும் நிர்வாக ரீதியாகவும் உரிய வழிகளில் மக்கள் மத்திக்கு முன்னெடுத்துச் செல்வதற்கேயாகும். இத்தகைய ஒரு நிர்வாகக் கட்டமைப்பு ஜனநாயக ரீதியானதாகவும் வடக்கு கிழக்கின் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையக் கூடியதாகவும் உருவாக்கப்படுவது அவசிய மானதாகும்.

இவ் விடயத்தில் அரசாங்கம் தயக்கம் காட்டுவது வெறுமனே அரசியலமைப்பு ரீதியான சட்டச் சிக்கல் காரணமாக அல்ல. உள்ளார்ந்த பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாடு காரணமானதாகும். புரிந்துணர்வு ஒப்பந்தமும் யுத்த நிறுத்தமும் தடைகள் நீக்கமும் அரசியலமைப்புக்கு அப்பால் செய்து நடைமுறைப்படுத்த முடியு மானால் வடக்கு கிழக்கிற்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதில் கடினமோ சிக்கலோ இருக்க முடியாது.

இதில் அரசாங்கம் தனது இருப்பிற்கான தெற்கின் அரசியல் சூழலைப் பார்த்து நிற்பதுடன் அந்நிய ஆதிக்க சக்திகளின் உள்ளார்ந்த ஆலோசனை அறிவுறுத்தல்களைப் பெற்று வருவதும் ஒரு காரணமாக இருக்கும் என்றே கொள்ள முடியும்.

புலிகள் இயக்கம் எடுத்துள்ள நிலைப்பாடு அரசாங்கத்தை வற்புறுத்திக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டுமே அன்றி மீண்டும் யுத்தம் என்னும் நிலைக்குச் செல்லாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். அதேவேளை அரசாங்கப் பக்கத்திலிருந்து சாதகமான பதிலும் எதிர்காலப் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கான அம்சங்களும் முன்வைக்கப்படல் வேண்டும். தற்போதைய சிக்கலான சூழலில் அரசாங்கப் பக்கத்திலிருந்தே விட்டுக் கொடுப்பும் உறுதியான தீர்மானங்களும் எதிர் பார்க்கப்படுகின்றது. அதுவே சமாதானமா அன்றி மீண்டும் யுத்தமா என்பதைத் தீர்மானிக்கப் போகின்றன. ஆனால் வடக்கு மக்கள் உட்பட நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் யுத்தத்தை அல்ல சமாதானத் தையே வற்புறுத்துகின்றனர் என்பது உறுதியாக உணரப்பட வேண்டியதாகும்.

## விமர்சனத்தைத் தாங்க

11ம் பக்க தொடர்ச்சி.

ஏற்கனவே நான், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தையும் கைலாசபதியையும் பற்றி ஆதாரபூர்வமாக எழுதியதைத் தாங்க முடியாது. "மு. பொன்னம்பலம் சொல்வதெல்லாம் முழுப்பொய்" என்று மிகக் கேவலமாகத் தாக்கி எழுதினார்.

பின்னர் "காலம்" இதழில் இவரது **FIXATIONS** பற்றிச் சொன்னதற்காக "மாக்சிய விரோதி" என்று எழுதினார். பின்னர் இப்போ "பொறியில் அகப்பட்ட பொன்னம்பலம்" என்று எனது நூலை வேறு விமர்சித் துள்ளார். ஆனால் இதில் ஒரு சிறு வித்தியாசம். சிவத்தம்பி அவர்கள் "பொறியில் அகப்பட்ட தேசத்தை" "ஓங்கி உலகளக்கும் ஓர் உன்னத முயற்சி" என்று எழுதியது இவரால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போயிற்று. அதனால் அதை மட்டந் தட்ட வேண்டு மென்ற. மீண்டும் அவரது எளிய தான மன அமைப்பின் துடிப்பு. சற்று வித்தியாசமாக தனக்குத் தெரியாத விஷயங்கள் எல்லாம் தெரிந்த தோரணையில் (CHARLATEN) விமர்சிக்க வைத்துள்ளது.

தமிழில் விமர்சனம் என்று எதையும் துணிந்து எழுதலாம். இன்றைய தலைமுறையின் வாசிப்பின் போதாமையும் மூத்த தலைமுறை யொன்றின் (பேராசிரியர் சிவசேகரம்) கவிதை விமர்சனம் என்றால் வெறும் காழ்ப்புடன் Mechanical ஆகப் பார்த்து எழுதுகின்ற தன்மையும் அதனால் தான் வைக்கும் தரவுகளே தனக்கு எதிராகத் திரும்புவதைப் பற்றி அறியாமையும் நிலவுகிற காலமே இது. இந்த லட்சணத்தில் பேராசிரியர் என்ற பட்டமும் இடதுசாரி என்ற லேபலும் பிற்பலமாக இருக்க. தாம் எழுதுபவற்றை எல்லாம் வாங்கிப் பிரசுரிக்க பத்திரிகைகள் இருக்கும் போது. இத்தகைய சாமான்ய தன்மைகள் தானே அரசாளும் (MEDIOCRITY WILL REIGN), புத்திஜீவித்தனம் என்ற தோற்றத்தில்!"

உதவி ஆசிரியர் இலக்கியம்

## கரு(த்)திட்டம் தோற்கடிப்போம்!

மானுடனே அறிவீர் - மலை
மானுடனே அறிவீர்
நிலம் மீட்கும் காலமிது
நீயறிவீர்

மேல் கொத்மலை எனச் சொல்லி
எம்மை மேய்த்திடவே பார்க்கிறான் -
நம்
இனச்செறிவை
தேய்த்திடவே பார்க்கிறான்

கொத்மலை எனும் பெயரில்
கொடுங்கோலன் வருகிறான் - நாம்
கொண்ட நிலம் அத்தனையும்
குழி பறித்து
குகை தோண்டி
தண்ணீரில் அனுப்புதல் போல்
நம்மினத்தைத்
தாழ்த்திடத்தான் பார்க்கிறான்

வெளிச்சம் தருவோம் என்று -
எம்மை
வெளியேறச் சொல்கிறான்
வீடு தருவோமென்று - எம்மை
வலகி நிற்கச் சொல்கிறான்
காணி தருவோமென்று
கைகழுவப் பார்க்கிறான்
கரு(த்) திட்டம் போட்டு - எம்மை
காடனுப்பப் பார்க்கிறான் - சுடு
காடனுப்பப் பார்க்கிறான்

ஜப்பானின் உதவியோடு -
எம்மண்ணை
சொப்பனக்காடாக்கி - அவன்
சொந்தக்காரனுக்கு
செப்பனிடப் பார்க்கிறான் -
சொர்க்கமாய்
செப்பனிடப் பார்க்கிறான்

இந்த சர்க்காரின் நாடகத்தில்
எம்தலைவன் எம்மையெல்லாம்
கோமாளி வேஷம் கொண்டு
கொடுத்திடத்தான் பார்க்கிறான்- பலி
கொடுத்திடத்தான் பார்க்கிறான்

நாம் போற்றும் நிலமாயும்
போராட்டக் களமாயும் - எமை
மாற்றும் நிலமாயும்
எதிர்காலத்தில்
மார்பு தட்டி எதிரியை
ஓட்டும் நிலமாயும்
கொண்டதுதான்
எங்கள் நிலம்
மாற்றிடுவோம் இவ் யுகத்தை
காத்திடுவோம் எம் நிலத்தை
இழிநிலைத் தலைவர்களை
இகழ்ந்திடுவோம்
இன்று முதல்
பகை வந்து சேர்ந்தாலென்ன
எம்முயிர்க்கு
பாசக்கயிறு வந்து சேர்ந்தாலென்ன
இனியொரு விதி செய்வோம்

இந்நிலைத் தலைமை தம்மை
இழிவுவரச்செய்வோம்
மக்கள் பலம் சேர்த்திடுவோம்
மலையகம் எனும் தேசியம்
மலரும் வரை உயிர்கொடுப்போம்
தவறவே விடமாட்டோம்
தாயகமாய் மாற்றிடுவோம்.

- மலைமகன்-
26.05.2003

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை. கொழும்பு 13.

படிப்பகம்